கல்கி

KALKI 21.5.89 ரூ. 2.





PONDS
POND'S
Sandal Talc
POND'S Sandal Talc
பொன் நகைகள்
மின்னிட.... சந்தன
நறுமணம் கமழ்ந்திட....
இனிய உணர்வுகள் மனதில்
மலர்ந்திடும் கணங்கள். உங்கள்
மேனியில் பொன் நகைகள்
மின்னிட, தூய சந்தனத்தின்
நறுமணம் கமழ்ந்திட இதுவரை
அனுபவித்தறியா உணர்வுகளால்
உள்ளம் பூரிக்கிறது; பெண்மை
உங்களிடம் பூரண பொலிவு
பெறுகிறது.
அரிய நறுமணம்.
மதிப்பில் பொன்னைப்
போல் உயர்ந்தது.
பாண்ட்ஸ்
சாண்டல்
டால்க்

HTA 7023



* பேரணியினூடே பேருந்துகள்...

"போலீஸைக் காப்போம்! துப்பாக்கிகளைக் காப்போம்!"

"நீரைக் காப்போம்; உயிரினங்களைக் காப்போம்" என்று கோஷமிட்டபடி மீனவர் வந்தனர். ஆனால் நமது அரசோ, நீரையும் அதில் வாழும் உயிரினங்களையும் மட்டுமின்றி, மனித உயிர்களையே கூடத் துச்சமாகக் கருதுவதாகத் தெரிகிறது! அதனால்தான் கன்னியாகுமரியில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் கூட இல்லாமல், துப்பாக்கிச் சூடு நடந்து, ஐந்து பேர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள்!

மே முதல் தேதி கன்னியாகுமரியில் நடந்தது என்ன? மீனவருக்கு என்ன அச்சம்? எதற்குப் பேரணி? பொதுக் கூட்டம்?

'கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைந்தால், கழிவு நீர், கடலில் கலக்கும் போது நீர் வாழ் உயிரினங்கள் அழிந்து விடும்' என்று பலர் நம்புகின்றனர். 'தங்கள் வாழ்க்கையே அஸ்தமித்து விடும்' என்று பயப்படுகின்றனர்.

இந்தக் கவலை – பயத்துக்கு ஆதாரமில்லை என்றாலும் அச்சம் நிலவுவது உண்மை.

ஆனால் பொதுவாக பெட்ரோலிய எண்ணெய்க் கப்பல்கள், ஆலைக் கழிவுப் பொருட்கள் ஆகியவற்றிலிருந்து ஆறுகளையும் அவை சங்கமமாகும் கடலையும் அவற்றில் வாழும் உயிரினங்களையும் காக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கத்தான் செய்கிறது.



* கல்வீச்சில் காயமடைந்த சப்-இன்ஸ்பெக்டர் துரைமணி.



* தடியடிப் பிரயோகத்துக்கு ஆளான ஃபாதர் செர்வாஸியஸ்.

அந்த நோக்கில்தான், "நீரைக் காப்போம்; உயிரினங்களைக் காப்போம்" என்று கோஷமிட்டபடி மீனவர் வந்தனர். இந்தியாவின் கிழக்கு, மற்றும் மேற்குக் கடற்கரையோரமாக, இரு பெரும் குழுக்களாகப் பாதயாத்திரையாக வந்தவர்கள், குமரி முனையில் சந்திப்பது, பின்னர் பொதுக் கூட்டம் நடத்துவது என்று ஏற்பாடு.

'பிற்பகல் 3.30 மணி அளவில் பேரணி, கன்னியாகுமரியில் புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளியிலிருந்து புறப்பட்டு அமைதியாக முன்னேறுகிறது. பாதிப் பேருக்கு மேல் பெண்கள்தாம்! ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட அந்தப் பேரணிக்குப் பாதுகாப்பாக வந்தவர்கள் பத்துப் பதினைந்து போலீஸ்காரர்கள் மட்டுமே!



• சேதமடைந்த பேருந்துகளில் ஒன்று.

கடற்கரையில் உறுதிமொழி எடுத்துக் கொண்ட பிறகு, பேரணி திரும்பி வந்து கொண்டிருக்கிறது. சுமார் முக்கால் கிலோ மீட்டருக்கும் மேல் நீளமான பேரணியின் முன் பகுதி பொதுக் கூட்ட மைதானத்தை அடைந்து விடுகிறது. பின்பகுதி காவல் நிலையத்தைக் கடந்து கொண்டிருக்கும் வேளையில்....

ஒரு பேருந்து பேரணியினூடே செல்ல முற்படுகிறது. பேரணியில் இருந்தவர்கள் கைகாட்டி அதனை நிறுத்தச் சொல்லிக் கோருகிறார்கள். ஆனால் ஓட்டுனர் பிடிவாதமாகப் பேரணியினூடே செல்ல முற்படும் போது, பேரணியில் வந்த சிலர் கோபமுற்றுப் பேருந்தைத் தாக்கக் கண்ணாடிகள் நொறுங்குகின்றன.

உடனடியாகப் போலீஸார் காவல் நிலையத்திலிருந்து வெளிப்பட்டுப் பேரணியில் கலந்து கொண்டவர் மீது தடியடிப் பிரயோகம் செய்கின்றனர்.

இதனால் ஆவேசமுற்ற மீனவர் காவல் நிலையத்தைத் திருப்பித் தாக்க, லத்தி சார்ஜ் அதிகரிக்கிறது. எங்கும் "ஐயோ! அம்மா! கர்த்தாவே!" என்ற கூக்குரல். பல பத்திரிகையாளர்களும் தாக்கப்படுகின்றனர். அவர்கள் காமிராக்கள் நொறுக்கப்படுகின்றன.

சமாதானம் செய்ய முயன்ற ஃபாதர் செர்வாஸியஸ் கூடப் போலீஸாரால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டுப் படுகாயமடைகிறார். இதற்குள் சாலையோரமிருந்த் பல பேருந்துகளின் கண்ணாடிகள் மீனவரால் நொறுக்கப்படுகின்றன.

எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, கண்ணீர்க் குண்டுப் பிரயோகம் கூட இல்லாமல், துப்பாக்கிப் பிரயோகம் நடக்கிறது! நான்கு ரவுண்டு போலீஸார் சுட, மக்கள் சிதறி ஓடுகிறார்கள்! குண்டடி பட்டவர்கள் 'ஐயோ'வென்று அலறிச் சாய்கிறார்க்ள்! கல் வீச்சில், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரு கான்ஸ்டபிள்களும் காயமடைகின்றனர்.

அமைதி நிலவுகிறது! சோகமான, வேதனைமிக்க அமைதி!

காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள்.

"பேரணி நடந்து கொண்டிருக்கையில் முன்னால் சென்றவர் செருப்பைப் பின்னால் சென்றவர் இழுத்ததால், அவர்களுக்குள் கோஷ்டி மோதல் ஏற்பட்டுக் கலவரம் மூண்டது; கலவரத்தைக் கட்டுப்படுத்தப் போலீஸ் துப்பாக்கி சூடு நடத்தியது" என்று போலீஸ் தரப்பில் அறிக்கை விடப்படுகிறது! ஆனால் போலீஸ் துறை தன் கடமையைச் செய்ததா? பேரணி நடக்கும்போதும் சம்பவ நேரத்திலும் கன்னியாகுமரி காவல் நிலைய இன்ஸ்பெக்டர் பிரதாப் சிங் அங்கு இல்லை! எல்லாம் முடிந்த பிறகுதான் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் (எஸ்.பி.) நரேந்திரபால் வந்து சேர்கிறார்!

குண்டடிபட்ட ஐந்து பேரையும் மருத்துவமனையில் காணப் பரிதாபமாக இருக்கிறது. கால்களில்தான் சுட வேண்டும் என்பது விதிமுறை. ஆனால் கால்களில் மட்டுமல்ல, ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அப்பாவி ஒருவருக்குத் தோள்பட்டையில் குண்டு துளைத்திருக்கிறது! இன்னொருவருக்குப் பின்புற இடுப்பில் குண்டு பாய்ந்திருக்கிறது! பலர், வட மாநிலங்களிலிருந்து வந்திருப்பவர்கள். வேதனை தாங்காததோடு, மொழி புரியாமலும் அவதிப்படுகிறார்கள். கால்களில் அடி வாங்கிய மீனவர்கள், 'உயிர் தப்பினாலும் இனி கட்டுமரம் ஏறி, கடல் மீது சென்று, வாழ்க்கை நடத்த முடியுமா?' என்ற சந்தேகத்துடன் துயரில் ஆழ்ந்து போயிருக்கிறார்கள்.

தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ஃபாதர் செர்வாஸியஸ் சொல்கிறார்:

"சமாதானப்படுத்த முயன்ற என்னை, ஒரு போலீஸ்காரர் துப்பாக்கியின் 'அடி' பகுதியினால் தலையில் தாக்கினார்! நான் தடுமாறி விழ, என்னைப் பூட்ஸ் காலால் மிதித்து லத்திக் கம்பினால் அடித்தார்! அவர் போன பிறகு இன்னொருவர் வந்து மீண்டும் என்னை அடித்தார்! இத்தனைக்கும் பேரணி கன்வீனர் என்ற 'பேட்ஜ்' வேறு நான் அணிந்திருந்தேன்...! முன் அனுமதி பெற்று நடந்த பேரணி முடியும் வரை, பஸ் ஓடுவதைத் தடை செய்து, பேரணிக்குப் போதிய அளவு போலீஸ் பாதுகாப்பும் அளித்திருந்தால் இப்படியெல்லாம் நேர்ந்திருக்காது.


• ஃபாதர் செர்வாஸியஸ், வரிவரியாகப் போலீஸ் தடியடிகளின் கவடுகளை ரத்தச் சிவப்பில் முதுகில் சுமந்து கொண்டிருக்கிறார்.

போலீஸார் 105 பேர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்! 35 பேரை உள்ளே தள்ளியிருக்கின்றனர்! கடமையைச் சரியாகச் செய்யாத போலீஸ் துறை மீதும், அரசின் மீதும் யார் வழக்குத் தொடுப்பது?

கட்டுரை, படங்கள்:

குளச்சல் இப்ராஹீம்

கல்லூரியைச் சுற்றி:



• கரக கலைவிழாவில் இளங்கோவன் முதல்வருடன்...

கைக்கூலி கைவிட்டோர் கழகம்



• கல்லூரி முதல்வருடன் இளங்கோவன், அப்துல் அலீம். இன்றைய கழகத் தலைவர் ஜியாவுதீன்.

கூத்தாநல்லூரில் லட்சக்கணக்கில் தான் வரதட்சிணை வாங்குவார்களாம். அந்தக்கொடுமையைக்கண்டுமனம்பொறாத இளைஞர் அப்துல் அலீம்,ஜமால் முகம்மது கல்லூரியில் வணிகவியல் இரண்டாம் ஆண்டில் படித்த போது, 'பிரதிபலிப்பு' என்ற தலைப்பில் கையெழுத்து இதழ் ஒன்றை வெளியிட்டார். அதில் ஒரு பெரிய புள்ளி வீட்டுத் திருமணத்தைப் பற்றி எழுதப் போக வம்பு முளைத்து, லாக் அப் வரை போய் — அப்புறம் வழக்கிலிருந்து மீண்டது ஒரு சுவையான அனுபவம்!

அப்துல் அலீம் தொடங்கி வைத்த திருப்பணிதான் 'கைக்கூலி கைவிட்டோர் கழகம்.' திருச்சிராப்பள்ளியிலுள்ள ஜமால் முகம்மது கல்லூரியில் கடந்த ஆறு ஆண்டுகளாக இயங்கி வருகிறது. — சில ஆசிரியர்களும் கூட இந்த அமைப்பில் உறுப்பினர்களாக இருந்து வழிகாட்டுகிறார்கள். ஒரு முன்மாதிரியான பிடிவாதத்தை இளைஞர்களிடையேதோற்றுவிக்கிறார்கள்.கிராமம்கிராமமாகப் போய்ப் பிரசாரங்கள் செய்கிறார்கள். சமயங்களில் வம்பு வழக்குகளிலும் அகப்பட்டுக் கொள்வது தவிர்க்க முடியாததாகி விடுகிறது! இன்று தமிழகத்தின் பல்வேறு இடங்களில் ஆதரவுக் கிளைகளைப் பெற்று, விழிப்புணர்ச்சிக்குப் போராடி வருகிற சங்கத்தின் உறுப்பினராக இருந்தவர்களில் இருபத்திரண்டு பேர் 'கைக்கூலி' பெறாமல் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுஓர் ஆரோக்கியமான புள்ளி விவரம்.

இப்படி வரதட்சிணையை மறுத்துத் திருமணம் செய்து கொள்ளும் உறுப்பினர்களுக்குச் சங்கம் சந்தன மாலை அணிவித்துப் பரிசு கொடுத்துப் பாராட்டுகிறது.

'**அ**து என்ன கைக்கூலி? வரதட்சணைக்குப் புதிய சொல்?' என்று கேட்டால், அதற்கும் சுவையாகப் பதில் தருகிறார், முதல்வர் பேராசிரியர் சி. நயினார் முகம்மது: "தஞ்சாவூர் மாவட்டம் காயல்பட்டினம், இராமனாதபுரம் மாவட்டம் போன்ற பகுதிகளில் திருமண வீட்டில் பணம் தருகிறவர்கள் பெயர் சொல்லிப் பதிவு செய்யும் போது மாப்பிள்ளைப் பையனுக்குக் 'கைக்கூலி' இவ்வளவு ரூபாய் என்று சொல்லியே தான் வரதட்சிணைப் பணத்தைப் பதிவு செய்கிறார்கள். ஆகவே அது புதிய சொல் அல்ல!"

'**கை**க்கூலி கைவிட்டோர் கழகப்' பிரசாரப் பணியில் ஈடுபட்டுள்ள பல இளைஞர்களுள் இளங்கோவன், கரகம், காவடி ஆட்டங்களில் எக்ஸ்பர்ட். சமூகப் பணிக்கான தேசிய இளைஞர் விருது பெற்றவர். சோவியத் யூனியனில் இந்தியக் கலைவிழா நடைபெற்ற போது, "இளைஞர் கரகம் ஆட்டக் குழு"வை அழைத்துப் போய் வெற்றிமுரசு கொட்டிவிட்டு வந்தவர்.

ஆக மொத்தம், 'ஜமால் முகம்மது கல்லூரி ஜமாய்க்கிறது' எனலாம்.

கட்டுரை, படங்கள்: **யெஸ்பால்**



"ஓரங்கட்டி விடுவார்களோ என்ற கவலை எனக்கு இல்லை!"

-ராதிகா பேட்டி

நிருபர்: 'அரசியல் ஒரு சாக்கடை' என்கிற பொதுவான விமர்சனம் பற்றி உங்களுடைய கருத்து என்ன?

ராதிகா: எந்தத் துறையில்தான் கெட்ட அம்சங்கள் இல்லை? தரம் குறைந்து போய் விட்ட, பல துறைகளில் அரசியலும் ஒன்று. அரசியல் என்பது ஏதோ ஒரு தனி நபர் 'ஷோ' இல்லை. அது மாபெரும் விஷயம். எனவே அரசியலைச் சாக்கடை என்கிற விமர்சனத்தை ஒட்டுமொத்தமாய் அப்படியே ஏற்றுக் கொண்டு விட நான் தயாராயில்லை.

நிருபர்: தேர்தலுக்கு முன்பு திடீரென்று அரசியலில் புகுந்து பரபரப்பு ஊட்டினீர்கள். உங்களுக்கு அரசியலில் ஆர்வம் ஏற்பட்டது எப்படி?

ராதிகா: 'எனக்குச் சிறு வயது முதலே அரசியலில் ஆர்வம் உண்டு' என்றெல்லாம் நான் பொய் சொல்ல விரும்பவில்லை. அடிப்படையில் நான் ஒரு சினிமா நடிகை. நான் அரசியல்வாதி இல்லை. இந்தியா என்னுடைய நாடு. நான் இந்த நாட்டுப் பிரஜை. ஒரு சாதாரணப் பிரஜைக்கு எந்த அளவுக்கு அரசியல் ஞானம் இருக்குமோ அந்த அளவு தான் எனக்கும் உள்ளது.

நிருபர்: சாதாரணப் பிரஜை அளவுக்கான அரசியல் அறிவு, எப்படி உங்களை ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்து, பிரசாரம் செய்யுமளவுக்கு ஆட்டிப் படைத்தது?

ராதிகா: தேர்தலுக்கு முன்பு தமிழகத்தின் நிலைமை எத்தனை மோசமாய் இருந்தது என்பது உங்களுக்கே தெரியும். அத்தகைய தொரு சூழ்நிலையில், நான் தமிழ்நாட்டு அரசியலில் நுழைந்து, எனக்குச் சரியென்று பட்ட கருத்தினை மக்களிடையே பிரசாரம் செய்ய விரும்பினேன். எனவேதான் தி. மு. கழகத்தில் சேர்ந்தேன். பிரசாரம் செய்தேன்.

நிருபர்: குறிப்பாகத் தி. மு. க. வில் சேர்ந்ததற்கு என்ன காரணம்? மற்ற கட்சிகளில் ஏற்கெனவே நடிக, நடிகையர் இருந்து, தி. மு. க. வில் அப்படிப் பெயர் சொல்லும்படி யாரும் இல்லாததாலா?

ராதிகா: ஆட்சியில் இருக்கும் கட்சி, மக்களுக்கு எண்ணற்ற நல்ல பணிகளை ஆற்றிட முடியும். மக்கள் அவர்களைத் தேர்ந்தெடுப்பதே அதற்குத்தானே! தமிழ்நாட்டின் அன்றைய சூழ்நிலையில், திறமையான, நிலையான ஆட்சியைத் தரக் கூடியதும், தனிப் பெரும்பான்மை பெறும் நிலையிலிருந்ததும் தி. மு. க. ஒன்றுதான். இக்கருத்தை மக்களிடையில் எடுத்துக் கூற விரும்பியே தி. மு. க. விற்காகப் பிரசாரம் செய்தேன்.

நிருபர்: அப்படியெனில் ஜெயிக்கும்

வாய்ப்பு தி. மு. க. வுக்கு அதிகம் என்கிற கணிப்புத்தான் தி. மு. க. வில் சேரக் காரணமா?

ராதிகா: தமிழ்நாடு, அண்மைக் காலத்தில் இழந்துவிட்ட பெருமைகளைத் திரும்பப் பெற, கலைஞர் செம்மையாய்ப் பணியாற்றும் திறன் படைத்தவர் என்கிற உண்மை, நான் தி. மு. க. வில் சேரக் காரணமாயிருந்தது.

நிருபர்: கலைஞருக்காகத்தான் தி. மு. க. வில் சேர்ந்தீர்களா? தி. மு. க. வின் கொள்கைகள் உங்களைக் கவரவில்லையா?

ராதிகா: தி. மு. க. வையும், கலைஞரையும் நான் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. தவிர, என் தந்தையாரும், கலைஞரும் நெடுங்காலமாக நெருங்கிப் பழகிய நண்பர்கள். இரண்டு குடும்பங்களுமே பல ஆண்டுகளாக நட்புக் கொண்டவை. அடுத்த காரணம், கலைஞர் வசனமெழுதிய படங்களில் நான் நடிக்க வாய்ப்புக் கிடைத்ததால், அவரை அருகில் இருந்து கவனிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவரது நிர்வாகத் திறமை, இலக்கிய அறிவு, செய்நேர்த்தி, சுறுசுறுப்பு, எளிமையாகப் பழகும் விதம் முதலிய பல பண்புகள் என்னைப் பிரமிக்க வைத்தன. இவையனைத்துமே தி. மு. க. வில் சேரக் காரணங்களாய் அமைந்தன.

நிருபர்: தி. மு. க. வின் அமோக வெற்றியில் உங்கள் பங்கு என்ன?


ராதிகா: நான் அடிப்படையில் சினிமா நடிகை; அரசியலில் எனக்கு அதிக ஈடுபாடு இல்லை என்று முன்பே குறிப்பிட்டேன். நான் சினிமா நடிகை என்பதால் எனது அரசியல் பிரவேசமும், பிரசாரமும் அதிகமான அளவில் விளம்பரம் பெறுகின்றன. கடந்த தேர்தலில் என் அரசியல் பணி மிகவும் சொற்பம்தான்.

நிருபர்: தி. மு. க. விலிருந்து எம். ஜி. ஆர். விலக்கப்பட்டார். பின்னர், தி. மு. க. வில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றிருந்த டி. ராஜேந்தர் தேர்தலுக்கு முன்பு ஓரங்கட்டப்பட்டார். அதேபோல உங்களையும் தி. மு. க. ஒதுக்கி வைக்காது என்று நினைக்கிறீர்களா? இத்தகைய அரசியலில் உங்களால் தாக்குப் பிடிக்க முடியுமா?



ராதிகா: எம். ஜி. ஆர். விஷயம் பற்றியும் சரி, டி. ராஜேந்தர் தனிமைப்படுத்தப்பட்டாரா, அதற்கு என்ன காரணம் என்பது பற்றியும் சரி, எனக்குத் தெரியாது. நான் அவைபற்றியெல்லாம்கவலைப்படவில்லை. அதேபோல, தி. மு. கழகத்தில் என்னை ஓரங்கட்டி விடுவார்களோ என்று யாரும் கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை. எனக்கே அந்தக் கவலை கிடையாது. நான் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவள் என்பதைவிட, முக்கியமானதாய்க் கருதும் விஷயம் கலைஞர் குடும்பத்துடன் கொண்டுள்ள நட்பைத்தான். அவர்கள் என் மீது அன்பு காட்டுகிறார்கள். இந்த நட்பு, ஒரு சினிமா நட்சத்திரம் அல்லது அரசியல்வாதி என்ற அளவு கோல்களுக்கு அப்பாற்பட்டது.

நிருபர்: கடந்த தேர்தலில் எந்தத் தொகுதியிலாவது போட்டியிட வேண்டுமென உங்க



ளுக்கு ஆர்வம் இருந்ததா?

ராதிகா: இல்லவே இல்லை.

நிருபர்: தி. மு. கழகத்துக்கு உங்களை எந்தத் தொகுதியிலாவது, யாரையாவது எதிர்த்து நிறுத்தும் எண்ணமிருந்ததா?

ராதிகா: இல்லை!

நிருபர்: தேசிய அளவில் எதிர்க்கட்சிகள் கூட்டணியினால் ராஜீவ் காந்தியை எதிர்த்து வெற்றிபெற முடியுமா?

ராதிகா: எனக்கு அதுபற்றி அதிகமான அறிவு கிடையாது. அதிலே அத்தனை ஆர்வமும் கிடையாது. அதனால் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் பொதுவாக நோக்குமிடத்து இன்றைய தேசிய அரசியல் நியாயமான அரசியலாய்த் தோன்றவில்லை. இதற்கு இன்றைய பத்திரிகைகளும் ஒரு காரணம். இன்று, அரசியல் எப்படித் தரம் தாழ்ந்து போயிருக்கிறதோ, அதேபோலப் பத்திரிகைகளும் தவறான முறையில் நடத்தப்படுகின்றன.

நிருபர்: நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பாராளுமன்றத் தேர்தலின் போது, தி.மு.க.வுக்காகவோ, அல்லது அது இடம் பெற்றுள்ள தேசிய முன்னணிக்காகவோ தேர்தல் பிரசாரம் செய்ய மாட்டீர்கள் போலிருக்கிறதே?


ராதிகா: கடந்த சட்டசபைத் தேர்தலில் தி. மு. க. ஆட்சிக்கு வரவேண்டும் என ஆசைப்பட்டேன். பிரசாரம் செய்தேன். என் ஆசை நிறைவேறி விட்டதில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. அவ்வளவுதான்! அரசியலைப் பொறுத்தவரை என் பணி முடிந்துவிட்டது. பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிரசாரத்துக்குப் போவேன் என்று எனக்குத் தோன்றவில்லை.

நிருபர்: சமீபத்திய சட்டசபை நிகழ்ச்சிகள் பற்றி உங்கள் கருத்து என்ன?


ராதிகா: சட்டசபையின் மரியாதையையும், மதிப்பையும் குறைக்கிற அநாகரிகச் செயல்கள் நடந்தன. அன்றைய தினம் பற்றி நான் பேச விரும்பவில்லை. அன்று சபை நடவடிக்கைகளைப் பார்க்க என் அம்மா போயிருந்தார். சபையில் நடந்தவற்றை எனக்கு முழுவதுமாய்ச் சொன்னார். எனவே, எனக்கு விவரங்கள் நிறையத் தெரியும், என்றாலும், கருத்துச் சொல்லத் துளியும் விருப்பமில்லை.

பேட்டி: எஸ். சந்திரமௌலி

மேலட்டை வண்ணப்படம், புகைப்படங்கள்: யோகா



— அ. தெய்வசிகாமணி



— ஆர். அப்துல் சலாம்.

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



ஏனெனில், காம்ப்ளான், குழந்தைகளுக்கு அன்றடம் தேவைப்படும் அத்யாவசிய ஊட்டச்சத்தை வழங்குகிறது.

சாதாரணமாக 15 அல்லது 16 வயது வரை, குழந்தைகளின் வளர்ச்சிக்கு புரதம், அடிப்படையான ஊட்டச்சத்தாகும். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு இப்போது காம்ப்ளான் மிகமிக அவசியம். புரதச் சத்துக்களிலேயே தலைசிறந்த பால் புரதம் (20%) கொண்டது, காம்ப்ளான். மேலும் 22 ஆதார உணவுச் சத்துக்களும் காம்ப்ளானில் உள்ளன.

காம்ப்ளான் இனிய சுவைகளில் கிடைக்கிறது.



23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்க்கத் தேவையில்லை.

காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு

GX/38/203T ML



இப்படி நடப்பதைத் தவிர்க்க...

ஸ்கூட்டர், மொபெட், மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்கள் கடைப் பிடிக்க வேண்டிய எளிய விதிகள்:

- ஓட்டுனருக்கு மட்டுமின்றி பில்லியனில் அமர்ந்து வருபவருக்கும் ஹெல்மெட் மிக அவசியம். ஹெல்மெட் வெளிர் நிறத்தில் இருத்தல் நல்லது. அதிக உஷ்ணத்தைக் கிரகித்துக் கொள்ளாது என்பதோடு இருட்டில் சற்றுப் பளிச்சென்று தெரியும்.

- சரியான கோணத்தில் அமர்ந்து ஓட்டாவிட்டால் முதுகுவலி அல்லது சுளுக்கு ஏற்பட வாய்ப்பு உண்டு. முதுகு நேராக இருக்க வேண்டும். கைகள் ஹாண்டில் பாரை அழுத்தமாகப் பிடிக்க வேண்டும்.

- மணிக்கு ஐம்பது கி. மீ. வேகத்தைத் தாண்டவே கூடாது.

- கூடியவரை, சாலையில் பெயிண்ட் அடித்துள்ள பகுதிகள் மீது வாகனத்தை ஓட்டாதீர்கள். அங்கு வழுக்கும் வாய்ப்பு உண்டு.

- உங்களுக்கு முன் செல்லும் வாகனத்துக்கும் உங்கள் வண்டிக்கும் இடையே போதுமான இடைவெளி இருக்க வேண்டும். 'இரண்டு வினாடி விதி'யைக் கடைப்பிடித்தல் நல்லது. உங்களுக்கு முன்புள்ள வாகனம் ஒரு குறிப்பிட்ட கட்டத்தைத் தாண்டும் பொழுது 'ஓராயிரத்து ஒன்று, ஓராயிரத்து இரண்டு' என்று மனத்துக்குள் கூறுங்கள். இதைக் கூற உங்களுக்கு இரண்டு வினாடிகள் ஆகும். இவ்வாறு கூறி முடிப்பதற்குள் நீங்கள் அந்தக் குறிப்பிட்ட கட்டத்தைத் தாண்டிவிடக் கூடாது. அப்படித் தாண்டிவிட்டால் உங்களுக்கும், உங்களுக்கு முன்பு செல்லும் வாகனத்துக்கும் இடையே போதுமான இடைவெளி இல்லை என்று பொருள்!

- வேண்டுமென்றே அலட்டலாகச் சிலர் உங்களை முந்திக் கொண்டு போனால் கோபத்துடன் வேகத்தை அதிகப்படுத்தி மீண்டும் அவரை முந்த முயலாதீர்கள்.

- சாலை விதிகளைப் புரிந்து கொண்டு கடைப்பிடியுங்கள்.


- இரவில் ஓட்டும்போது ஹெட் லைட், பிரேக் லைட் சரியாக எரிகின்றனவா எனப் பரிசோதித்த பிறகு கிளம்புங்கள். வெளிர் நிறத்தில் ஆடைகள் அணிந்தால் இருண்ட பகுதிகளிலும் உங்களைப் பிறரால் சிரமமின்றிப் பார்க்க முடியும்.


- மழைக் காலத்தில் ரெயின் கோட் தயாராக வைத்திருப்பதுடன், வண்டியை மெதுவாக ஓட்டிச் செல்லுங்கள். 'இலேசான மழைதானே, வலுப்பதற்குள் போய்விடலாம்' என்று வேகமாக ஓட்டாதீர்கள். இலேசான தூறலின் போதுதான் இரண்டு சக்கர வாகனங்கள் வழுக்கித் தடம் புரள வாய்ப்பு அதிகம்.


- பெட்ரோல் போடும் போதெல்லாம் கூடவே கிளச், பிரேக், விளக்குகள், ஹார்ன் ஆகியவை சரியாக இயங்குகின்றனவா, சக்கரங்களின் காற்றழுத்தம் சரியாக உள்ளதா என்று சோதித்துப் பாருங்கள். ரியர் வியூ கண்ணாடியைச் சரியான கோணத்துக்குத் திருப்பி வைத்துக் கொள்ளுங்கள்.

நன்றி: Loss Prevention Association of India Ltd.




மாட்டுத் தீவன எந்திரம்
அடேடங்கப்பா!.. நம்மையே தீவனமா அரைச்சுடும் போலிருக்கே!
ஜாக்கர்


என்ன, புதுக் கணக்குப் புள்ளே! கணக்கெல்லாம் அட்ஜஸ்ட் பண்ணிச் சொல்லிடுவீங்க இல்லியா?
தலைமை கணக்குத் தணிக்கை அதிகாரி யின் போஃபர்ஸ் பற்றிய அறிக்கை


வாங்க, வாங்க!.. வகை வகையா விஷங்க இருக்கு!.. ஆளுக்கு ஒண்ணு எடுத்துக்குங்க!
காளிமுத்து
நல்லசாமி



கல்கி

1989 மே 21
மலர் 47 இதழ் 42
சுக்ல வைகாசி 8



நடமாடும் தெய்வம்

தெய்வத்தை நாம் நேரில் பார்த்ததில்லை. ஆனால் தெய்விக குணங்களை உடைய ஒருவரைப் பார்க்க நேரும் போது, 'ஓ! கடவுள் இத்தன்மையராகத்தான் இருப்பார் போலும்!' என்று எண்ணுகிறோம். 'தெய்வத்தன்மை உடைய இவரைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்ததே' என்று மெய்சிலிர்த்துப் போகிறோம். அப்படிப்பட்ட ஒரு நடமாடும் தெய்வம், நம்மிடையே இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் காஞ்சி முனிவர்.

''ஜகத்குரு'' என்ற பட்டத்தைச் சுமப்பவர் அவர். இதைவிடப் பெரியதான ஒரு விருது இருக்க முடியுமா என்ன? ஆயினும் அவரைவிட அடக்கமான ஒரு மனிதரைப் பார்க்க முடியுமா? காஞ்சி காமகோடி பீடத்தின் அதிபதியாக நேற்று வரை விளங்கி, சீலம் மிக்க சீடரை உருவாக்கி, அவரிடம் பொறுப்பை ஒப்படைத்து, இன்று ஒதுங்கியிருப்பவர் பரமாச்சார்யாள். பதவி வகித்த போதே தாமரை இலை நீராகத்தான் அவர் வாழ்ந்து காட்டினார். துறவு மனப்பான்மை என்பது உடையில் மட்டுமில்லை. உள்ளத்தில் ஏற்பட வேண்டிய ஒன்று. ''ராஜரிஷி'' என்று பெயர் பெற்றாரல்லவா ஜனகர்! ''அரியாசனத்தில் ஜனக மகாராஜர்'' என்று கவர்னர் ஜெனரல் ராஜாஜியைக் குறிப்பிட்டாரல்லவா கல்கி! இன்றையத் தலைவர்கள் இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும். நாமும் இத்தகைய அடக்கத்தையும் பற்றின்மையையும் நமது வாழ்வில் பெற முயற்சி செய்ய வேண்டும்.

'அறிவு தேவைதான்; 'ஆனால் பக்தி இல்லாத ஞானம் தூசுக்குச் சமமானது' என்பதை உணர்த்துகிறார் காஞ்சி முனிவர். உலகிலுள்ள ஞானத்தையெல்லாம் கரைத்துக் குடித்தவரான அவர், பீடாதிபதியாக இருந்து செய்த பூஜைகள் கணக்கிலடங்கா. மேற்கொண்ட பாதயாத்திரைகள்; தரிசித்த தலங்கள்; மக்களை ஊக்குவித்து, அவர்கள் மூலம் புனருத்தாரணம் செய்த கோயில், குளங்கள் எல்லாம் பக்தியின் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்தும். இதனால்தான், ''மதச் சார்பின்மை என்பது மதத்தை அரசியலிலிருந்து ஒதுக்குவதாக ஆகிவிடக் கூடாது; எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் பக்தியை வளர்ப்பதாக அமைய வேண்டும்'' என்று காந்திஜி வலியுறுத்தினார். மதத்தை ஒதுக்கிய அரசியல், மதம் பிடித்த அரசியலாகி விடுவதைக் காண்கிறோம்.

எளிமை, எளிய வாழ்க்கை என்பதற்குக் காஞ்சி முனிவரைவிடச் சிறந்த எடுத்துக்காட்டாக யாரைக் குறிப்பிட முடியும்? ஒரு பிடி அவல் பொரியில் சிறிதளவு மோர் கலந்து உண்டு வாழ்ந்து வருகிறவர் அவர். அந்த அளவுக்கு நாம் கட்டுப்பாட்டுடன் வாழ முடியாவிட்டாலும், தேவைகளைக் குறைத்துக் கொண்டு, அதன் மூலம் மிச்சமாகும் பொருளைப் பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும்; நமது ஓய்வு நேரத்தையும் பிறருக்கு உதவப் பயன்படுத்த வேண்டும் என்பது ஆச்சார்யாளின் அருளுரை. 'இதைவிட மன நிறைவும் ஆனந்தமும் தருவது வேறில்லை' என்கிறார். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் போலி சோஷலிஸமல்ல இது. காந்திஜி வகுத்துத் தந்த 'தர்மகர்த்தா முறை' என்ற மெய்யான சோஷலிஸம்தான் காஞ்சி முனிவர் கூறுவதும்.

நீதி என்பது வேறு, அறம் என்பது வேறு. இரண்டும் முக்கியமானவை. சட்டப்படி ஒருவன் நடந்து கொள்கிறானா என்பதை நீதிமன்றம் கண்காணிக்கலாம். ஆனால் அறத்தின் காவலன் மனச்சாட்சி மட்டுமே! வள்ளுவரின் அறத்துப்பால் வகுத்துத் தரும் குணநலன்களையெல்லாம் உள்ளடக்கிய வார்த்தையாக 'தர்மம்' என்பதனைச் சொல்கிறார் பரமாச்சார்யாள். அரசியலிலும் அன்றாட வாழ்க்கையிலும் தவறு செய்பவர்கள், ''சட்டப்படி ஒரு தவறுமில்லை'' என்று சமாதானம் சொல்வார்கள். 'தர்மம் தவறினோமா?' என்று சிந்திப்பதில்லை. அங்கேதான் கோளாறு!

''பகைவனுக்கு அருள்வாய்'' என்றான் பாரதி. இதுவும் சாந்நியம்தான். ஆனால் பகை உணர்வு என்பதாக மனத்தில் ஒன்று இருந்தாலல்லவா 'பகைவனுக்கு அருள்வது' என்ற செயல் எழுகிறது! 96 வயது முடிந்து 97 - இல் அடியெடுத்து வைக்கும் காஞ்சி முனிவரின் தெளிந்த உள்ளத்தில் பகை உணர்வு ஏது? அதனால் நடமாடும் தெய்வமாக விளங்கும் அவரிடமிருந்து அமுதமான அருள் சுரந்து, சர்வ ஜீவ ராசிகளிடமும் பரவுகிறது. அந்த அன்பிலே திளைத்து நம் தலைவர்களும், நாமும், நம் தேசமும் நலம் பெற, வைகாசி அனுஷமாம் (மே 21) அவர் பிறந்த தினத்தில் அவரை வணங்குவோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.

டீ. வி. வீடியோ பக்கங்கள் :

டீ.வி. மெகானிக் கேட்டார்: "என்ன டிபன்?"

"தள்ளி உட்கார்!"

●● என் ஐந்து வயதுப் பெண், பக்கத்து வீட்டுப் பெண் குழந்தையுடன் சோபாவில் நெருக்கியடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். டீ. வி. விளம்பரங்கள் வந்து கொண்டிருந்தன. குடும்பக்கட்டுப்பாடு பற்றிய விளம்பரம் ஒன்றில் "இரண்டு குழந்தைகளுக்கு இடையே போதிய இடைவெளி வேண்டும்" என்று சொல்லவும், என் பெண், பக்கத்து வீட்டுக் குழந்தையை, "தள்ளி உட்கார், டீ.வி.யில் சொல்றாங்க இல்ல!" என்று விரட்டினாளே பார்க்கலாம்!

— தி. ஆறுமுகசாமி, சிறுமுகை.

மினி மியூசிக் டைரக்டர்

●● சமையல் அறையில் காய் நறுக்கிக் கொண்டே லேசாக ஒரு பாடலை முணுமுணுத்தேன். அப்போது என் மூன்று வயது மகள் வந்து இரண்டு கைகளையும் மேலும் கீழுமாக அசைத்துக் கொண்டிருந்தாள். முதலில் எனக்குப் புரியவில்லை. டீ.வி. மெல்லிசை நிகழ்ச்சிகளில் மியூசிக் டைரக்டர்கள் கையசைப்பதைப் பார்த்து விட்டு யார் பாடினாலும் அப்படிக் கையசைக்க வேண்டும் என்று குழந்தை நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதைக் கொஞ்ச நேரங் கழித்துத்தான் உணர்ந்து கொண்டேன்!

— ப. பூங்கோதை, கோவை.

சூப்பர் மெகானிக்

●● ஸெகன்ட்—ஹான்ட் டீ.வி. ஒன்று வாங்கினோம். ஒரு மாதம் கழித்துப் படம் மங்கலாகத் தெரிந்தது. "நண்பர் மூலம் பிரைவேட் மெகானிக்கை வரவழைத்தோம். எங்கள் டீ.வி.யில்தான் அவர் ப்ராக்டிகல் கற்றுக் கொண்டார். வாரத்தில் நான்கு நாள் சொந்தக்காரர் மாதிரி வந்து போய்க் கொண்டிருந்தார். சீக்கிரமே 'என்ன டிபன்?' என்று சௌஜன்யமாக விசாரிக்கும் அளவிற்குத் தேறி விட்டார். அரட்டை அடித்து விட்டுப் போகுமுன் காஷுவலாக குடும்ப டாக்டர் போல் டீ.வி.யை செக்கப் செய்வார். இரண்டு மாதத்தில் முந்நூறு ரூபாயை விழுங்கின பிறகு, ஒருநாள் திடீரென்று, ஈ.எஸ்.டி. டிரான்ஸ்ஃபார்மர் மாற்றினால் பிரமாதமாக ஆகி விடும் என்று ஒரு இருநூறு ரூபாய் வாங்கிக் கொண்டு (பாவம், என்ன அவசரச் செலவோ!) பத்து நாள் கழித்து வந்து மாற்றினார்.


சும்மா சொல்லக் கூடாது... ஓரளவு முன்னேற்றம் இருந்தது! ஆனால், மறுநாளே படம் வளைந்து ஆடத் தொடங்கியது. என்னென்னவோ செய்து பார்த்துப் பின் பக்கப் பலகையை நிரந்தரமாகக் கழற்றி வைத்து, ஹால் ஃபேனை முழு வேகத்தில் சுழல விட்டார். ஆட்டம் நின்றது. முகத்தில் பெருமிதம் பொங்க, புது டிரான்ஸ்ஃபார்மர் ஸெட் ஆகும் வரை அப்படித்தான் இருக்கும்... நான் ரிப்பேர் பார்த்த ஒரு வீட்டில் (அட, இவர் இன்னொரு டீ.வி. கூடப் பார்த்திருக்கிறாரா... எமகாதகர்!) டீ.வி.க்காக ஒரு குட்டி டேபிள் ஃபேனையே வைத்திருக்கிறார்கள் என்றார்.

மார்கழிக் குளிரிலும், ஃபேனை ஓட விட்டு நாங்கள் குளிர் ஜுரக்காரர்கள் போல் போர்த்திக் கொண்டு டீ.வி. பார்த்தோம். வீட்டிற்கு வரும் சொந்தக்காரர்கள் எங்களை ஒரு மாதிரி பார்த்தார்கள்.

கொஞ்ச நாள்தான்! இந்த ஸெட்—அப் டீ.வி.க்குப் பழகிப் போய் மறுபடியும் ஆடத் துவங்கியது. இப்போது மெகானிக்கைக் கூப்பிடவில்லை. (ஏ.ஸி. பண்ண வேண்டும் என்று சொல்லி விட்டால்?) நாங்களே ஒரு புது டெக்னிக் கண்டுபிடித்தோம். ஒரு விசிறி எடுத்து டீ.வி.யின் பின்பக்கம் விசிறினால் நின்று விடும். அப்புறம் சிறிது நேரம் கழித்து மூட் வந்து மறுபடி ஆடும்! சில சமயம் ஆடத் துவங்கும்போதே "எடு விசிறிக் கட்டையை!" என்று குரல் கொடுத்தாலே அடங்கி விடும்! அப்படி ஒரு அன்யோன்யம்!

போகப் போகப் பக்கத்தில் ஒரு ஸ்டூல் போட்டு, ஷிஃப்டு முறையில் ஒருவர் மாற்றி ஒருவர் விசிற வேண்டியதாயிற்று. கடைசியாக, லோன் போட்டு புது கலர் டீ.வி. வாங்கி விட்டோம். பழசை விற்க மனமின்றி வைத்திருக்கிறோம். இப்போதும் அந்தப் பழைய டீ.வி.யைப் பார்த்தால் கண்ணில் ஈரம் படரத்தான் செய்கிறது.

— ஆர். ராஜாராம், சென்னை — 28.



ஆன்டன்னாவில் கழுகு!

●● "கண்மணிப் பூங்கா" பார்க்க என் வீட்டில் எல்லோரும் அமர்ந்திருந்தனர். டீ.வி.யை "ஆன்" செய்ததும், படம் தெளிவில்லாததைக் கண்டு, மாடிக்குச் சென்று

ஆன்டென்னாவைச் சரி செய்து விட்டு வரலாம் என்று போனேன். ஆன்டென்னா மீது ஒரு காகம் அமர்ந்து ஆட்டிக் கொண்டிருந்தது. அதைத் துரத்தி விட்டுக் கீழே வந்தேன். சிறிது நேரத்தில் திடீரென மீண்டும் படம் சரியாகத் தெரியாமல் போகவே, காகம் மறுபடி அமர்ந்து விட்டதோ என்று நினைத்து மாடிக்குச் சென்றால் ஆன்டென்னா மேல் கழுகு ஒன்று அமர்ந்திருந்தது! நான் எத்தனை துரத்தியும் அது போகவில்லை. உதவிக்குப் பலரை அழைத்தேன். கழுகை விரட்டி விட்டுக் கீழே வந்தோம். கண்மணிப் பூங்காவில் ஒரு குழந்தை,

"கழுகு வந்து காகம் போகக் குருவி வந்து கழுகு போகக் கழுத்து நீண்ட நாரை வந்து, அழகாய் அமர்ந்து கொண்டதாம்!"— என்று பாடிக் கொண்டிருந்தது.

— வெ. சந்திரசேகர், கோவை — 4.



இரு முறை வழிந்து...

oo ஞாயிற்றுக் கிழமையன்று என் உறவினர்கள் ஊரிலிருந்து வந்திருந்தார்கள். வீடியோவில் பழைய படம் பார்க்க வேண்டும் என்று என் அத்தை ஆசைப்பட்டாள். நான் ஊரெல்லாம் சுற்றிக் கடைசியில் "இரு கோடுகள்" கேஸட் கொண்டு வந்தேன். மத்தியானம் எல்லோரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வீடியோவில் 'இரு கோடுகள்' பார்த்து முடித்தோம். காப்பி சாப்பிடும் பொழுது பக்கத்து வீட்டுப் பெண் வந்து, என் தாயிடம், "எப்படி இருந்தது 'இரு கோடுகள்' சினிமா?" என்றாள். என் தாய் "உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள். அவள் ஒன்றும் புரியாதவளாக, "இன்றைய நேஷனல் ப்ரோகராமில் இரு கோடுகள் போட்டார்களே" என்று சொல்லவும் நான் அசடு வழியவும் சரியாக இருந்தது. அதோடு கதை முடியவில்லை! சற்று நேரம் சென்று வி.ஸி. ஆரைச் சோதித்த போது, வி.ஸி. ஆர் கனெக்ஷனே டீவிக்குத் தரப்படவில்லை என்பதைக் கண்டேன்! நாங்கள் பார்த்தது டீவி புரோகிராமேதான்! விஷயம் பரவ, இரு கோடுகளுக்காக இரண்டாவது முறையாக வழிய நேர்ந்தது!

— ஜி. மலையப்பன், பெங்களூர்.

கண்ணுக்குத் தெரியும் தவறுகள்

oo சென்னைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நாடகங்களில் 'கண்ணுக்குத் தெரியும் தவறுகள்' இடம் பெறுகின்றன. உதாரணமாகப் பெரும்பாலான நாடகங்கள் ஒரு வீட்டிற்குள் நடைபெறுவதைப் போன்று காட்டப்படுகின்றன. ஆனால் அந்த வீடுகளுக்குக் கதவே இருப்பதில்லை. வீட்டின் நிலைவாசப்படிக் கதவு இருக்குமிடத்தில் ஒரு மிகப் பெரிய கட்டை இருக்கிறது. நாடகத்தில் வீட்டில் நுழைவது போன்ற காட்சியில் உள்ளே நுழைபவர்கள் ஒரு சிறிய 'ஹை-ஜம்ப்' செய்துதான் ஹாலுக்குள் நுழைய வேண்டும். சில நாடகங்களில் ஹாலுக்கு நடுவே மாடிப்படி போன்ற அமைப்பும் அதன் மேல் ஓர் அறையும் இருப்பதாகக் காட்டப்படும். ஆனால் அந்த மாடி அறைக்குச் செல்ல நான்கு அல்லது ஆறு படிகள்தாம் இருக்கும்! ஒயர் கனெக்ஷன் இல்லாத டெலிபோன், டீ.வி. போன்றவற்றை நமது சென்னைத் தொலைக்காட்சியின் நாடகங்களில் மட்டுமே காணலாம்.

— ஆர். சுதர்சன், சென்னை — 61.



மருமானின் வால்தனம்!

oo வெளியே போயிருந்த நான் சித்ரஹார் பார்க்க வேண்டி அவசரமாக வீடு திரும்பினேன். நிகழ்ச்சி துவங்கி, ராஜேஷ் கன்னா, ஷர்மிளா டாகூரை நோக்கிப் பாடிக் கொண்டிருந்தார். ஆனால் அதிசயம்! மிக ஸ்பஷ்டமாகத் தமிழில் 'அமுதும் தேனும் எதற்கு? நீ அருகினில் இருக்கையிலே எனக்கு!' என்று பாடிக் கொண்டிருந்தார்! குரல் சீர்காழியுடையது! அது எப்படி சித்ரஹாரில்? சரி, டீ.வி. நிலையத்தில் ஏதோ குளறுபடி என்று முடிவுக்கு வந்தேன். பிறகு தான் புரிந்தது, ஊரிலிருந்து வந்த என் மாமா பையனின் வால்தனம்! அவன் ஸவுண்ட் இன்றி டீ.வி.யை ஆன் செய்து விட்டு, டேப்ரிகார்டரை மறைவாக வைத்துக் காஸெட்டை ஓட விட்டிருந்தான்!

— ரா. ர. தமன், சென்னை — 24.

விற்பதற்கு ஒரு வழி!

oo உதவியாளர்: கோவை காயத்ரி, மதுரை சித்ரா, கொடைக்கானல் ஜானகி, நெல்லை கல்யாணி, திருச்செந்தூர் கவிதா இவர்களெல்லாம்....

இயக்குநர்: சென்ற வார நாடகத்தைப் பாராட்டுகிறார்களா?

உதவியாளர்: இல்லை, 'தங்களது டீ.வி.க்களை விற்பதற்கு ஏற்பாடு செய்து தர முடியுமா?' என்று கேட்டிருக்கிறார்கள்.

— எஸ். மங்கை, பாளையங்கோட்டை.

பானி மிக்ஸ்®

உடனடியாகத் தயாரிக்கக்கூடிய பாரிட்ஜ்.

தானியங்கள், பழங்கள், முந்திரி கலந்த ஆகாரம்.

பானி மிக்ஸ் கோதுமை, சோளம், அரிசி, தேங்காய், ஆப்பிள், பேரிச்சை, திராட்சை மற்றும் முந்திரி போன்ற வையிலான ஊட்டமிகு, எளிதில் ஜீரணிக்கக்கூடிய பாரிட்ஜ் ஆகாரம். குடும்பத்தினருக்கு காலைச் சிற்றுண்டிக்கும் மாலையில் பள்ளி அல்லது அலுவலக வேலைகளுக்குப் பின் அளிக்கவும் உகந்தது. முதியோருக்கும் நோயிலிருந்து குணம் அடைவோர்க்கும் ஏற்ற உணவு.



நிமிடங்களில் தயார்


பானி மிக்ஸை விரைவாகவும், எளிதாகவும் தயாரிக்கலாம்.



கிண்ணத்தில் தேவையான பானி மிக்ஸை எடுக்கவும்.



அதோடு முன்னமே கொதித்த பாலை போதுமான அளவு மெதுவாகச் சேர்க்கவும்.



மிருதுவான கிரீம் போன்ற பாரிட்ஜ் ஆகாரம் பெற மெதுவாகக் கலக்கவும்.



சுவையான ஒவ்வொரு ஸ்பூன் பாரிட்ஜ் உணவையும் உங்கள் குடும்பத்தினர் சுவைத்து மகிழ்வார்கள்.

பானி மிக்ஸ்®

இந்தியாவிலேயே முதன் முறையாக!



வழங்குவோர்: க்ளிண்டியா லிமிடெட் (முன்னாள் க்ளாக்ஸோ)

குடும்ப உணவுகளில் நம்பிக்கைக்கு உகந்த பெயர்

நடந்து கொண்டே சிரிக்கிறேன்!

மஞ்சள் பக்கங்களின் மகிமை!

காயத்ரி அழகான பெண். அழகுகேற்ற படிப்பு. படிப்புக்கேற்ற புத்திசாலித்தனம். இனிமையான சாரீரம். சாரீரத்திகேற்ற பாட்டு. அவள் பாடத் தொடங்கினால் குயில் அவமானத்தால் வாயை மூடிகொண்டு விடும்!

இத்தனை இருந்தென்ன? அவள் கல்யாணம் தட்டிக் கொண்டே போகிறதே அவளுக்கேற்ற கணவன் கிடைக்கவில்லையே என்று பெற்றோர் ஏங்காத நாளில்லை. அதற்காக அவர்கள் வேண்டாத தெய்வமில்லை; தேடாத இடமில்லை அலையாத ஊரில்லை.

கடைசியில் கடவுள் கண் திறந்தார். பெற்றோர் விரும்பியபடியே அருமையான



வரன் குதிர்ந்து விட்டது. காயத்ரி கனவு கண்ட அதே மாதிரியான காளை கிடைத்து விட்டான். எடுப்பான தோற்றம். எம். பி. ஏ. படித்தவன். கை நிறையச் சம்பளம். பெயர் விஜயகுமார். குவைத்தில் உத்தியோகம். குபேரனாகக் கொழிக்கிறான்.

ஆனால்... ஆனால்..., கைக் கெட்டியது வாய்க்கு எட்டாமல் போய் விடுமோ? கல்யாணம் நடைபெறாதோ? மணமகன் கடினமான கண்டிஷன் ஒன்று போட்டு விட்டாரே... இன்னும் பதினைந்து நாட்களுக்குள் அவர் குவைத்துக்குத் திரும்பியாக வேண்டும். அதற்குள் திருமணத்தை முடிக்க வேண்டும்! கங்காதரன் தவித்துப் போனார். அவர் மனைவி துடித்துப் போனாள். காயத்ரி பித்துப் பிடித்தவள் போலானாள்.

இரண்டு வாரத்தில் கல்யாணம் நடத்துவதா? இந்தக் காலத்தில், அதுவும் பட்டணத்தில் இது முடிகிற காரியமா? முகூர்த்தம் தகையுமா? நாள் கிடைத்தாலும் கல்யாண மண்டபம் கிடைக்குமா? மண்டபம் கிடைத்தாலும், சமையல்காரர் லேசில் கிடைத்து விடுவாரா? நாதஸ்வரம், ஜவுளி... ஒன்றன் பின் ஒன்றாகக் கல்யாணத்துக்கான தேவைகள் கங்காதரன் மனக்கண் முன் கியூ வரிசையில் நின்றன. கங்காதரன் கதி கலங்கித்தான் போனார். திடீரென்று மேஜை மீதிருந்த டெலிஃபோன் டைரக்டரி அவர் கண்ணில் பட்டது. வேளை வந்து விட்டதே, படாமல் இருக்குமா? அதிலிருந்த மஞ்சள் பக்கங்கள் அவரை நோக்கி "மங்களம் மங்களம்" என்று கூறுவது போல் அவருக்குத் தோன்றியது!

முகத்தில் மகிழ்ச்சி பொங்க, உள்ளத்தில் நம்பிக்கை துள்ள, அவசர அவசரமாக, மஞ்சள் பக்கங்களைப் புரட்டினார் கங்காதரன். 'K' பகுதியில் தேடினார். அவர் தேடி


மெரீனா

கலர் டீ.வி. பரிசு!

இந்த இதழில் 12—13—ம் பக்கங்களில் வெளியாகியுள்ளவை போல் குபீர்ச் சிரிப்பை வரவழைக்கும் டீ. வி. அல்லது விடியோ தொடர்பான சம்பவங்களை எழுதியனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு ரூ. 25. தவிர, பிரசுரமாகும் அனைத்துக்கும் வரிசை எண் தரப்பட்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு குலுக்கல் முறையில் ஒருவருக்குக் கலர் டீ. வி. பரிசு!

நீங்கள் எழுதும் சிரிப்புத் துணுக்கு அல்லது விமர்சனத்துக்கு மேல்புறம் மிகச் சமீபத்திய கல்கி இதழின் தலையங்கப் பக்கத்தில் உள்ள தேதிப் பகுதி (மூன்று வரிகள்)யை மட்டும் வெட்டி எடுத்து ஒட்டியனுப்ப வேண்டும்.

— ஆசிரியர்.



"உங்களுக்குள் சண்டையே வந்ததில்லையாமே?"

"ஆமாங்க... என் மனைவி சுராத்தேலே பிளாக் பெல்ட்டுங்க!"


— நாகை 'கவின்'

யது இதோ கிடைத்து விட்டது. தான் காண்பது உண்மைதானா? கல்யாண மண்டபங்கள். ஆகா! கண்களை நம்ப முடியவில்லையே! குதூகலத்துடன் சுழற்றினார் உரிய எண்களை. அவர் கேட்ட தேதியில் அந்த மண்டபம் காலியாக இருந்ததாகக் கூறினார் மானேஜர்! உண்மையாகவா? இப்போது காதுகளையும் நம்பவே முடியவில்லை! 'ஆண்டவா உன் கருணையே கருணை!' அவரையும் அறியாமல் உரக்கக் கத்தி விட்டார். "இன்னும் அரை மணியில் நேரில் வந்து அட்வான்ஸ் கொடுக்கறேன். வேறு யாருக்கும் கொடுத்து விடாதீர்கள், ப்ளீஸ்" குழைந்தார், காலில் விழாத குறையாக. மறுமுனையில் மண்டப மானேஜர், அருள் கரம் காட்டி, அபயமளித்தார். 'யாமிருக்க, பயமேன்!'

அடுத்தபடி சாப்பாடு. பரபரப்புடன் 'C' பகுதியைப் புரட்டினார் கங்காதரன். இதோ... 'கேட்டரிங்'! கண்ணில் நீர் பனித்தது. நாக்கில் நீர் சுரந்தது! 'எந்த இடத்தில், எப்போது, எத்தனை பேருக்கு, எத்தனை டிபன், சாப்பாடு? கொண்டு வந்து பரிமாறி உபசரிக்கக் காத்திருக்கிறோம்' என்று போனில் குரல் ஒலித்தது! பேசி முடித்து நிம்மதிப் பெருமூச்சு விட்டார் கங்காதரன்.

அப்பாடி! எத்தனை பெரிய காரியம் எத்தனை எளிதில் முடிந்து விட்டது. இடியாகத் தாக்கிய பிரச்னை பொடியாகி விட்டதே! காயத்ரியின் கழுத்தில் மஞ்சள் கயிறு ஏறுவதற்குக் காரணமாயிருந்த மஞ்சள் பக்கங்களுக்கு முத்தம் கொடுத்தார் கங்காதரன்.

"ராத்திரி புத்தகம் படிச்சுண்டே தூங்கிப் போனா, காலையில் அதுக்கு முத்தம் குடுத்துண்டேதான் எழுந்துருக்கணுமா? காப்பி ஆறிப் போறது; சீக்கிரம் பல் விளக்கிட்டு வாங்கோ!" என்று மனைவியின் குரல் அதட்டலாக ஒலித்தது. "கல்யாணக் காரியம் ஏகப்பட்டது இருக்கு; பொண்ணு கழுத்திலே மூணு முடிச்சு விழுந்தப்புறம் நிறைய தூங்கலாம்!"



காலைப் பத்திரிகையில் கெட்டிட் மஞ்சள் பக்கங்களுக்கு விளம்பர ஆதரவு நாடி வெளியாகியிருந்த அரைப் பக்க விளம்பரத்தைப் பார்த்த நினைவோடு நான் நடந்து சென்ற போது, எனது கற்பனை என் அனுமதியில்லாமல் 'ஜாகிங்' செய்ய ஆரம்பித்து விட்டது!

தொலைபேசி டைரக்டரியில் உள்ள மஞ்சள் பக்க விளம்பரங்களை பாப்புலராக்குவதற்காக விளம்பரம் செய்யப்படுகிறது. விளம்பரத்துக்கு விளம்பரம் போதுமா? மஞ்சள் பக்கங்களை மேலும் சுவையுள்ளதாக ஆக்கவும், விளம்பரதாரர்களை அதிகமாகக் கவரவும் அவற்றில் ஜோக்குகளும் சினிமா கிசுகிசுக்களும் இனி சேர்க்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

சினி ஜூஸ்

OO பாரதிராஜாவின் 'என் உயிர்த் தோழன்' படத்தில் அறிமுகமாகும் ஹீரோ பாரி. முழுப் பெயர் பாரி வள்ளல். கோவையிலிருந்து கோடம்பாக்கத்துக்கு லேட்டஸ்ட் இறக்குமதி. பள்ளிப் படிப்பு முடிந்ததும், போட்டோகிராபியைத் தொழிலாக்கிக் கொண்டிருந்த இவர், சினிமா



* பாரி

வில் நுழையும் ஆசையுடன் சென்னை வந்து, சினிமாக் கம்பெனிகளின் படிக்கட்டுகளில் ஏறி இறங்கினார். அதிர்ஷ்டம் பாரதிராஜா உருவில் வந்தது. நேர்முகத் தேர்விலும், மேக்கப் டெஸ்டிலும், கேமரா டெஸ்ட்டிலும் தேறி, வில்லனிக் ஹீரோவான 'தர்மா' பாத்திரத்தில் நடிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

OO படத்திலிருக்கிற ஆக்ஷன் ஹீரோவை அடையாளம் தெரிகிறதா? 1973 – இல் மர்மமான முறையில் மறைந்த குங்ஃபூ மன்னன் புரூஸ்லியின் மகன் பிராண்டன் லீ. இவர் நடித்த 'லேகஸி ஆஃப் ரேஜ்' படம் இப்போது ஓடிக் கொண்டிருக்கிறது. பிராண்டன் லீயின் முதல் படம் இதுதான். தொடர்ந்து லீ இப்போது படு பிஸியாம்!

* ஃபாத்திமா



OO அகிலனின் சித்திரப் பாவை, டி. வி. தொடராய்த் தயாராகி வருகிறது. அதில், தொலைக்காட்சியில் செய்தி வாசிக்கும் ஃபாத்திமா, நடிக்கிறார்.

OO உஷா உதுப், பார்க் ஷெராட்டன் ஓட்டலில் வழங்கிய நிகழ்ச்சிக்கு கமலஹாசன், சரிகாவுடன் வந்திருந்தார். உஷா உதுப், கமலை மேடைக்கு அழைத்து, "நான் கமலின் ரசிகை" என்று கூறிவிட்டு, கமலை ஒரு பாட்டுப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டார். கமல், "உஷா என் ரசிகையாக இருக்கலாம்; ஆனால் நான் உஷாவின் ரசிகன். உஷாவின் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன்"






* பிராண்டன் லீ

என்று கூறி, மைக்கை வாங்கிக் கொண்டு, அனைவரையும் அசத்தும்படி பாடிய பாடல்: "தென்பாண்டிச் சீமையிலே." இங்கு பிரசுரமாகியுள்ள வண்ணப் படம் அப்போது எடுத்ததுதான்.

— ஜாவி

வண்ணப்படம்: யோகா.



எண்ணிப் பாருங்கள்–இன்னும் பத்து ஆண்டுகளில் இவர்கள் எப்படி இருப்பார்கள் என்று.

நீங்களே பெருமிதப்படக்கூடிய வகையில் ஆரோக்கியத்தின் சின்னமாக இவர்கள் திகழக்கூடும். ஏனெனில் தாய் என்ற முறையில் உங்களால் முடிந்த எல்லாவற்றையும் இவர்களின் ஒளிமயமான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நீங்கள் செய்து கொண்டிருக்கின்றீர்கள்.

நீங்கள் காட்டும் அன்பின் முக்கிய அம்சமே இவர்களின் உடல் நலனுக்கு உகந்த ஊட்டச்சத்துகளை முழுமையாகப் பெற்றுத் தருவதுதானே.

ஹார்லிக்ஸ் அளிக்கும் ஊட்டச்சத்து. இவர்களின் வளரும் வயதுக்கேற்ற ஊட்டச் சத்து.



"ஹார்லிக்ஸில் அடங்கியுள்ள முக்கிய ஊட்டச்சத்துகள்– புரோட்டீன்ஸ், விட்டமின்ஸ், மினரல்ஸ் மற்றும் கார்போஹைட்ரேட்ஸ் ஆரோக்கியத்திற்கும், வளர்ச்சிக்கும் மிக உகந்தவை.

இதில் சேர்க்கப்பட்டுள்ள கூடுதல் கால்ஷியம் வலுவான பற்களுக்கும், ஆரோக்கியமான எலும்புகளுக்கும் இன்றியமையாதது.

வளரும் குழந்தையின் வயதுக்கேற்ற தெம்பும், முழுமையான ஆரோக்கியமும் அளிக்கவல்லது."



சிறந்த ஊட்டச்சத் ... பானம்

HTA 6223 TAM

நினைவுச்சின்னம்



நீதிநெறியிலும், பண்பாட்டிலும், ஆளுமையிலும் ஓகோவென்று ஊருக்குள் பேரெடுத்த ஒரு கவுண்டச்சி, சில வில்லர்களின் சூழ்ச்சியால் 'அவுசாரி'யாகி விட்டதாய்ப் பேசப்பட்ட அந்த நிமிடமே தன்னை மாய்த்துக் கொண்டு விட்ட அந்த ஒரு நிகழ்ச்சி, இந்தியப் பண்பாட்டை ஒரு தூக்குத் தூக்கி விடுவது உண்மைதான். தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகளில் சினிமாத்தனங்கள் அப்பியிருக்கின்றன.

பிரபுவுக்கு முக்கால் திட்டத்துக்கு முதுமைக் கோலம்தான். ஒரு புதுமை: இந்த அளவுக்கு அவர் குரலின் நடிப்பை இதுவரை யாரும் பயன்படுத்திக் கொண்டதில்லை. அளந்து பேசினாலும் அதிலே உள்ள ஆழம், அமைதி, அழுத்தம், ஆங்காரம் — அடேங்கப்பா, அச்சமூட்டுகிறது. அநியாயமாய்ச் சிறையில் அடைபட்டிருக்கும் போது, அவர் மனைவி கெட்டு விட்டதாய்ப் புரளி பரவியதால், அவள் குத்திக் கொண்டு செத்ததாய்க் கேட்டதும் அவர் துடிக்கும் துடிப்பு பாய்ந்தோடிச் சென்று 'பாக்கியம்... பாக்கியம்...' என்று அள்ளியெடுத்துப் புலம்பித் துடிக்கும் வேதனையில் எத்தனை ரசங்கள்! துக்கம், ஏமாற்றம், நிராதரவு, பழிவாங்கும் பொருமல், அத்தனைக்கும் நடுவே அதிர்ச்சி — சிலிர்த்துப் போகிறது.

ராதிகா தன் கான்வென்ட்தனத்தை இழுத்து முறுக்கிப் பிடித்து வைத்துக் கொண்டு, கொங்குத் தமிழில் செங்கரும்பாய் இனிக்கக் கொஞ்சிக் குலவும் போது டைரக்டரின் பாடும் நடிகையின் உழைப்பும் — பாராட்டலாம். கவுண்டச்சி இல்லாவிட்டால் கவுண்டர் காலி என்ற யதார்த்த உண்மையை, 'என்னங்க நான் சொல்றது?' என்ற ஒரு கேள்வியில் ரொம்பச் சுகமாய் வெளிப்படுத்தியிருக்கிறார். கட்டின பெண்டாட்டி மேல் பழிபோட்டு விவாகரத்து வழக்குத் தொடரும் புருஷனிடம் — அந்த ஊர்க் கூட்டத்தில் — ராதிகா வீச்சரிவாளைத் தூக்கிப் போட்டு, 'உன் ஊட்டுக்காரி எவனோடவோ சோளக் கொல்லையிலே இருந்ததை நீ பார்த்த இல்லே? பொறவு ஏண்டா அங்கியே வெட்டிப் போடாம வந்தே? இந்த மாதிரி பொம்பிளை ஊருலே இருக்கலாமா? இந்தா இப்ப வெட்டிப் போடு' என்று நீட்டி நெளித்துச் சொல்லி... அவனுடைய உள்நோக்கத்தைப் புட்டுப் புட்டு வைக்கும் வயணம் இருக்கிறதே, சூப்பர். மாறாகத் தன் மேல் ஊரார் அதே மாதிரி ஒரு பழி சுமத்தும் சந்தர்ப்பத்தில் அவர் பிழிந்து விட்ட அந்த அவலம், நெஞ்சுக்குள் வடு பதிக்கிறது.

அந்த இளம் சித்ராவை என்னத்துக்கு உதட்டில் பிடி வைப்பது போல் விரல் பதித்துப் 'புளிச் புளிச்'சென்று வெற்றிலைச் சாறு துப்ப வைத்தார்களோ! (மானரிஸம் கவர்ச்சியாய் இருக்கணும் டைரக்டர் சார்.) அவருடைய அந்த வெடுக்குப் பேச்சும் துடுக்கும் எடுப்புத்தான். பெரிய போலீஸ் அதிகாரியான இவர், அப்பாவிப் பெண்ணாய் வேஷம் போட்டுக் கொண்டு வந்தவராம். இது ஒரு பக்கம். கடைசியில் அந்த முட்டிக்கால் ராஜாவின் (பிரபு) சொந்த மகள் என்று இன்னொரு பக்கம். தலை முடியில் சில ரோமங்கள் உதிர்கின்றன.

ரொம்ப நாளைக்கப்புறம் கவுண்டமணி — செந்தில் ஜோடி சேர்ந்தாலும், சேர்ந்தது — காலி டப்பா அல்ல; பெருங்காயம் இருக்கிறது என்று நிரூபித்திருக்கிறது.

இந்த ஊருக்குள் காவல் நிலையம் வர விடாமல் தடை செய்வது ஏன்? ரயில் வரும் போதெல்லாம் (அது சரி, நாளைப் போல் அந்த ரயில் அத்தனை காலியாக வருவானேன்?) வீச்சரிவாளுடன் பிரபு ரேக்ளா வண்டியில் அங்கு சென்று யாரை எதிர்பார்க்கிறார்? பவுர்ணமியன்று ஊர் கூடி ஏதோ ஒரு நினைவுச் சின்னத்துக்குப் பால் வார்ப்பது எதற்காக? — இப்படிச் சில கொக்கிகளில் கதையைத் தொங்கவிட்டிருப்பது சஸ்பென்ஸ். ஆனால் ரேக்ளா வண்டி, ஜீப்பையும் டிராக்டர்களையும் வெற்றி கொள்ளும் க்ளைமாக்ஸ் அநியாயம்; கேலிக்கூத்தான சினிமாத்தனம்; மூட நம்பிக்கை.

பாடல்களில் தெம்மாங்கு வாடை தூக்கல்.

சும்மா சொல்லக் கூடாது காமெரா பாந்தம்தான். கிராமத்து வளப்பங்கள் மஜா.

சில போக்கிரிப் போலீஸ் அதிகாரிகள் தான் சமூக விரோதச் செயல்களுக்குத் தூண்டுகோலாய், உடந்தையாய் இருக்கிற நச்சுக்கள் என்று சமுதாயப் பிரக்ஞையுடன் அச்சமின்றிச் சுட்டிக் காட்டியிருக்கிற துணிச்சலுக்கு மாலை போட வேண்டும்.

— பி. எஸ். எஸ்.

சுக போகத் தீவுகள்

19

முதல்வரைத் தமிழ்நாடு இல்லத்தின் தனியறையில் ஓய்வெடுக்க விட்டு விட்டு வெளியே ஹாலில் போட்டிருந்த பிரம்பு நாற்காலி ஒன்றில் வந்து அமர்ந்தான் கிருஷ்ணமூர்த்தி.

"முதல்வர் ஓய்வெடுக்கிறார். வெளியே வர இன்னும் இரண்டு மணி நேரமாவது ஆகும். நீங்கள் வேண்டுமானால், உங்கள் அறைக்குச் சென்று குளித்து உடை மாற்றிக் கொண்டு வாருங்களேன்..."

உள்துறைச் செயலர் ராமசாமியைப் பார்த்துச் சொன்னான் கிருஷ்ணமூர்த்தி.

"போகிறேன்" என்றபடி அமர்ந்திருந்தார் அவர்.

"என்ன யோசிக்கிறீர்கள்?"

"மதியம் பிரதமருடன் பேசும் போது, மத்திய மாநில உறவைப் பற்றி, அண்மையில் நம் முதல்வர் பேசிய பேச்சைக் குறித்து ஏதேனும் விளக்கம் கோரக்கூடும். முதல்வர் தம் மனசுக்குள், திட்டவட்டமாக எந்த விதமான கருத்தை வைத்துக் கொண்டிருக்கிறார் என்று கூற முடியுமா?"

டில்லிக் குளிர் காலை எட்டு மணிக்கு மேலும் நடுக்கிக் கொண்டுதான் இருந்தது. தன் கைப்பையில் இருந்த வெளிநாட்டுச் சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு, சிகரெட் பெட்டியை உள்துறைச் செயலாளரிடம் நீட்டினான். அவர் நன்றி சொல்லி மறுத்தார். பிறகு கிருஷ்ணமூர்த்தி சொன்னான்.

"மத்திய மாநில உறவு குறித்து நம் முதல்வர், 'உறவுக்குத் தோள் கொடுப்போம். உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்ற கருத்தை வைத்திருப்பதாகச் சொல்லுங்கள். அரசியலைப் பொறுத்தவரை, ஒவ்வொரு பிரதேசமும் மக்களுடைய மனப்பான்மைக்கும் எதிர்பார்ப்புக்கும் ஏற்ற மாதிரிதான் இயங்க முடியும். தமிழகத்தைப் பொறுத்தவரை, மக்கள் மத்திய அரசின் மேல் எப்போதும் குறை காணும் மாநில அரசைத்தான் விரும்புகிறார்கள். ஆகவே, மக்கள் அபிப்பிராயத்தைச் செயல்படுத்த நாங்கள் அப்படித்தான் பேசுவோம். அதை 'சீரியசாக' எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று சொல்லுங்கள். தமிழ் நாட்டில் மட்டும்தான் நாங்கள் எதிர்க் கட்சியைப் போல் இயங்குவோம். டில்லிக்கு வந்தால் நாங்கள் சகோதரக் கட்சியைப் போலத் தான் நடந்து கொள்வோம்.

உள்துறைச் செயலர் ராமசாமிக்கு இந்தத் தகவல்கள் போதுமானவையாக இருந்தன. அவர் சந்தோஷத்துடன் குளிக்கச் சென்றார்.

கிருஷ்ணமூர்த்தியின் மனம் முழுக்க விநோதினியே நிறைந்திருந்தாள். அவளுக்குப் போன் செய்து அன்று இரவே அவளைச் சந்தித்துப் பேச வேண்டும் என்று அவன் முடிவு செய்து கொண்டான். முதல் அமைச்சர், உள்துறை அமைச்சரைச் சந்திக்கப் போகும் நேரத்தில், அவன் அவளைச் சந்தித்து வந்து விடலாம் எனத் திட்டமிட்டான். முதல்வரின் பி.ஏ.வை அழைத்து, "இன்று இரவு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து கொண்டு விட்டீர்கள், அல்லவா?" என்று கேட்டான்.

"ஒழுங்குபடுத்திக் கொண்டேன், சார்..."

"முதல் நிகழ்ச்சியை என்னவாக அமைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"இரவு எட்டு மணிக்கு உள்துறை அமைச்சருடன் உரையாடல், பிறகு உணவு."

"என்ன உணவு?"

"கெண்டை மீன் குழம்பு, நெத்திலிக் கருவாடு வறுவல், கோழி சுக்கா வறுவல், ஆட்டுக் கறி மிளகு ரோஸ்ட், சாம்பார், ரசம், தயிர், மோர், நெய், எலுமிச்சை ஊறுகாய், அப்புறம் சுக்கு, ஏலம் போட்ட டீ."

கிருஷ்ணமூர்த்தி யோசித்தான். ஏதோ ஒன்று குறைவது மாதிரி பட்டது. நினைவுக்கு வந்தது.

"ரைட்... வத்தக் குழம்பை மறந்து விட்டீர்களா?"

பி.ஏ. கையை உதறிக் கொண்டு, "சாரி சார்... ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்றார்.

"அமைச்சர்களோடு முதல்வர் பேச வேண்டிய விஷயங்களில், ஒன்றிரண்டை மறந்தாலும், நாளை மறுநாள் பேசிக் கொள்ளலாம். மெனுவில் ஒரு ஐட்டம் குறைந்தாலும் முதல்வர் 'மூட்' அவுட்டாகி விடும். ஞாபகம் இருக்கட்டும்."

"புரிகிறது சார்."

கிருஷ்ணமூர்த்தி தொலைபேசியின் அருகே அமர்ந்தான். இந்தியர்களுக்கு இரத்த அழுத்தம் வரத் தன்னால் இயன்ற சேவை செய்து கொண்டிருக்கும் மத்திய அரசு நிறுவனம் தொலைபேசி இலாகா என்று ஒருவர் சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. அலுப்பின் உச்சியில் அவன் இருக்கும் போது, அந்த நம்பர் கிடைத்தது.

"மிஸ் விநோதினியுடன் பேச வேண்டுமே."

பிரபஞ்சன்

எதிர்முனை அவனைக் காத்திருக்க வேண்டியது. படபடக்கும் உள்ளத்துடன் அவன் காத்திருந்த வேளையில் ''ஹலோ... நான் விநோதினி. யார் பேசுவது?'' என்று எதிர்ப்புறத்திலிருந்து அவனுக்கு உயிர் வந்தது.

''**கா**லாற நடக்க இந்த டில்லி மாதிரி இடம், இந்தத் தேசத்தில் வேறு எங்கு இருக்கிறது.... என்றான் கிருஷ்ணமூர்த்தி. கண்ணுக்கெட்டிய தூரம் புற்களாகவே இருக்க, வெகு தூரத்தில் தெரியும் சிவப்பு வண்ணம் அடிக்கப்பட்ட கட்டடங்களும். எப்பொழுது இங்கு வந்தாலும் அவனுக்கு மிகுந்த இன்பத்தைத் தரும் அனுபவமாகவே இருக்கும்.

''ஒருத்தரையொருத்தர் இடித்துக் கொண்டு, ஒருவர் வியர்வையை மற்றவர் சுவாசித்துக் கொண்டு... என்ன மெட்ராஸ் வாழ்க்கை?''

''எனக்கென்னமோ, அப்படிக் கசகச வென்று இருக்கும் திருவல்லிக்கேணி சந்துகள்தான் பிடித்திருக்கின்றன, கிருஷ்ணமூர்த்தி! என்ன சுகாதாரக் குறைவு இருந்தாலும், அந்த வாழ்க்கையில் ஒரு ஜீவன் இருக்கிறதே! இந்த டில்லியில் நான் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. சோற்றுக்கு உழைக்க வேண்டித் தானே இருக்கிறது; ஏதோ பெரிய கல்லறைக்குள் குடி வந்து விட்டது போல், எனக்கு இந்த டில்லி வாசம் தோன்றுகிறது. ஜீவனற்ற மண்ணும், இயந்திரமான மனிதர்களும்... என்ன வாழ்க்கை இது? நாலாவது ஃப்ளோரில் குடியிருந்து கொண்டு, வாசல் கோலம் போடத் தவறாத மாமி ஒரு சின்னம் என்றால், சாயங்காலம் மைக்கேல் ஜாக்ஸன் பின்னணி இசையோடு காக்டெயில் அருந்தும் அதே மாமி மற்றுமொரு சின்னம் இங்கே! காலையில் சுப்ரபாதமும், மாலையில் மெடோனாவும், விசித்திரமாய் இல்லை? இதுதான் இ ந் தி ய க் கலாசாரமா?''

''நான் போன் பண்ணும் போது, உங்களுக்குப் பின்னணியாக ஒலித்துக் கொண்டிருந்ததே, ஒரு பெண் குரல், அது யார்? மெடோனாதானே?''

''அவளேதான். 'இந்தப் பௌதிக உலகத்தில், நான் ஒரு பௌதிகவாதியாகவே இருக்க விரும்புகிறேன். பையன்கள் என்னை அணைத்துக் கொள்ளவும், முத்தம் தரவும் விரும்புகிறார்கள். ஆனால், நான் யாரையும் அனுமதிக்கவில்லை..' அப்படின்னு தொடங்குகிற ஒரு பாட்டு. ரொம்ப நல்ல பாடகி, கிருஷ்ணமூர்த்தி. நீங்கள் அவளைக் கட்டாயம் கேட்க வேண்டும். எனக்கு இந்த டில்லிக் குளிரிலும், வெயிலிலும் அவள் ஒரு நல்ல துணை.''

''இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு •



இந்தியாவில் விடற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பது பம்பாயில் தான். சுமார் 50,185 பேர். அதற்கடுத்து கல்கத்தா. 48,440 பேர். பிறகு டெல்லி. 26,777 பேர்.

விடற்றவர்கள் = பிளாட்பார வாசிகள் + பாதுகாப்பான புகலிடமற்றவர்கள்.

— ஆர். உமாபதி

இந்த டில்லியில் இருக்கத்தான் வேண்டுமா?''

''ஒரு கதை சொல்லட்டுமா? பிரிட்டிஷ் பேரரசி விஜயம் செய்ய வேண்டிய ஓர் இடத்துக்குப் போய்க் கொண்டிருந்தார். வாகனத்திலிருந்து இறங்கிக் கொஞ்ச தூரம் நடக்க வேண்டியிருந்தது. நடந்தார். ஓர் இடத்தில் மழை நீர் குட்டையாய்த் தேங்கியிருந்தது. அரசியாருடன் நடந்து கொண்டிருந்த சர். வால்டர் ராலே என்பவர், தன் விலை உயர்ந்த மேல் கோட்டைத் தரையில் போட்டு, அந்த நீர்க் குட்டையை மறைத்தாராம். அரசியார் ராலே தமக்குச் செய்த அந்த விசுவாசமிக்க பணிக்குப் பதிலாக, அடுத்த அரை மணியில் அவரை மிக உயர்ந்த பதவியில் அமர்த்தினாராம். அதற்குப் பிறகு, பெரிய மனிதர்களை மகிழச் செய்து சௌகரியங்களை அடையும் வேலைக்கு 'ராலே முறை' என்ற வழக்கே ஏற்பட்டு விட்டது, கிருஷ்ணமூர்த்தி.''

''இந்தக் கதையை என்னிடம் எதற்காகச் சொல்கிறீர்கள்?''

''வாழ்க்கையில் இரண்டு விதங்கள் இருக்கின்றன. பிறரை நைச்சியம் செய்து வாழ்தல்; உழைத்து வாழ்தல். எனக்கு முன்னது பிடிப்பதில்லை.''

''ஆக, என் வாழ்க்கை பிறரை நைச்சியம் செய்வது என்கிறீர்கள்.''

''ஆம். முதல்வரை. அப்புறம் பிற அமைச்சர்களை. அப்புறம், அமைச்சர்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் பெரிய மனிதர்களை... அதன் மூலம் அடையாற்றில் பங்களா. பாங்க்கில் பணம். நமக்கு முடியாதப்பா, இதெல்லாம்!''

''உங்களுக்கு எப்படித் தெரிகிறது, இந்த சங்கதிகள் எல்லாம்.''

''நான் ஒரு துப்பறியும் சாம்பி. தெரியுமா?'' அவர்கள் சிரித்தார்கள்.

இரவு எந்த இடத்திலும் அழகியதுதான். நிலவும் அழகியதுதான். வெறும் தரையில் பொழிந்தாலும், காட்டில் பொழிந்தாலும், காதலர்களின் மேல் பொழிந்தாலும், நிலவு ஒரு தன்மையுடையதாகத்தான் இருக்கிறது.

கிருஷ்ணமூர்த்தி சொன்னான்.

''எனக்கு உங்களைப் பிரிந்திருக்க முடியவில்லை, விநோதினி. காதுகளுக்குள் ஒரு கடல் வந்து புகுந்து கொண்ட மாதிரி இருக்கிறது, இரவுப் பொழுதுகளில். அது கொஞ்சம் கொஞ்சமாகப் பரவி, இருதயத்துக்கும் வருவது மாதிரி இருக்கிறது. உங்களை நினைத்துக் கொண்டு நான் அழுகிறேன். ஏன், என்று எனக்கே விளங்கவில்லை. பற்பசையைக் குச்சியில் வைத்துக் கொண்டு இக்பிரமை கொண்டு நிற்கிறேன். சாப்பிட்ட அடுத்த ஐந்து நிமிஷங்களுக்குள் என்ன சாப்பிட்டேன் என்பதே மறந்து போய் விடுகிறது. ஏன் இந்த அவஸ்தை?''

''இந்த இனிய அவஸ்தைக்குப் பெயர் தான் காதல், கிருஷ்ணமூர்த்தி.''

''உங்களுக்கு அப்படியெல்லாம் தோன்றுவதில்லையா?''

''ஏன் இல்லை? இதோ பாருங்கள்.''

விநோதினி தன் கைப் பையைத் திறந்து, ஒரு சின்ன டயரியை வெளியே எடுத்தாள். ஒரு பக்கத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள். விளக்குக் கம்பம் ஒன்றின் கீழ் நின்று அவன் அதைப் படித்தான். சின்னச் சின்ன எழுத்துக்களில் அவள் இதை எழுதியிருந்தாள்.

'இன்று காலையிலேயே சூரியன் மிகக் கடுமையாகக் காய்ந்து கொண்டிருக்கிறது. அவருக்கு வியர்க்கும். துன்பம் தரும். சூரியனே! உன் கடுமையைக் கொஞ்சம் குறைத்துக் கொள்.

கார்களும், லாரிகளும் தெருவில் மந்தை மந்தையாக ஊர்ந்து கொண்டு, பெட்ரோல் புழுதியை வாரி இறைத்துக் கொண்டு போகின்றனவே! ஐயோ! அவருக்கு இந்தப் புகை துன்பம் தரக் கூடுமே! அவர் இருக்கும் தெருக்களிலாவது இந்த வண்டிகளை அனுமதிக்காமல் இருக்கச் சட்டம் ஒன்று கொண்டு வந்தால் என்ன....?'

பலப்பல பக்கங்களில் அவள் இதை எழுதியிருந்தாள். காதல் வேகம், அந்தப்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி — 1989

முதல் பரிசு ரூ. 1500; இரண்டாவது பரிசு ரூ. 750; மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 விதம்) ரூ. 750.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

போட்டி பற்றிய முழு விவரங்களை அறியச் சென்ற இதழ்க் கல்கியைப் பாருங்கள், அல்லது அடுத்த இதழ்க் கல்கிக்காகக் காத்திருங்கள்.

— ஆசிரியர்

பக்கங்களில் நெருப்பு வரிகளாக விழுந்து கையைச் சுட்டது.

''இந்த 'அவர்' யார், விநோதினி?''

''ஊகியுங்கள்.''

''சொல்லட்டுமா?''

''சொல்லுங்களேன்.''

''அது நான்தானே?''

அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். அதில் ஒப்புதலும் ஆதரவும் மிகுந்து இருந்தது.

''நாம் ஒரு படகில் பயணம் செய்து கொண்டிருக்கிறோம், விநோதினி. அப்படி இருக்கையில் ஏன் இந்தச் செயற்கைப் பிரிவு? ஏன் இப்படி ஒருவரையொருவர் ஹிம்சித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் இன்றும் எத்தனை நாளைக்கு? இது தேவைதானா?''

தெருக்களில் மரங்களுக்கும், மர நிழல்களுக்கும், கொத்துக் கொத்தாய் இருட்டுகளுக்கும் பஞ்சம் இல்லை. ஒரு மரத்தின் கீழ் அவர்கள், சாவி நின்று போன பொம்மைகள் மாதிரி நின்றார்கள். அனிச்சையான நிறுத்தம் அது! அவள் அவன் தோள்களைப் பற்றித் தன்பால் இழுத்து, அவன் உதடுகளில் இளம் சூடாக முத்தம் ஒன்று அளித்தாள்.

முதுகு சிலிர்த்தது அவனுக்கு. ஒரு நூறாண்டு அவளுடன் வாழ்ந்தது போல் ஓர் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. ஒற்றை முத்தத்துக்கு இவ்வளவு பெரிய சக்தி உண்டா என்ன? அந்த ஸ்பரிசத்துக்கு அந்தச் சக்தி உண்டு. அந்த வீச்சில், மாமலையும் கடுகாவது இயல்புதான். 'உலகத்தில் இதுகாறும் ஏற்பட்ட யுத்தங்களில், மிகப் பலமான யுத்தங்கள் பெண்கள் காரணமாகவே ஏற்பட்டவைதான்' என்று ரஜனீஷ் சொல்கிறார்... உலகம் அவர்கள் இருவருக்கு மாத்திரமே உருவாக்கப்பட்ட வீடு மாதிரி இருந்தது அவர்களுக்கு.

''தமிழ் நாட்டுக்கு வந்து விடுங்கள், விநோதினி. என்னால், உங்களுக்கு நல்ல வேலையாக ஏற்பாடு செய்து தர முடியும். தவிரவும்....''

''தவிரவும்...''

''நம் எதிர்காலத்தையும் ஒழுங்கு செய்து கொள்ளலாம்.''

''அது சாத்தியம் இல்லை, கிருஷ்ணமூர்த்தி! நீங்கள் ஒரு பேராசிரியராக, ஒரு பெட்டிக் கடை வைத்திருப்பவராக, அதாவது உங்கள் காலை ஊன்றி, உழைத்துச் சம்பாதித்து வாழத் தொடங்குங்கள்! அப்படி நீங்கள் வாழத் தொடங்குகிற அந்த முதல் நாள், நான் உங்களுடன் இருப்பேன்.. இது சத்தியம்...''

அந்த இருட்டிலும் அவள் கண்கள் மின்னின.

அவன் செயலற்று நின்றான்.

(தொடரும்)



— திருத்துறைப்பூண்டி. எஸ். கந்தசாமி.



நிருபர்: ''நீங்கள் நடிச்ச முதல் படமே வெற்றிப் படம்! அடுத்தது எப்பங்க?''

நடிகர்: ''ஒரு புதுக் கட்சி ஆரம்பிச்ச பிறகு!''

அழகான மனைவி

புதுப் புடைவை சரசரக்க, மூன்று நாட்களுக்கு முன்பு, தான் கட்டிய தாலிச்சரடின் மஞ்சள் மினுமினுக்க வீட்டில் வளையவரும் புதுமனைவியைப் பார்க்கப் பார்க்க, சந்தோஷத்திற்குப் பதில் வருத்தமே மேலிட்டது பாண்டியனுக்கு.

எல்லோருக்கும் கனவுகளையும், மகிழ்ச்சியையும் தரும் கல்யாணம் அவனைப் பொறுத்தவரை ஏமாற்றத்தையே ஏற்படுத்தியது.

எல்லா இளைஞர்களையும் போல அவனும் தன் வருங்கால மனைவியைப் பற்றிக் கலர் கனவுகளுடன்தான் இருந்தான்.

திடீரென்று ஒருநாள் அப்பா இவனிடம் வந்து, "உன் தங்கைக்கு நல்ல இடமா அமைஞ்சிருக்கு. ஆனால் ஒரு சின்னச் சிக்கல். திருமண வயசுல அவங்களுக்கும் ஒரு பொண்ணு இருக்கா. அதனால பொண்ணுக் கொடுத்துப் பொண்ணு எடுத்துக்கறதாப் பேசி முடிச்சாச்சு. பொண்ணும் பார்க்க அடக்கமா, பணிவாத் தெரியறா. மாப்பிள்ளைப் பையனும் கை நிறையச் சம்பாதிக்கிறான். அதனால் அடுத்த மாசம் உனக்கும், உன் தங்கைக்கும் ஒரே நாளில், ஒரே பந்தலில் கல்யாணம்" என்று குண்டைத் தூக்கிப் போடவும் திகைத்துப் போனான் பாண்டியன்.

"அப்பா, பொண்ணை நான் பார்க்க வேண்டாமா?"

"ஓ, தாராளமா! நீ இப்படிக் கேட்பேன்னு தெரிஞ்சுதான் பொண்ணு போட்டோவை வாங்கிட்டு வந்தேன். இந்தா," என்று அவர் பையிலிருந்து எடுத்து நீட்டிய போட்டோவைப் பரபரப்புடன் வாங்கிப் பார்த்தான்.

சட்டென்று அவன் ஆவல் வடிந்தது. பெண் போட்டோவிலேயே அவனுக்கு ஏமாற்றத்தை அளித்தாள்.

அவன் முகமாற்றத்தைக் கவனித்த அப்பா, "பொண்ணுக்கு நகை, சீர் எல்லாம் நல்லாச் செய்யறேன்னு சொல்லியிருக்காங்க. அதோட உன் தங்கச்சிக்கும் இதைவிட நல்ல இடம் அமையறது கஷ்டம். அழகுங்கறது பார்க்கிறவன் மனசுலதான் இருக்கு. உடம்புக் கவர்ச்சியெல்லாம் ரெண்டு, மூணு வருஷத்தில மறைஞ்சிடும்னு படிச்ச பையனான உனக்குச் சொல்லித் தெரிய அவசியமில்லை" என்று அவனை மேலே எதுவும் பேச விடாமல் தம் முடிவைச் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார்.


பாசம், தங்கை, தியாகம் என்று மனத்தைத் தேற்றிக்கொண்டு பலி ஆடு மாதிரி, பாண்டியன் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டினான்.

நல்லவேளை, சாந்தி முகூர்த்தத்தை நாள் சரியாயில்லை என்று பத்து நாட்கள் தள்ளிப் போட்டுவிட்டது அதிர்ச்சியிலும், துக்கத்திலுமிருந்த மனத்துக்குச் சற்று ஆறுதலாயிருந்தது.

"**ஏ**ன்னடா, புது மாப்ளே! உம்முன்னு இருக்கே?" என்று முதுகில் அடி விழவும் திரும்பிப் பார்த்தான்.

கிருஷ்ணா





மாமாதான்! மதியச் சாப்பாடும், வெற்றிலை பாக்கும் தந்த உற்சாகத்திலிருந்தார். சென்னை வாசி.

''அப்படியெல்லாம் இல்லையே மாமா. கொஞ்சம் டயர்டா இருக்கு. அதான்...''

''பொய் சொல்லாதேடா மருமவனே! ஃபர்ஸ்ட் நைட்டைப் பற்றித்தானே கனவு கண்டுக்கிட்டிருந்தே?'' என்று அவன் மனநிலை புரியாமல் ஜோக் கடித்துத் தாமே பெரிதாகச் சிரித்தார்.

''சரிடா, நான் இன்னிக்கு ராத்திரி ஊருக்குக் கிளம்பறேன். அதைச் சொல்லலாம்னு தான் வந்தேன்.''

''பஸ்ஸிலேயா, ரயில்லேயா, மாமா?''

''பஸ்லதான். ஸீட் நம்பர் முப்பத்தெட்டு. காலையில்தான் போய் ரிசர்வ் செஞ்சுட்டு வந்தேன்.''

''முப்பத்தெட்டா? கடைசிச் சீட்டாச்சே. பயணம் செய்யும் போது தூக்கித் தூக்கிப் போடுமே! ராத்திரி தூங்கக் கூட முடியாதே?''

''உண்மைதான் பாண்டியா! ஆனா அதுக்கு நாம என்ன செய்ய முடியும். கிடைக்கறதை வைச்சுத்தானே வாழ்க்கையில் பயணம் செய்ய முடியும்?''

''என்ன மாமா சொல்றீங்க?''

''இங்கே பாருடா. பஸ்ஸிலே ஜன்னல் ஓர சீட்டுன்னா காற்று வரும். ஆனால் காலை நீட்ட முடியாது. சைடு இருக்கைன்னா காலை ஹாயா நடைபாதையில நீட்டிக்க முடியும். கடைசிச் சீட்டுக் கிடைச்சதுன்னா தூக்கித் தூக்கித்தான் போடும். ஒவ்வொரு சீட்டுலேயும் சௌகரியமும் இருக்கு. அசௌகரியமும் இருக்கு. வாழ்க்கையும் பேருந்துப் பயணம் மாதிரிதான். அதுக்குப் பதிலா என்ன கிடைக்குதோ அதுல இருக்கிற நல்லதைப் பாராட்டிக்கிட்டு மனசுல இருக்கிற ஏமாற்றங்களை உதாசீனப்படுத்தினோம்னா எந்தப் பிரச்னையுமில்லே...''

''மாமா ...!'' என்று திகைப்புடன் அவரை ஏறிட்டான்.

''டேய் கண்ணா, உன் மனசை உன்னோட முகத்துலேயிருந்து புரிஞ்சுக்கிட்டேன். உன் மனைவி அழகுல மட்டுத்தான்னாலும் குணத்துல பத்தரைமாற்றுத் தங்கமாத் தெரியறா. பாரேன், வந்த மூணாவது நாளே உங்க அம்மாவை எந்த வேலையும் செய்ய விடாமல் எப்படிப் பணிவா, விகல்பமில்லாம நடந்துக்கறா! அனுபவப்பட்டவங்கிற முறையில நான் சொல்றேன். உன்னைப் பெத்தவங்களுக்கு ஒரே ஆண் பிள்ளையான நீ, உன் மனைவி உருவத்துல அழகாயிருக்கிறதைவிட, மனசுல உன்னையும், உன் அப்பா, அம்மாவையும் அரவணைச்சுப்போறவளா அமையணும்னுதான் ஆசைப்படணும். அது மூலமா உன் வாழ்க்கை நிம்மதியா ஓடணுங்கறதுதான் முக்கியம். உனக்கு அந்த அதிர்ஷ்டம் அடிச்சிருக்கு. கிடைச்ச பொக்கிஷத்தை ஒழுங்காப் பராமரிக்க வேண்டியது அதோட சொந்தக்காரனோட கடமை...'' என்று சொல்லிவிட்டு அர்த்த புஷ்டியுடன் பாண்டியனைப் பார்த்தார்.

சரேலென்று மனத்திலிருந்த இருள் அகல, அவர்களை நோக்கிக் காப்பித் தம்ளருடன் வந்த மனைவியைக் கனிவுடன் பார்த்தான் பாண்டியன்.

அவன் பார்வையால் படர்ந்த செம்மையுடன் தலைகுனிந்தாள் அவன் மனைவி.



சீடன் 1: இப்பல்லாம் நம்ம சாமியார் ஏன் மங்களம் உண்டாகட்டும்னு சொல்லாமே பாக்யம் உண்டாகட்டும்னு சொல்றாரு...?

சீடன் 2: அவரோட முதல் மனைவி மங்களம் உண்டாகியிருக்காங்களாம். இரண்டாவது மனைவி பாக்யம், உண்டாகலியாம்!

— எஸ். ராகவேந்திரா.



— எஸ். முகம்மது ஆசுப்.



''அப்பா, நான் பரீட்சைக்குப் போய்ட்டு வர்றேன்...!''

''போய்ட்டு வா...! விஷ் யூ ஆல் த பெஸ்ட்!''

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது; பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

RK SWAMY/ISL/5112/TAM

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

அஷ்டலக்ஷ்மி-3



முழு நம்பிக்கையோடு முன்னேறிடுவீர்—சிட்டி யூனியன் வங்கி துணையுடன்!

சிட்டி யூனியன் வங்கி—தனிப்பட்டவரும், சிறு தொழில் புரிவோரும் வாழ்வில் தமது குறிக்கோளை அடைய உதவுகிறது.

தேர்ந்தெடுக்கப் பல திட்டங்கள்:

- சேமிப்புக் கணக்கு
- மாதாந்திர சேமிப்புத் திட்டங்கள்
- ரொக்கப் பத்திரங்கள்
- வாமன விஸ்வரூப வைப்புத் தொகை
- கால வரை வைப்புத் தொகை
- வெளிநாட்டில் வாழ்வோர் சேமிப்புக் கணக்கு

நாடுவீர் எம்மை—
பெறுவீர் நன்மை!

CUB

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,

பதிவு அலுவலகம்: கும்பகோணம்—612 001.

CUB—உங்கள் வளர்ச்சிக்கேற்ற வங்கி.

MCS/CUB/297



அத்தியாயம் 45
"நீ என் சகோதரி!"

நந்தினியும் வந்தியத்தேவனும் நின்ற இடத்தை அணுகி இளவரசரும் மணிமேகலையும் வந்து சேர்ந்தார்கள்.

அருகில் வரும் வரையில் இளவரசர் வந்தியத்தேவனை நோக்கிய வண்ணம் வந்தார். கிட்ட வந்ததும் நந்தினியை ஏறிட்டுப் பார்த்தார். அவளுடைய ஒரு கன்னத்திலும் ஒரு தோளிலும் சிவந்த கோடுகள் போன்ற காயங்களிலிருந்து இரத்தம் கசிவதைக் கண்டார்.

"ஐயோ! உங்களை அந்தப் பாழாய்ப் போன புலி காயப்படுத்தி விட்டதா, என்ன?" என்றார்.

"ஆம், ஐயா! ஆனால் அந்தப் புலி என் உடம்பைத்தான் காயப்படுத்தியது; நெஞ்சிலே காயம் உண்டாக்கவில்லை!" என்றாள் நந்தினி.

இந்த வார்த்தைகள் கரிகாலருடைய நெஞ்சிலே பாய்ந்தன. அவர் மேலே எதுவும் சொல்லுவதற்குள் மணிமேகலை நந்தினியின் அருகில் பதற்றத்துடன் சென்று, "ஆம், அக்கா! நன்றாய்க் கீறி விட்டிருக்கிறதே! நல்ல வேளையாக அஞ்சனம் கொண்டு வந்திருக்கிறேன். வாருங்கள், போட்டு விடுகிறேன்! உடனே போட்டால் காயம் சீக்கிரம் குணமாகி விடும்!" என்றாள்.

"தங்காய்! இந்த மாதிரி காயங்கள் எனக்குச் சர்வ சாதாரணம். எத்தனையோ காயங்கள் பட்டு ஆறியிருக்கின்றன. நெஞ்சில் படும் காயத்தை ஆற்ற ஏதாவது அஞ்சனம் இருக்கிறதா, சொல்!" என்றாள்.

"ஓ! இருக்கிறது, அக்கா! அதுவும் இருக்கிறது!" என்று மணிமேகலை சொல்லி விட்டு நந்தினியைக்

அமரர் கல்கி



கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு பளிங்கு மண்டபத்துக்குச் சென்றாள்.

ளவரசரும்வந்தியத் தேவனும் சிறிது பின்னால் சென்று மண்டபத்துக்கு அருகில் ஒரு விசாலமான மாமரத்தின் அடியில் அமைந்திருந்த சலவைக் கல் மேடையில் அமர்ந்தார்கள்.

''ஐயா! எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து போகிறோமோ, அவ்வளவுக்கு நல்லது! அதிக நேரம் தங்கினால் கந்தமாறனும் அவன் தந்தையும் ஏதாவது தவறாக எண்ணிக் கொள்ளலாம்'' என்றான் வந்தியத் தேவன்.

''யார் வேணுமானாலும் தவறாக எண்ணிக் கொள்ளட்டும். நம் தலையை வாங்கி விடுவார்களா, என்ன? இந்தப் பெண்கள் நம்மைப் பற்றித் தவறாக எண்ணிக் கொள்ளாமலிருந்தால் போதும். அவர்கள் வந்ததும் சொல்லிக் கொண்டு புறப்படலாம்'' என்றார் இளவரசர்.

சற்று நேரத்துக்கெல்லாம் நந்தினியும் மணிமேகலையும் புதிய ஆடைகள் அணிந்து அலங்கரித்துக் கொண்டு வந்தார்கள். நந்தினியின் கன்னத்திலும் தோளிலும் இரத்தக் காயம் தெரியாதபடி அஞ்சனம் தடவியிருந்தது.

''உங்களிடம் விடைபெற்றுக் கொண்டு போவதற்காகக் காத்திருந்தோம்'' என்றார் கரிகாலர்.

''நன்றாயிருக்கிறது. உச்சி வேளைக்கு மேலாகி விட்டது. எங்களுடன் இருந்து உணவருந்தி விட்டுத்தான் போக வேண்டும். இந்த நேரத்தில் உங்களைப் போக விட்டு விட்டால், சம்புவரையர் மகள் என்னை மன்னிக்கவே மாட்டாள்'' என்றாள் பழுவூர் ராணி.

''ஒரு நிபந்தனையின் பேரில் இருக்கிறோம். உங்களுடைய காயத்துக்கு அஞ்சனம் தடவியிருக்கிறாள் மணிமேகலை. நெஞ்சத்தின் காயத்துக்கும் ஏதோ அஞ்சனம் இருக்கிறது என்று சொன்னாள் அல்லவா? அது என்ன அஞ்சனம் என்பதைத் தெரிவித்தால் இருக்கிறோம்'' என்றார் கரிகாலர்.

''அவளைக் கேட்காமல் நாமே அதை ஊகித்துச் சொல்லப் பார்க்கலாமே?'' என்றாள் நந்தினி.

''ஒருவேளை காலப் போக்கினால் ஏற்படும் மறதியைச் சொல்லியிருக்கலாம்'' என்றார் கரிகாலர்.

''அதுவாக இருக்க முடியாது. காலப்போக்கினால் மாறாத நெஞ்சுப் புண்ணும் உண்டு அல்லவா?'' என்றாள் நந்தினி.

''பெண்களின் விஷயத்தில் நெஞ்சுப் புண்ணுக்கு ஒரு நல்ல அஞ்சனம் இருக்கிறது! அதுதான் கண்ணீர்!'' என்றான் வந்தியத்தேவன்.

''பெண்களைக் கேவலப்படுத்தச் சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் என்று வல்லத்து இளவரசர் காத்திருக்கிறார். ஆனால் அவர் சொல்வதும் சரியல்ல. சில விதமான நெஞ்சுக் காயங்கள் ஏற்பட்டு விட்டால் கண்ணீர் விடும் சக்தியே போய் விடுகிறது. பிறகு அது அஞ்சனமாக எவ்விதம் பயன்படக்கூடும்?'' என்றாள் நந்தினி.

''நாங்கள் இருவரும் சொன்னது சரியில்லையென்றால், நீங்கள் உங்கள் ஊகத்தைச் சொல்லுங்கள்!''

என்றான் வந்தியத்தேவன்.

"அதற்கென்ன, சொல்லுகிறேன். தங்காய்! நீ குறிப்பிடும் அஞ்சனம் செவியின் மூலமாக நெஞ்சுக்குப் போவதல்லவா? யாழிலும், குழலிலும், இனிய குரலிலும் எழும் இன்னிசையைத்தானே நெஞ்சின் காயத்துக்கு அஞ்சனம் என்று சொல்கிறாய்?" என்றாள் நந்தினி.

"ஆம், அக்கா! உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று மணிமேகலை கேட்டாள்.

"நான்தான் மந்திரக்காரி என்று சொல்லியிருக்கிறேனே? பிறர் மனத்தில் உள்ளதை அறியும் சக்தி எனக்கு உண்டு. ஐயா! நீங்கள் இருவரும் இன்னிசையின் அந்த அபூர்வ சக்தியை ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று நந்தினி கேட்டாள்.

"ஆம், ஆம்! அதை ஊகிக்க முடியாமற் போனது எங்கள் தவறு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். மணிமேகலை இசைக் கலையில் தேர்ந்தவள் என்றும் நன்றாக யாழ் வாசிப்பாள் என்றும் கந்தமாறன் கூறியதும் நினைவு வருகிறது" என்றார் கரிகாலர்.

"தமையன் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? தங்கையின் புகழை யாரிடமாவது சொல்லாத நாளெல்லாம் கடம்பூர் இளவரசருக்குப் பிறவாத நாள் போலிருக்கிறது. மணிமேகலையின் இசைத் திறனைப் பற்றி அவர் கூறியது உண்மைதான். மணிமேகலை யாழ்கூட எடுத்து வந்திருக்கிறாள். கான வித்தையின் மகிமை அறியாத என்னை மட்டும் வைத்துக் கொண்டு பாட வேண்டிய நிர்ப்பந்தம் நல்ல வேளையாக அவளுக்கு இன்று இல்லை. ஐயா! பேதைப் பெண்களாகிய எங்களை இன்று புலிக்கு உணவாகாமல் காப்பாற்றினீர்கள். அதற்கு நன்றி நாங்கள் செலுத்த வேண்டாமா? எங்களுடன் உணவருந்தி விட்டு மணிமேகலையின் இசை அமுதையும் அருந்தி விட்டுத்தான் போக வேண்டும்" என்று வற்புறுத்தினாள் நந்தினி.

வந்தியத்தேவன் அதற்கு இணங்க வேண்டாம் என்று இளவரசருக்குச் சமிக்ஞை செய்தான். அதை அவர் கவனிக்கவேயில்லை.

"இளவரசிகளின் சித்தம் எங்கள் பாக்கியம்" என்றார் கரிகாலர்.

"மணிமேகலை! உன் மனோரதம் நிறைவேறி விட்டது. சமையல் ஆகி விட்டதா என்று போய்ப் பார்! இல்லாவிடில், சற்று துரிதப்படுத்து" என்று ஏவினாள் நந்தினி.

மணிமேகலை உடனே எழுந்து சமையல் நடந்த இடத்தை நோக்கிச் சென்றாள்.

அதே சமயத்தில் வந்தியத்தேவனும் எழுந்து நின்று கொண்டு சுற்று முற்றும் பார்த்தான்.

அதை நந்தினி கவனித்து விட்டு, "சற்று முன் பிறருடைய மனத்தில் உள்ளதை அறியும் மந்திர சக்தி எனக்கு உண்டு என்று சொன்னேன் அல்லவா! அதை இப்போது பரீட்சை பார்க்க விரும்புகிறேன். வல்லத்து இளவரசரின் மனத்தில் இப்போதுள்ள எண்ணத்தைச் சொல்லட்டுமா?" என்று கேட்டாள்.

கரிகாலர் சிரித்துக் கொண்டே



"சொல்லுங்கள், பார்க்கலாம்!" என்றார்.

"அந்தப் புலியைக் கொன்று இந்தப் பெண்களைக் காப்பாற்றியது பெருந்தவறு என்று பச்சாத்தாபப் பட்டுக் கொண்டிருக்கிறார். இவர்கள் இருவரும் அந்தப் புலியின் வயிற்றுக்குள் போயிருந்தால் மிக்க நன்றாயிருக்கும் என்று எண்ணமிடுகிறார்."

கரிகாலர் மேலும் சிரித்துக் கொண்டே "நண்பா! நீ அப்படி எண்ணமிடுகிறாயா?" என்று கேட்டார்.

"இல்லை, ஐயா! அப்படி நான் எண்ணவில்லை. ஆனால் புலியைப் பற்றியும் இவர்களைப் பற்றியும் எண்ணியது உண்மைதான். இவர்களிடம் அகப்பட்டுக் கொண்ட புலி எப்படி உயிரோடு தப்பிப் பிழைத்தது என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறேன்!" என்றான்.

"என்ன, தம்பி! உளறுகிறாய்? புலி தப்பிப் பிழைத்ததா? மறுபடியுமா? செத்த புலியின் உடல் தண்ணீரில் மிதந்ததே! அது எங்கே?" என்று இளவரசரும் எழுந்து நின்று கேட்டார்.

"அதோ பாருங்கள்!" என்று வந்தியத்தேவன் சுட்டிக் காட்டினான்.

அவர்கள் இருந்த இடத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் மரக்கிளைகளின் இடையில் தண்ணீர்க் கரை தெரிந்தது. அங்கே இளவரசிகள் வந்த படகு கட்டிப் போட்டிருந்தது. அந்தப் படகின் முனையை முன்னங் கால்களினால் பற்றிக் கொண்டு சிறுத்தை படகில் ஏற முயன்று கொண்டிருந்தது.

"ஆகா! இந்தப் புலியின் உயிர் வெகு கெட்டி!" என்றார் கரிகாலர்.

"ஐயா! வாருங்கள், போய் அதைக் கொன்று விட்டு வரலாம். காயம் பட்ட புலியை உயிரோடு விடுவது தவறு!" என்றான் வல்லவரையன்.

"வாணர் குலத்து வீரரே! நீங்கள் இரண்டு வீரர்கள் ஒரு காயம் பட்ட புலிக்காக ஏன் சிரமப்பட வேண்டும்? மணிமேகலையைக் கூப்பிடுகிறேன். அவள் தன் கையில் உள்ள சிறிய கத்தியினால்புலியைக்கொன்று விட்டு வருவாள்!" என்றாள் நந்தினி.

"பார்த்தாயா, நண்பா! பழுவூர் ராணி நமது வீரதீரத்தைக் குறித்து அவ்வளவு பெருமதிப்பு வைத்திருக்கிறார். நானும் வர வேண்டுமா? நீ மட்டும் போய் வருகிறாயா?" என்றார் கரிகாலர்.

"அல்லது மணிமேகலையை அனுப்பலாமா?" என்றாள் நந்தினி.

"மணிமேகலையை அனுப்பலாம். ஆனால் அந்தப் பெண் ஒருவேளை காயம்பட்ட புலிக்கும் அஞ்சனம் தடவிப் பிழைக்க வைத்துக் கொண்டு வந்து விட்டால் என்ன செய்கிறது?" என்று வந்தியத்தேவன் முணுமுணுத்தான்.

"என்ன யோசிக்கிறாய்?" என்றார் இளவரசர்.

"காயம்பட்ட புலியின் தலையை வெட்டிக் கொண்டு வந்து பழுவூர் அரசியின் காலடியில் சமர்ப்பிக்கலாமா என்று யோசிக்கிறேன். அப்போதாவது அவர் திருப்தியடைகிறாரா, பார்க்கலாம்" என்று சொல்லி விட்டு வந்தியத்தேவன் விடுவிடு என்று நடந்தான்.

"அந்த மூடன் சொன்னதைக் கேட்டீர்களா? காயம்பட்ட புலியின் தலையை வெட்ட ரொம்ப வீரம் வேண்டுமா?" என்று கரிகாலர் கேட்டுக் கொண்டே சிரிக்கத் தொடங்கியவர், நந்தினியின் முகத்தைப் பார்த்துவிட்டுப் பாதியில் சிரிப்பை நிறுத்தினார்.

"அதைப் பற்றித் தாங்கள் அல்லவோ அபிப்பிராயம் சொல்ல வேண்டும்?" என்றாள் நந்தினி.

கரிகாலரின் தேகமெல்லாம் சிலிர்த்தது.


தழுதழுத்த குரலில், "நந்தினி! கந்தமாறனிடம் நீ ஓலை கொடுத்து அனுப்பினாய். அதனாலேதான் நான் இவ்விடம் வந்தேன். இல்லாவிட்டால் வந்திருக்க மாட்டேன்" என்றார்.

"என் வேண்டுகோளுக்கு இத்

தனை காலங் கழித்தாவது மதிப்புக் கொடுத்தீர்களே! மிக்க வந்தனம்!'' என்றாள் நந்தினி.

''சென்று போனதையெல்லாம் நீ மறந்து விட்டாய் என்று நினைத்தேன். அதனாலேதான் ஓலை அனுப்பினாய் என்று கருதினேன்....''

''சென்றதையெல்லாம் மறக்க முடியுமா, ஐயா! நீங்கள் எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா...?''



''மறக்க முடியாதுதான். என்னாலும் மறக்க முடியவில்லை! நீ கண்ணும் கண்ணீருமாக நின்று என்னிடம் ஒரு வரம் கேட்டாய். அதை நான் கொடுக்கவில்லை. அந்தச் சமயம் ஏதோ வெறி கொண்டிருந்தேன். அதையெல்லாம் நான் இன்னமும் மறக்கவில்லைதான். ஆனால் எதற்காக ஓலை கொடுத்து அனுப்பினாய்? எதற்காக என்னை இவ்விடம் வரச் சொன்னாய்?'' என்று கேட்டார் இளவரசர்.

''ஐயா! தஞ்சாவூருக்குத் தாங்கள் மூன்று ஆண்டுகளாக வரவில்லை. நோய்ப்பட்டிருக்கும் தங்கள் தந்தையைப் பார்க்கவும் வரவில்லை....''

''அவர் எனக்கு மட்டும் தந்தை அல்ல, நந்தினி!...''

''ஆம், இளையபிராட்டிக்கும் தந்தைதான்! பொன்னியின் செல்வருக்கும் தந்தைதான்! ஆயினும் தங்களைப் பார்க்காததுதான் தங்கள் தந்தைக்குப் பெருங் குறையாக இருக்கிறது. தாங்கள் வராமைக்குக் காரணம் நான் என்று சக்கரவர்த்தியிடம் யாரோ சொல்லியிருக்கிறார்கள். அதனால் அவர் என்னைப் பார்ப்பதே கிடையாது. ஐயா! எனக்கு ஏற்கெனவே தாங்கள் செய்த தீங்கெல்லாம் போதாதா? இந்தப் பழி வேறு எனக்கு ஏற்பட வேண்டுமா?....''

''ஆனால் அது உண்மைதானே? உன் காரணமாகத்தான் தஞ்சைக்கு நான் வரவில்லை.....''

''அப்படியானால், நான் தஞ்சையை விட்டுப் போய் விடுகிறேன். தாங்கள் தஞ்சைக்கு வந்து, தங்கள் தந்தையின் சிம்மாசனத்தில் அமர்ந்து மணிமகுடம் சூட்டிக் கொண்டு....''

''நந்தினி! அது ஒரு நாளும் நடவாத காரியம். எனக்குச் சிம்மாசனத்தில் இப்போது ஆசை இல்லை. மதுராந்தகத்தேவன் சிங்காதனத்தில் அமர்ந்து சாம்ராஜ்யத்தின் மணிமகுடத்தைச் சூட்டிக் கொண்டு இராஜ்யம் ஆளட்டும்....''

''ஐயா! மதுராந்தகரைத் தங்களுக்கு நன்றாகத் தெரியும். அவரால் இந்தப் பெரிய சாம்ராஜ்யத்தை ஒரு நாளேனும் ஆள முடியுமா?''

''அவனால் ஆள முடியாவிட்டால், அவனுக்கு உதவி செய்யப் பழுவேட்டரையர்கள் இருக்கிறார்கள். நீயும் இருக்கிறாய்....''

''ஐயா! தங்கள் விருப்பம் இப்போது நன்றாய் எனக்குத் தெரிகிறது. நான் தஞ்சையிலிருந்து, பழுவூர் அரண்மனையிலிருந்து, போய் விடுகிறேன்... தாங்கள் தஞ்சைக்கு வந்து....''

''இல்லை, இல்லை! நீ தவறாக எண்ணுகிறாய்! எனக்கு அந்த எண்ணமே கிடையாது. உனக்கு நான் முன்னம் செய்த குற்றமெல்லாம் போதும். பழுவூர் அரண்மனையிலிருந்து உன்னைத் துரத்திய பாதகத்தையும் நான் சேர்த்துக் கட்டிக் கொள்ள வேண்டாம்....''

''ஐயா! நாம் இருவரும் தஞ்சையில் இருக்க முடியாதா? அந்தப் பெரிய நகரில் நாம் இரண்டு பேரும் இருக்க இடம் இல்லையா? ஒருவரையொருவர் பார்க்க வேண்டிய அவசியங்கூட இல்லையே?''

''பார்க்க வேண்டிய அவசியமில்லாமலிருக்கலாம். ஆனால் மனத்தில் நினைக்காமல் இருக்க முடியுமா? சற்று முன் நீதான் சொன்னாய்! சென்று போனதையெல்லாம் மறக்க முடியாது என்று. உன் நெஞ்சத்திலுள்ள காயத்தைப் பற்றியும் சொன்னாய். என் நெஞ்சத்திலும் காயம் பட்டிருக்கிறது. என்னாலும் மறக்க முடியவில்லை.''

''மறக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் மன்னிக்க முடியாதா? நான் செய்த குற்றங்களை இத்தனை காலங் கழித்த பிறகும் மன்னிக்க முடியாதா?''

''நந்தினி! நான் மன்னிக்கும்படியாக நீ ஒரு குற்றமும் செய்யவில்லை. குற்றம் செய்தவன் நான். உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியவன் நான். காஞ்சியிலிருந்து புறப்பட்ட போது கூட உன்னிடம் மன்னிப்புக் கேட்டுப் பெறலாம் என்ற எண்ணத்துடன் கிளம்பினேன். ஆனால் வழியில் நான் அறிந்த ஒரு செய்தி உன்னிடம் மன்னிப்புக் கேட்கவே

என்னைத் தகுதியற்றவன் ஆக்கி விட்டது.''

''கோமகனே! தாங்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்பது எந்த வகையிலும் தகுதியற்றதுதான். தாங்கள் புவி ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரர். நான் பெற்ற தாய் தந்தையரால் கைவிடப்பட்ட அனாதைப் பெண்....''

''இல்லை, நந்தினி நீ அநாதைப் பெண் அல்ல!''

''தனாதிகாரி பழுவேட்டரையர் என்னை மனமுவந்து தம் இளையராணியாக அங்கீகரித்தார். ஆனாலும்....''

''அது மட்டுமல்ல, நந்தினி! எப்படி உன்னிடம் உண்மையைச் சொல்வது என்று தயங்குகிறேன்....''

''இந்தப் பேதைப் பெண்ணிடம் தாங்கள் எதை வேணுமானாலும் தயங்காமல் சொல்லலாம். வழியோடு போகிறவர்கள் எல்லாரும் என்னிடம் ஏதேதோ சொல்லத் துணிகிறார்கள். என்னை வம்புக்கு இழுத்து அவமதிக்கிறார்கள்.....''

''நந்தினி! இனி அவ்விதம் யாரேனும் நடந்து கொண்டால் என்னால் ஒரு கணமும் பொறுக்க முடியாது. நீ சொல்ல வேண்டியதுதான். அவனை உடனே யமனுலகுக்கு அனுப்பி விட்டு மறு காரியம் பார்ப்பேன்.....''

''எப்போதும் என்னிடம் தாங்கள் அத்தகைய கருணை காட்டி வந்திருக்கிறீர்கள். பழையாறை இளைய பிராட்டியோடு கூட எனக்காகச் சிறு பிராயத்தில் சண்டை பிடித்திருக்கிறீர்கள். அவர் தங்கள் சகோதரி....''

''நந்தினி! நீயும் என் சகோதரிதான்! இளையபிராட்டியைப் போல நீயும் என் சகோதரி; நான் உன் சகோதரன்!''

''கோமகனே! நான் இன்னொருவரை மணந்ததிலிருந்து என்னைத் தங்கள் சகோதரியாகப் பாவிக்கிறீர்கள். அது தங்கள் குலத்தின் பெருமைக்கு உகந்ததுதான். ஆனால் சக்கரவர்த்தியின் திருக்குமாரரை, மூவுலகும் ஆளப் பிறந்தவரை, நான் எவ்வாறு என் சகோதரராகக் கருத முடியும்.....?''



''நான் சொல்வதை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை, நந்தினி! உண்மையாகவே நீ என் சகோதரி; மூவுலகும் ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரி.....!''

இதைக் கேட்ட நந்தினி கலகலவென்று சிரித்தாள்.

''தங்களுடைய சித்தம் குழம்பியிருக்கிறதா, எனக்குத்தான் பைத்தியம் பிடித்திருக்கிறதா, தெரியவில்லை!'' என்று கூறினாள்.

''சித்தப் பிரமையும் இல்லை; பைத்தியமும் இல்லை.''

''அப்படியானால், இந்தப் பேதையைப் பரிகாசம் செய்கிறீர்களா?''

''என்னைப் பார்த்துச் சொல், நந்தினி! உண்மையாகவே உன்னைப் பரிகசிப்பவனாகத் தோன்றுகிறதா?''

''ஐயா! தாங்கள் என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்! என்னைப் பார்த்தால், சக்கரவர்த்தியின் திருக்குமாரி என்று தோன்றுகிறதா? இராஜ குலத்தின் இலட்சணம் என் முகத்திலே விளங்குகிறதா?''

''நந்தினி! நீ ஐந்து வயதுப் பெண்ணாக இருந்தது முதல் உன் முகத்தைப் பார்த்திருக்கிறேன். உன் முகத்தில் ஜொலித்த இணையில்லாத செளந்தரியத்தைக் கண்டு வியந்திருக்கிறேன். அதற்குக் காரணம் மட்டும்

இப்போதுதான் தெரிந்தது. காஞ்சியிலிருந்து புறப்பட்ட பிறகு நடுவழியிலேதான் தெரிந்தது. சோழ குலத்தில் வாழ்க்கைப்பட்டவர்களிலே வைதும்பராஜன் மகள் கலியாணிக்கு இணையான அழகுடையவர் யாரும் இல்லை என்பது உலகப் பிரசித்தம். அவர் என் பாட்டி. இன்னமும் பழையாறையில் உயிரோடு இருந்து வருகிறார். எழுபது வயது ஆன பிறகும் அவர் முகத்தில் விளங்கும் தெய்வீகமான அழகு கண்களைக் கூசச் செய்யும். அவருடைய அழகெல்லாம் இப்போது உன்னிடந்தான் தஞ்சம் புகுந்திருக்கிறது. அது என்னிடம் இல்லை; இளையபிராட்டியிடம் இல்லை; அருள்மொழியிடமும் இல்லை. என் தந்தையின் மூலமாக உன்னிடத்தேதான் வந்திருக்கிறது....''

''ஐயா! இது என்ன சொல்கிறீர்கள்? உண்மையிலேயே எனக்குச் சித்தக் கோளாறுதான் போலிருக்கிறது. அல்லது என் காதுகளில் ஏதேனும் கோளாறு இருக்க வேண்டும்.....''

''இல்லை, நந்தினி, இல்லை! சித்தக் கோளாறும் இல்லை; உன் காதிலே கோளாறும் இல்லை. நீ என் தந்தையின் மகள்; ஆகையால் என் சகோதரி! சக்கரவர்த்தி என் அன்னையை மணப்பதற்கு முன்னால் ஈழ நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிலே ஒரு மாதரசியைக் காதலித்துக் காந்தர்வ மணம் புரிந்து கொண்டார். அவளுடைய புதல்வி நீ; ஆகையால் என் சகோதரி!'' என்று கரிகாலர் ஆதுரம் ததும்பிய குரலிலே கூறினார்.

நந்தினி பெருந் திகைப்பு அடைந்தவள் போலச் சிறிது நேரம் ஆதித்த கரிகாலரைப் பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு அவளுடைய முகத்தில் சிறிது தெளிவு தோன்றியது.

''ஐயா! இந்தச் செய்தியைத்தானா தாங்கள் காஞ்சியிலிருந்து புறப்பட்ட பிறகு அறிந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஆம், நந்தினி! அதை அறிந்ததும் ஏற்கெனவே விளங்காமலிருந்த பல விஷயங்கள் எனக்கு விளங்கின.''

''கோமகனே! தங்களுக்கு இந்தச் செய்தியை வழியிலே சொன்னவர் யார்? வல்லத்து இளவரசரா?''

''அவன்தான்! ஆனால் அவனாகச் சொல்லவில்லை. இளையபிராட்டி குந்தவை அவனிடம் சொல்லி அனுப்பினாள்!''

''ஆகா! தங்களையும் என்னையும் பிரித்து வைப்பதற்கு ஆதிநாளிலிருந்து எத்தனையோ சூழ்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். இன்னமும் அவர்களுடைய சூழ்ச்சிகள் முடிந்தபாடில்லை.....''

''நீ நினைப்பது தவறு, நந்தினி! இதில் சூழ்ச்சி ஒன்றுமில்லை. சிறு பிராயத்தில் உன்னையும் என்னையும் பிரித்து வைப்பதற்குப் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி செய்த முயற்சிகள் எனக்குப் புரியாமலிருந்தன. அதற்காக அளவில்லாத கோபம் அடைந்தேன். அவர் எவ்வளவு பயங்கரமான விபத்திலிருந்து நம்மைத் தடுத்துக் காப்பாற்றினார் என்று இப்போதுதான் தெரிகிறது. ஆனால் உண்மையை அவர்கள் அப்போதே சொல்லியிருக்கலாம். சொல்லாத காரணத்தினால் உனக்குப் பெரும் அநீதி செய்தார்கள்; எனக்கும் தீங்கு செய்து விட்டார்கள். போனது போகட்டும். சென்றதை

அருள்வாக்கு

இப்போது ஸைகாலஜியில் சொல்கிறார்கள், நமக்கே தெரியாமல் நாம் எப்பொழுதோ ஆழமாக, அழுத்தமாக நினைத்த விஷயங்கள்தான் தாமாக மனஸின் மேல்மட்டத்துக்கு எழும்பி வருகிறது என்கிறார்கள். குறிப்பாக, வெளி வியாபாரமில்லாமல் தூங்குகிற போது இம்மாதிரி பழைய ஸ்டாக் கிளம்பி வந்து ஸ்வப்னமாகிறது என்கிறார்கள். தூக்கம் தான் என்றில்லை. கார்யமில்லாமல் இருக்கிற போதுகளிலெல்லாம், ஒரு த்யானம் என்று உட்கார்ந்தால் கூட, ஜலத்துக்கடியே கையினால் அழுத்தி வைக்கிற கார்க்கையை எடுத்தவுடன் மேலே கிர்ரென்று வருகிற மாதிரி, உன் நினைப்புக்கள் மேலே வந்து

நம்மைப் பிடித்துக் கொள்கின்றன. சாஸ்திரங்களிலும் பூர்வ வாஸனை என்று இதுகளைச் சொல்லி, இவற்றை அடியோடு இல்லாமல் வாஸனாக்ஷயம் பண்ணிக் கொண்டால்தான் மனஸ் பரம தெளிவாகத் தெளிந்து நின்று அதில் ஆத்ம ஜ்யோதிஸ் பளீரென்று அடிக்கும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் நாம் 'போ போ' என்று பிடித்துத் தள்ளினாலும் அது போகுமா? போகாது. அதைப் போகப் பண்ணுவதற்கு வழி நம்மால் எவ்வளவு முடியுமோ அத்தனை பாடும் பட்டு ஸத் விஷயங்களை, ஸத்துக்களிலெல்லாம் பரம ஸத்தான — 'ஏகம் ஸத்' தான — பரமாத்மாவை நினைத்துக் கொண்டேயிருப்பதுதான். இந்த நல்ல வாஸனையை 'வா வா' என்று சொல்லிக் கொண்டேயிருந்து வரவழைத்து மனஸுக்குள் உட்கார்த்தி வைத்துக் கொண்டால்தான் கெட்ட வாஸனைகள் தங்களுக்கு இடமில்லை என்று ஓடிப் போகும்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

யெல்லாம் நாம் இருவரும் மறந்து விடுவோம்; மறக்க முடியா விட்டாலும் மன்னித்து விடுவோம்....."

"ஐயா! வல்லத்து இளவரசர் வழியில் தங்களைச் சந்தித்து இந்தக் கதையை மட்டுந்தான் சொன்னாரா? இன்னும் ஏதாவது சொன்னாரா?" என்று நந்தினி கேட்டாள்.

"கதை என்று ஏன் கூறுகிறாய், நந்தினி! உனக்கு நம்பிக்கை இல்லையா?" என்றார் ஆதித்த கரிகாலர்.

"தாங்கள் கூறிய செய்தி அவ்வளவு எளிதாக நம்பக் கூடியதா? சக்கரவர்த்தியின் குமாரியாகப் பிறந்து நான் இந்தக் கதியை அடைந்திருக்க முடியுமா? இவ்வளவு கொடுமையான துன்பங்களுக்கு உள்ளாகியிருக்க முடியுமா? வந்தியத்தேவன் கூறியது உண்மையாகவே இருக்கட்டும். இது மட்டுந்தான் அவர் சொன்னாரா? வேறு ஒன்றும் சொல்லவில்லையா?" என்றாள் நந்தினி.

கரிகாலர் சிறிது தயங்கிவிட்டு, "ஆம்; இன்னொரு செய்தியும் சொன்னான். நீ பாண்டிய நாட்டுச் சதிகாரர்களோடு சேர்ந்திருப்பதாகச் சொன்னான். சோழர் குலத்தையே கருவறுத்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாகச் சொன்னான். அதற்காக, பிடியில் மீன் சின்னம் உள்ள கொலைவாள் ஒன்றை நீ வைத்துப் பூஜித்து வருவதாகவும் சொன்னான். கொள்ளிடக் கரைக் காட்டில் பள்ளிப் படையின் அருகில் யாரோ ஒரு சிறுவனை வைத்து மணிமகுடம் சூட்டியதாகவும் கூறினான். நந்தினி! அதையெல்லாம் நீ இனி மறந்து விடு! சோழர் குலத்தின் பெருமைக்கெல்லாம் என்னைப் போல் உரிமையுள்ளவள் நீ. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வி. எங்கள் அருமைச் சகோதரி. உனக்கு இதுவரை செய்த அநீதிகளுக்கெல்லாம் பரிகாரம் செய்வதே எனது முதற் கடமையாக இனி வைத்துக் கொள்வேன்....."

"ஐயா! இவ்வளவையும் தாங்கள் நம்புகிறீர்கள் அல்லவா? அப்படியிருக்கும் போது, கடம்பூருக்கு வந்து இத்தனை நாள் வரையில் காத்திருந்ததேன்? முன்னாடியே என்னைச் சந்தித்துப் பேச ஒரு முயற்சியும் செய்யாதது ஏன்?"

"என் மனத்தில் ஏற்பட்டிருந்த குழப்பந்தான் காரணம். நம்முடைய புதிய உறவை என் மனத்தில் நிலைப்படுத்திக் கொள்ள அவகாசமும் வேண்டியிருந்தது. எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லத்தக்க சந்தர்ப்

பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பலர் முன்னிலையில் சொல்லக்கூடிய செய்தியா இது? அதிர்ஷ்டவசமாக, ஒரு காட்டுப் பன்றியும் ஒரு சிறுத்தைப் புலியும் இன்றைக்கு அத்தகைய சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தன..."

நந்தினி குறுக்கிட்டு, "ஐயா! காட்டு மிருகங்கள் பொல்லாதவைதான்! ஆனால் மனிதர்களைப் போல் அவ்வளவு கொடுமை செய்யக்கூடியவை அல்ல. அது இன்றைக்குத்தான் எனக்கு நன்கு தெரிந்தது" என்றாள்.

"சகோதரி! சென்று போனதையெல்லாம் மறக்க முடியாது என்று சற்று முன்னால் நீ சொன்னாய். அதை நானும் ஒப்புக் கொண்டேன். மறக்க முடியா விட்டாலும் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதற்கு நீ மறுமொழி சொல்லவில்லை."

"கோமகனே! தாங்கள் இதற்கு முன்னால் எனக்குச் செய்த துரோகங்கள், குற்றங்கள் எல்லாவற்றையும் மன்னித்து விடுவேன்; ஒருவேளை மறந்தும் விடுவேன். ஆனால் இன்றைக்குச் செய்த துரோகத்தை என்றைக்கும் மறக்கவும் முடியாது; மன்னிக்கவும் முடியாது...."

"ஐயோ! இன்றைக்கு நான் என்ன செய்தேன்? நான் அறிந்து ஒரு துரோகமும் உனக்குச் செய்யவில்லையே?"

"சொல்லுகிறேன். அதோ வருகிறானே, அந்த தூர்த்தனைப் பாருங்கள்!"

"வல்லவரையனையா சொல்கிறாய்?"

"ஆமாம்; புலியின் தலையைக் கொண்டு வராமல் வெறுங்கையுடனே வருகிறானே, அவன்தான்! ஒருநாள் அவன் தஞ்சையில் என்னைப் பார்த்தான். என்னுடைய பாதம் அவன்பேரில் பட்டால் அதை 'ஒரு பாக்கியமாகக் கருதுவேன்' என்று சொன்னான். அவனை என் காலால் தொட்டு உதைக்கவும் நான் இஷ்டப்படவில்லை. வேலைக்காரர்களை அழைப்பதாகச் சொன்ன பிறகு ஓடி விட்டான். அவனுடைய நீசத்தனமான எண்ணத்துக்கு நான் இணங்காததற்காகத் தங்களிடம் இத்தகைய பயங்கரமான கற்பனைகளைப் புனைந்து சொல்லியிருக்கிறான். நான் விரும்பினால் தங்களுடைய தலையையே கொண்டு வந்து விடுவதாக உறுதி கூறினான். இதையெல்லாம் தங்களிடம் நான் சொல்லி விடப் போகிறேனே என்று அவனுக்குப் பயம். அதற்காகவே தாங்கள் கடம்பூர் மாளிகைக்கு வராமல் வழியிலே தடுத்து விடப் பார்த்தான். அதனாலேயே தங்களுடன் இணை பிரியாமல் சுற்றி வந்து கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட நீசன், என் காலினால் தொடுவதற்குக் கூட நான் விரும்பாதவன், அவன் என் உடம்பு முழுவதையும் அணைத்துத் தூக்கிக் கரையேற்றும்படி செய்தீர்கள். அதைப் பார்த்துக் கொண்டுமிருந்தீர்கள். இதை நான் மறக்க முடியுமா? அல்லது மன்னிக்கத்தான் முடியுமா?"

இவ்விதம் நந்தினி கண்களில் கோபக் கனல் பொங்கக் கூறி வந்த பயங்கரமான மொழிகளைக் கேட்டுக் கரிகாலருடைய தலை உண்மையிலேயே சுழலத் தொடங்கியது. பளிங்கு மண்டபம், ஏரியின் நீர், காட்டு மரங்கள் எல்லாம் சுழன்றன. சற்று நிதானித்துக் கொண்டு, "சகோதரி! நந்தினி! நீ சொல்வது உண்மையாக இருக்க முடியுமா? எதை நம்புவதென்று எனக்கு மெய்யாகவே தெரியவில்லை. வந்தியத்தேவன் அவ்வளவு நீசனாக இருக்கக்கூடுமா? அவனுக்கு இந்தப் பேதைப் பெண் மணிமேகலையைத் திருமணம் செய்விப்பது என்று சற்று நேரத்துக்கு முன்னால் கூட எண்ணினேனே?" என்றார்.

"ஐயா! நான் சொல்வதை மட்டும் நீங்கள் நம்பிவிட வேண்டாம். எப்போதுமே அவசரப்பட்டுத் தாங்கள் காரியம் செய்து விடுவீர்கள். இந்தத் தடவை அப்படிச் செய்ய வேண்டாம். இரண்டு நாள் பொறுத்திருந்து இவனுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வாருங்கள். தாங்களே தெரிந்து கொள்வீர்கள்!" என்றாள் நந்தினி.

(தொடரும்)

தன்னம்பிக்கை



ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதீர்கள். நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள்.

மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும் போது ஆணோ, பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கை தான் என்று சுவாமி விவேகானந்தர் வீர முழக்கமிடுகிறார்.


ஆனால் நம்மில் பலர் ஓரளவு கல்வித் தகுதியிருந்தும் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் பேசத் தயங்குகிறார்கள்.

தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமும், முறையான பயிற்சியின்மையுமே இத்தயக்கத்திற்கான முக்கியமான காரணங்களாகும்.

உங்களது இத்தயக்கத்தைப் போக்கி நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத விவேகானந்தா கல்வி நிலையத்தினர் தபால் மூலம் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள். நேர்முகப் பயிற்சியும் உண்டு. இப்பயிற்சியைப் பற்றி மேலும் தகவல் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுதி இலவசமாக தகவல் புத்தகத்தைப் பெற்றுப் பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாமே!

விவேகானந்தா கல்வி நிலையம் (Regd)

9, மேட்லி ரோடு, தி. நகர், சென்னை-600 017



கடவுள் தப்பினார்!

அண்மையில் மிகச் சிறப்பான முறையில் பவனி வந்த திருவாரூர் திருத்தேருக்குச் சுமார் அறுபத்தி நாலு ஆண்டுகளுக்கு முன் ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது, தெரியுமா?

1925 ஆம் ஆண்டு, வெளிச்ச விழுதுகள் வீரியத்துடன் இறங்கும் பங்குனி மாதத்தின் ஒரு நாள் மதியம் மூன்று மணி.

ஆரூரின் ஆழித்தேர், மேலைக்கோபுரத்துக்கும் திருக்குளத்துக்கும் இடையே மேரு போல் நெடிதுயர்ந்து நிற்கிறது.

வடம் பிடிக்கப் போவதன் முன்னறிவிப்பாய் வழக்கம் போல் வாணக்காரன் அதிர்வெடி எழுப்பினான்.

கலைச்சின்னம் கண்களை விட்டுக் காணாமல் போக வேண்டிய காலம் வந்தமையால், பொறியொன்று தெறித்துத் தொங்கும் தொம்பையைத் தொட்டுப் பார்க்க...

தீப்பிடித்தது. நொடிகளுக்குள் திபுதிபுவென்று தீநாக்குகள் தேரின் விதானத்தை விரைந்து சுவைக்க....

மக்கள் நான்கு புறமும் சிதறி ஓடினார்கள். ஆனால், இரண்டு பேர் மட்டும் தேரை நோக்கி ஓடினார்கள்.

ஒருவர், — பிச்சக்குருக்கள். மற்றவர், அவரைத் தொடர்ந்து ஓடிய மாங்குடி நடேசக் கொத்தனார்.

நொடிப் போழ்துகளில் தேர்த் தட்டை அடைந்தார்கள். அதற்குள் விதானம் தீயால் தன்னைத் துவட்டிக் கொண்டிருந்தது.

திரைச் சீலையை எடுத்துச் சுவாமி(விக்கிரகம்)யை வரிந்து கட்டி, சிம்மாசனத்தைக் கால்களால் உதைத்து உதைத்து நடேசனின் உதவியோடு கிழக்குப் பக்கமாய்க் கீழே தள்ளிவிட்டு, தாமும் குதித்தார் குருக்கள்.

அப்போது மண் வீதி என்றாலும் பெருங் கருணையின் அருட்திறத்தால் விக்கிரகத்துக்கு எதும் நேரவில்லை.

குருக்கள் மிதமான தீக்காயங்களுடன் விழுந்த வேகத்துக்கு எழுந்தார். நடேசன் ரதத்தின் உள் வழியாய் இறங்கி ஓடி வர, தேர்க்காலில் ஒளிந்து கொண்டிருந்த சாமிநாதப் பிள்ளை என்பவரும் சேர்ந்து கொண்டார். எண்ணெய்ப் பூச்சில் இருந்த பீடமும் எரியத் தொடங்கிற்று.

அதே நேரத்தில் மூவரும் ஏதோ ஓர் உந்துதலால் அசுர வேகத்தில் (சாதாரணமாய் சுவாமியைத் தூக்கப் பத்து பேர் தேவைப்படும்) சுவாமியைத் தூக்கிக் கொண்டு மேலைக் கோபுரத்துக்குள் ஓடிச் சென்று, கீழே விழுந்தார்கள்.

''ஆண்டவனைக் காத்துத் தந்தீர்கள்'' என்றனர் பக்தர்கள்.

அம்மூவருமோ, ''இறைவன் எங்களை இயக்கித் தன்னைத்தானே காத்துக் கொண்டான்'' என்றனர், ஆனந்தக் கண்ணீர் பெருக்கி.

அதனால், தேர் என்றால் எல்லோருக்கும் திருவாரூர் நினைவுக்கு வருமென்றால், திருவாரூர் வாசிகளுக்குப் பிச்சக் குருக்களும், நடேசக் கொத்தனாரும் ஞாபகத்துக்கு வந்து போவார்கள்.


'ஐயைந்துக்கு அப்புறத்தானை' என்று தியாகேசனை நயம் தோன்ற நவின்றார், நாவுக்கரசர். மந்திர சாத்திர விற்பன்னரும், ஆகமவல்லாரும், சைவ இலக்கியவாதிகளும் இதுகாறும் சோமாஸ்கந்த வடிவ (தியாகராஜத் திருமேனி)த்தில் தெளிவாய் ஒரு முடிவுக்கு வரவில்லை. அத்தகைய திருமேனியைக் காப்பாற்றித் தந்த பெரியவர்களுக்கு, தேரோடும் இந் நாளில் அஞ்சலி செய்வோம்.

— அடியார்க்கு நல்லான்.

பத்திரிகை ஆசிரியர் — எழுத்தாளரிடம்: ''நீங்க மத்தவங்க கதைகளைக் காப்பி அடிக்க எழுதறதிலே மஹா கில்லாடியா இருக்கலாம்... அதுக்காக... அந்தப் புத்தகத்தை அப்படியே 'ஜெராக்ஸ்' எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கிறது அவ்வளவா நல்லா இல்லே...!''

— ஏ. ஆர். வீரராகவன்.




பால் தேவைப்படும் போதெல்லாம், அமூல்யா
இன்ஸ்டன்ட் மில்க்மிக்ஸ் கொண்டு தயார்
செய்யுங்கள். வெதுவெதுப்பான நீரில் கலந்து,
உங்களின் டீ அல்லது காப்பிக்கு உபயோகியுங்கள்.
அல்லது பாலாகவும் உபயோகிக்கலாம். இதன்
ருசி உங்களுக்கு மிகவும் பிடிக்கும். காரணம்
இதனை அளிப்பது அமூல். இதில் அமூல்
கொண்டுள்ள சுவையும் தூய்மையும் உண்டு.
Amulya
Instant Milkmix
Amulya
Instant Milkmix
பால்-எப்போது தேவையோ அப்போது
OPERATION FLOOD
விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப். மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிட்.
ஆனந்த்-388 001.
ULKA-3-88-T



அன்னம்

ஒரு முக்கோணத்தில் நான்காவது புள்ளி

விஜயவேல் நாடக சபாவின் வெற்றிகரமான சமூக நாடகம் மணப்புயல்.

ஒவ்வொரு காட்சிக்கும் கொட்டகை நிரம்பி வழியும். எல்லோருடைய நடிப்பிலும் ஜீவன் இருக்கும்.

கதாநாயகனாக நடிக்கும் குமரனும், நாயகி ராமலட்சுமியும் வில்லன் வேடம் தாங்கும் ராஜவேலுவும் அந்த அந்தப் பாத்திரங்களாக மாறிவிடுவார்கள்.

கடைசிக் காட்சியில் கதாநாயகனைக் கண்மண் தெரியாமல் அடித்துப் போட்டுவிட்டு, வில்லன் கதாநாயகியை இழுத்துக்கொண்டு ஓட முயலும் சமயம் — கதாநாயகன் திரும்பிப் புரண்டு கீழே கிடந்த கைத்துப்பாக்கியால் வில்லனைச் சுட, ரத்தம் பெருக அவன் கீழே சாய, — அப்புறம் மங்களம், சுபமங்களம்தான்!''

இந்த நாடகத்தில் எந்தவிதச் சிக்கலும் இல்லைதான். ஆனால் இதில் பிணைந்துள்ள மூவர் வாழ்க்கையில் தீர்க்க முடியாத சிக்கல் துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்டுவிட்டது.

நாடகக் கதைப்படி ராமலட்சுமி கதாநாயகன் குமரனை விரும்பினாள். ஆனால்! நிஜ வாழ்க்கையில் — மேடைக்கு அப்பால்— அவள் நாட்டம் எல்லாம் வில்லன் ராஜவேலுவின் மேல்தான். ராஜவேலுவுக்கும் அப்படியே...

இரண்டு உள்ளங்கள் மட்டும் பொருமிப் பொருமி வேக, மற்றவர்கள் ''நல்ல பொருத்தம்'' என வாழ்த்தத்தான் செய்தனர்.

ஒருவன் குமரன். நாடகக் கதாநாயகன். நடைமுறையில் வில்லனாக மாற வேண்டிய கட்டாயம்.


வேண்டுமென்றே ஒரு நாள் ராஜாவை அதிகம் குடிக்க வைத்து ராமலட்சுமியை முகம் சுளிக்க வைத்தான். சிறு பூசல் எழுந்தது என்னவோ உண்மை... ஆனால் தொடர்ந்து அவர்கள் நெருக்கம் உறுதிப்பட்டது.

ராஜவேலு ஒன்றும் ஸ்ரீராமச்சந்திரன் இல்லை... வேறு ஒரு நடிகையுடன் தொடர்பு இருக்கிறது எனக் ''கதை'' கட்டிவிட்டான் குமரன். அவன் கட்டியது பொய் எனத் தெரிந்த பின்னர், ராமலட்சுமி குமரனுடன் நாடக மேடையைத் தவிர வெளியே ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை...

இதையெல்லாம் அப்பாவி போல் கண்டும் காணாமல், கேட்டும் கேட்காமல் இருந்தார் — கம்பெனி முதலாளி கார்மேகம்.

மனிதருக்குக் கல்யாணம் ஆகிக் குழந்தை குட்டிகள் உண்டு. இருந்தும்கூட ராமலட்சுமியின் மெலிந்த இடையும், மதர்த்த இளமையும், மயக்கும் விழிகளும், கொஞ்சும் குரலும் அவர் எண்ணத்தை எங்கெல்லாமோ இழுத்துப் போக — ''சின்ன வீடு'' அமைக்கும் கற்பனையில் மிதந்தார்.

தன் நினைப்பைச் செயல்படுத்தக் கற்றை நோட்டுகள், தங்க வளையல்கள், பட்டுப் புடைவை ஆகியவற்றுடன் ராமலட்சுமியை




அணுக, அவள் புலிபோல் சீறினாள்.

"என் ஐயா... உமக்கு என் அப்பனை விட வயசு ஜாஸ்தியாக இருக்கும்... இப்படியெல்லாம் பேச வெட்கமாக இல்லை...?" என ஏசினாள். அத்தனை பேரையும் கூப்பிட்டு மானத்தை வாங்குவதாகப் பயமுறுத்தினாள். மறுநாள் காலை கம்பெனியை விட்டுச் சொந்த ஊருக்குப் பஸ் ஏறுவதாகக் கூறினாள்.

கார்மேகம் காலில் விழாத குறையாகக்



உங்கள் பிள்ளையை நோய்க்கிருமிகள் ஓயாமல் தாக்கிக் கொண்டே இருக்கின்றன.



நோய்க் கிருமிகளை வெற்றி கொள்ள உங்கள் பிள்ளையின் உடம்பில் போதுமான அளவு நோய் எதிர்ப்புச் சக்தி இருக்கிறதா?

உங்கள் பிள்ளையின் உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தால், அடிக்கடி சளி, இருமல், தொண்டை வலி, ஜுரம், பசியின்மை, வயிற்றுக் கோளாறு போன்ற தொல்லைகள் வரக் கூடும். இதனை உடனே கவனித்து, சரி செய்யாவிடில் பிள்ளையின் உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும் பாதிக்கப்படலாம். உங்கள் பிள்ளைக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கத் தேவையான சத்துக்கள் நிறைந்த

கெஞ்சினார். நடந்தது வெளியே தெரிந்தால் ராஜவேலு அவர் முகத்தை முதுகுப் பக்கம் திருப்பி வைத்து விடுவான். அத்தனை கோபக்காரன். ராமலட்சுமி இல்லையென்றால் கம்பெனியே இல்லை.

''தப்புத்தான் ராமலட்சுமி... வயதான காலத்திலே புத்தி கெட்டுப் போச்சு... தப்பா நினைக்காதே... நீ என் மக போலே...'' எனப் பாட்டை மாற்றிப்போட்டுப் பாடி அவளைச் சமாதானப்படுத்தினார்.

ஆனால் மனத்தில் ஒரு வன்மம் ஆலமரமாகப் படர்ந்திருந்தது.

'பெரிய பத்தினி வேஷமா போடறே... நீ பொறந்து வளர்ந்த இடம் எனக்குத் தெரியாதா...? இந்த ராஜவேலு இருக்கிற தைரியத்துல ஆடறியா? பார்த்துடறேன் நானும்!' என மனத்துக்குள் கறுவினார்.

பகல் சாப்பாட்டிற்குப் பிறகு எல்லோரும் அயர்ந்து உறங்கும் நேரம். நாடகத்தில் உபயோகப்படுத்தப்படும் கைத்துப்பாக்கியை எடுத்தார். அதிலிருந்த ஆறு தோட்டாக்களும் வெற்றுத் தோட்டாக்கள். அடுத்தபடியாக வெடிக்கக் கூடிய வெற்றுத் தோட்டாவை எடுத்து உண்மையான தோட்டாவைப் போட்டார்.

பூனைபோல் துப்பாக்கியை இருந்த இடத்தில் வைத்துவிட்டுத் தம் அறைக்குப் போனார்.

இரவு நாடகத்தின் கடைசியில் – குமரன் இந்தத் துப்பாக்கியால் ராஜவேலுவைச் சுட, அவன் உண்மையிலேயே பிணமாகச் சரிவான். குமரனுக்கும் ராஜவேலுவுக்கும் உள்ள விரோதத்தை ஊர் அறியும். குமரன் கழுத்தில் சுருக்குக் கயிறு இறுகும்.

அப்புறம் இந்த ராமலட்சுமி அவர் காலடியில்... வயசானவன் என்றா சொன்னாள்...! வயசு கூடினால் அனுபவமும் கூடும் என்பதை மறந்து விட்டாளே...

இரவு நாடகம் தொடங்க அரை மணி இருக்கும்.

குமரன் தன் தலையில் பெரிய கட்டோடு வந்தான். ''கீழே விழுந்து விட்டேன் முதலாளி... நெற்றியில் பெரிய காயம். டாக்டர் ஆறு தையல் போட்டிருக்கிறார்...'' என்றான்.

கார்மேகத்திற்கு வியர்த்துக் கொட்டியது. குமரனுக்குப் பதில் கதாநாயகனாக நடிக்க அவரால்தான் முடியும். அவருக்குத்தான் வசனம் மனப்பாடம். நடித்த அனுபவம் அவருக்குத்தான். அவசரம் அவசரமாக ஒப்பனை செய்து கொண்டார்.

கொஞ்சம் கொஞ்சமாகத் தைரியம் வந்தது. கடைசிக் காட்சியில் ராஜவேலுவைப் பார்த்துச் சுடும் போது, துப்பாக்கியை வேறு பக்கம் திருப்பிச் சுட்டால் குண்டு அவன் மேல் படாதே! வேறு ஒரு நாள் திட்டத்தை



வைத்துக் கொண்டால் போயிற்று...

நாடகம் நடந்தது... கார்மேகம் கவனம் வேறு எங்கோ இருந்ததால் தப்புத் தப்பாகப் பேசினார்., கூட்டம் 'விசில்' அடித்துக் கலாட்டா செய்தது.

கடைசிக் காட்சி. கார்மேகம் ஞாபகமாகத் துப்பாக்கியை வேறு பக்கம் திருப்பிச் சுட்டார். ராஜவேலு சுருண்டு விழுந்தான்... காலையும் கையையும் உதைத்துக் கொண்டு கொஞ்ச தூரத்தில் அடங்கிப் போனான்.

திரை இறங்கியது. அடுத்தபடியாக எல்லோரும் மேடையில் நின்று மங்களம் பாட வேண்டும்...

ஆனால் ராஜவேலு எழுந்திருக்கவில்லை.

அவனைப் புரட்டிப் போட்ட குமரன். ''ஐயையோ... முதலாளி... இவன் நிஜமாகவே செத்துப் போயிட்டான்... போலிஸைக் கூப்பிடணுமே...''

''நான் அவனைக் கொல்லவில்லை... அவனைப் பார்த்துச் சுடவில்லை. வேறு பக்கமாகத்தான் பார்த்துச் சுட்டேன்...'' என்று பதறினார் கார்மேகம்.

''ஏன் முதலாளி? அவனைப் பார்த்துச் சுடலே!'' எனக் கேட்டான் குமரன்.

அவன் தலையில் கட்டு இல்லை... காயம் ஏதும் பட்ட சுவடே இல்லை.

தன் உள்ளங்கையை விரித்துக் காண்பித்தான். கார்மேகம் துப்பாக்கியில் போட்டிருந்த நிஜத் தோட்டா வெடிக்கப்பட்ட நிலையில்.

''முதலாளி, துப்பாக்கியின் குதிரை சரியாக வேலை செய்யவில்லை... மதியம் நான் எடுத்துச் சுட்டுப் பார்த்தேன்... எனக்கு விஷயம் புரிந்தது. ராமலட்சுமி, ராஜவேலுவிடம் சொன்னேன். ராமலட்சுமி நீங்கள் அவளிடம் தப்பாகப் பேசிய எல்லாவற்றையும் சொன்னாள். நாங்கள் மூன்று பேருமாகச் சேர்ந்து போட்ட நாடகம்தான் இது... ராமலட்சுமியை நான் விரும்பியது உண்மைதான். அதற்காக ராஜவேலுவைக் கொல்ல நினைக்கிற அளவுக்கு நான் தாழ்ந்து போகலை...''

''என்னப்பா அங்கே வெட்டிப் பேச்சு...? நான் இப்போதாவது எழுந்திருக்கலாமா?'' எனக் கேட்டான் ராஜவேலு...

எழுந்தவன் தன் முஷ்டியை மடக்கிக் கொண்டு கார்மேகத்தின் மேல் பாய இருந்தவனைக் குமரன் தடுத்து விட்டான்.

''வேண்டாம் அண்ணே... இந்த ஆளைத் தொட்டு அடிச்சு நாம் நம்மையே கேவலப் படுத்திக்க வேண்டாம்...''

அத்தனை பேரும் மெளனமாக மேடையை விட்டு வெளியேறினார்கள்.

நாடகத்திற்கு அன்று மங்களம் பாடப்படவில்லை. அத்தனை பேரும் கம்பெனிக்கே ''மங்களம்'' பாடிவிட்டு அவரவர் பாட்டுக்குப் புறப்பட்டு விட்டார்கள். ராஜவேலு, ராமலட்சுமி மட்டும் ஜோடியாகச் சென்றார்கள்.




என்னுடைய வயலுக்கு தண்ணீர் தேவை

மற்றும் என்னுடைய பம்புசெட்டிற்கு பாதுகாப்பு தேவை

ஆச்சரியமான விஷயம் : பம்பு செட்டையும் இன்ஷ்யூர் செய்யலாம். நம்முடைய பம்பு செட் மின் ஏற்ற தாழ்வுகளால் எரிந்து போனாலோ, திருட்டுப் போனாலோ, யந்திரம் உடைந்து கோளாறு ஏற்பட்டாலோ ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி இவை அனைத்துக்கும் காப்பீடு செய்கிறது. இன்ஷ்யூரன்ஸ் செய்வது அவ்வளவு ஒன்றும் கஷ்டமான காரியமில்லை. சிறு தொகைதான் ப்ரீமியம் கட்டவேண்டும்.

பம்பு செட் மட்டுமா, நமது விவசாயத் தோழர்கள் தங்களது பசு, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு, கோழி முதலான பிராணிகளையும் கூட ஏன் இன்ஷ்யூர் செய்து கொள்ளக் கூடாது? எனக்கு அமைதியாக கவலையில்லாமல் தூங்கவேண்டும். நம்முடைய கால்நடைகளுக்கு நோய் நொடியோ, விபத்தோ ஏற்பட்டுவிட்டால் நஷ்டமில்லாமலாவது தப்பிக்கலாமே. பிறகு ஏன் இன்ஷ்யூர் செய்யாமல் இருக்க வேண்டும்?

விவரமான தகவல்களுக்கு ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸின் அருகாமையில் உள்ள கிளை/மண்டல அலுவலகத்தை அணுகவும்.



இன்ஷ்யூரன்ஸ்	ஆண்டு ப்ரீமியம் தொகை	
எருமை/பசு	ஐ.ஆர்.டி.பி. [?] 2 ரூ. 25 பைசா	(மற்றவை) 4.00 ரூ.
தனிநபர் விபத்து இன்ஷ்யூரன்ஸ்	நபருக்கு 12 ரூபாய்	காப்பீட்டுத் தொகை 15,000 ரூ.
கிராமிய விபத்து இன்ஷ்யூரன்ஸ்	நபருக்கு 5 ரூபாய்	காப்பீட்டுத் தொகை 6,000 ரூ.
விவசாய பம்பு செட்		
i) மின் சக்தியால் இயங்குவது	50 முதல் 190 ரூபாய் வரை (குதிரை சக்தியைப் பொருத்து)	
ii) டீசலில் இயங்குவது	70 முதல் 230 ரூபாய் வரை (குதிரை சக்தியைப் பொருத்து)	
முட்டை இடும் கோழி	ஐ.ஆர்.டி.பி. ஒரு குஞ்சிற்கு 80 பைசா (1 நாள் முதல் 72 வாரம் வரை)	(மற்றவை) 1.20 முதல் 1.50 ரூ. வரை (வயதுக்குத் தக்கவாறு)
ப்ராய்லர் குஞ்சு	ஒரு குஞ்சிற்கு 25 பைசா (1 நாள் முதல் 8 வாரம் வரை)	

தி ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

Advtg. Integrated/OIC-Tam/7689

வட்டமேஜை

* 'ஜெயலலிதா பதவி துறப்பாரா?' என்ற தலையங்கம் மிகவும் அருமை. கசப்பு மருந்தைத் தேன் கலந்து தருவது போல் அறிவுரையை அன்பாகக் கூறியிருக்கிறீர்கள்.

சென்னை — 34, கவிதாசன்.



''தலையங்கம் படித்தாவது திருந்தலாம்...''

* தலையங்கத்தில் தந்தை மகனுக்குக் கூறும் அறிவுரையைப் போன்று கல்கி கூறியிருக்கிறது. இதைப் படித்தாவது ஜெயலலிதா திருந்தலாம்.

வேடந்தவாடி, ஜி. சங்கரன். அமுதா சங்கரன்.

* 'கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்குமா?' — சரியான நேரத்தில் எழுதப்பட்ட மிகத் தெளிவான கட்டுரை. ''மீண்டும் மாநில அரசியலுக்கு வருவதாய் இல்லை'' — என்ற ஹெக்டேயின் உறுதி பாராட்டத் தக்கது.

மதுரை — 9, பிரபாகர் பிரியன்.

* கல்கி 7.5.89 இதழில் ஓர் அன்பர் ''சிரிப்பை வரவழைக்கும் நிகழ்ச்சிகள்'' மாமியாருக்குப் பிடிக்காதாகையால் டி.வி. பார்ப்பதில்லை என்று எழுதி இருந்தார். ஆனால் நம் டி.வி. நிலையத்தாருக்கே நாம் சிரிப்பது பிடிக்காதாகையால் ஒரே சோகமான நாடகங்களையும், வெள்ளிக் கிழமைகளில் சரியான துக்ககரமான நிகழ்ச்சிகளையும்தான் ஒளிபரப்புகிறார்கள்! நம் கவலைகளை மறந்து சிறிது நேரம் மகிழ்வுடன் இருக்க வகை செய்யுமாறு டி.வி. நிகழ்ச்சிகளை அமைத்தால் என்ன குறைந்தா போய் விடும்?

சென்னை — 4, டி. எம். சுந்தரராமன்.

* ஃபாஷன்! ஃபாஷன்! ஃபாஷன்! என்று கல்கியையே கலர், கலர் படங்கள் போட்டு ஒரு ஃபாஷனையே உண்டு பண்ணி விட்டீர்கள்.

குமராட்சி, ஷாலினி பிரியன்.

* ஐம்பது வருடங்களுக்கு முன்பு வந்த 'தியாக பூமி'யைப் பற்றிய சுவையான விமர்சனம் என் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளை கொண்டது.

வடுகவிருட்சியூர், ஆர். அமுதா.

* வேலைக்குப் போகும் பெண்கள், ஆபீஸிலும், வீட்டிலும் வேலை செய்வதோடு, கணவனின் கோபத்துக்கும் ஆளாகும் யதார்த்த நிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார், ஜி. நாராயணன்!

குத்தாலம், வி. சுந்தரராமன்.

* அடுத்தவருக்கு உதவும் வாய்ப்புக் கிடைத்தால், எவ்வித ஆதாயமும் எதிர்பாராமல் உதவுவதே மனிதநேயம் என்பதைச் சுந்தரம் மூலம், 'நிறைகுடம்' சிறுகதை தெளிவுபடுத்தியது.

சென்னை — 52, அ. ஜமால் மொய்தீன்.

* ''என் உயிர்த் தோழன்'' ஒரு வாரம் வரத் தப்பினால் பரவாயில்லை, என் மனம் கவர்ந்த பாரதிராஜாவுக்கு ஆபத்தில்லை என்பதில் ஆறுதல்.

குடியாத்தம், கே. ஆர். ராஜா.

* 'என் ரத்தத்தின் ரத்தமே' படம் பார்க்கலாம் என்று இருந்தேன். சரியான சமயத்தில் உமது விமர்சனத்தைப் படித்ததால் பத்து ரூபாய் மிச்சமாயிற்று.


தக்கோலம், அ. முஸ்தபா.

* 'சலாம் பாம்பே' படத்திற்குக் கிளம்பியுள்ள எதிர்ப்புக்கான இயக்குநர் மீராவின் விளக்கத்தைப் படித்தபோது, விளக்கம் வாஸ்தவமாகத்தான் இருக்கிறது. அதற்கான நிதி உதவியைக் கூட, முதலில் ஓர் அயல்நாட்டு நிறுவனம்தான் செய்தது என்பது மகிழ்ச்சியையும் பின்னரே NFDC உதவி செய்தது என்பது சற்றே வருத்தத்தையும் அளித்தது.

சென்னை — 94, பானை அசோக்.

* கல்கி 7.5.89 இதழில் 'தராசு' கேள்வி பதிலில் ''அறுபது சதவீதம் மின்வெட்டு என்றால் எதிர்காலம் பிரகாசமாகவா இருக்கும்?'' என்று பதில் சொல்லியுள்ளீர்கள். இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திலும் அரசாங்க நிர்வாகத்தில் இயங்கும் மின்வாரியங்கள் திறம்படச் செயல்படுவதில்லை. ஆண்டு தோறும் கோடிக்கணக்கில் நஷ்டப்பட்டு வருகின்றன. மாறாகத் தனியார் துறையில் விரல் விட்டு எண்ணி விடக்கூடிய மின் உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. அஹமதாபாத் எலெக்ட்ரிக், ஆந்திரா வாலி (Valley) கார்ப்பரேஷன், பாம்பே சபர்பன், கல்கத்தா எலக்டிரிக் சப்ளை, டாட்டா ஹைட்ரோ, டாட்டா பவர் முதலிய எல்லா தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுமே நமது அரசாங்கம் நிர்ணயித்த விலையில்தான் யூனிட்டுக்கு இவ்வளவு என்று மின்சாரத்தை விற்பனை செய்கின்றன. இவை லாபகரமாகவும் திறமையுடனும் செயல்பட்டுப் பங்குதாரர்களுக்கும் 16 முதல் 20 சதவீதம் வரை டிவிடெண்டுகளை வழங்குகின்றன. மின் உற்பத்தி பெருக ஒரே வழி அரசாங்கம் மின் உற்பத்தி செய்யும் பணியைத் தனியார் வசம் ஒப்படைப்பதுதான்.

சென்னை, — 102, எஸ். அனந்தராமன்.



''ஹெக்டேயின் உறுதி பாராட்டத் தக்கது...''

''பத்து ரூபாய் மிச்சமாயிற்று...''



என் உயிர்த் தோழன்

அத்தியாயம் 5
புன்னகையைக் கலைக்க வந்த புயல்!

சந்தனத் தேவன் பட்டி. பெயரில் உள்ள கம்பீரம் போலவே அமைந்துள்ள கிராமம். கிராமத்தின் புன்னகை போல பச்சை பசேல் வயல்கள்.

சந்தனத்தேவன் பட்டி — தன் ஆத்மாவை, ஜீவனைச் சிதைத்துக் கொள்ளாத கிராமம். சிட்டுவின் தாய்மண் கூட...

சிட்டுவின் கால்கள் மண்பாதையில் வேகமாய் ஓடிக் கொண்டிருந்தன. கொலுசு பூட்டிய கால்கள். அது அவள் ஓட்டத்துக்குப் பின்னணி இசை போல் இனிமை சேர்த்துக் கொண்டிருந்தது. ஓட்டத்தில் அவளிட மிருந்து விடுபட்ட அவசரமான சுவாசம் கூட அவளுக்கு அழகு சேர்த்துக் கொண் டிருந்தது. முகத்தில் முத்து முத்தாய் வியர் வைத் துளிகள். ஏதோ சத்தம் வந்த திசையை நோக்கி மான் குட்டி போல ஓடிக் கொண்டிருந்தாள்.

'சென்னைப் பட்டினம் பாரு... பாரு...
சேடப் பட்டினம் பாரு... பாரு...!'

தூரத்திலிருந்து வந்த அந்த வரிகள் காற்றில் கரைந்து கொண்டே சென்றது. அதை எட்டிப் பிடித்து விடத்தான் இவ்வளவு ஓட்டமும்.

அங்கே குயில் குப்பத்தில் விசாரிக்கப் பட்டுக் கொண்டிருந்த சிட்டுவின் மீது குடிசைப் பெருமக்களின் ஒலியும், இங்கே சந்தனத்தேவன் பட்டி வயல் வெளிகளில் ஓடிக் கொண்டிருந்த இளம் சிட்டுவின் மீது இசை அரும்பாய்ச் 'சென்னைப் பட்டினம் பாரு... பாரு...' என்ற ஓசையும் மாறி மாறிக் கேட்டுக் கொண்டே இருந்தன.

அவள் இறந்த காலத்தில் தங்கிக் கிடந்த இதமும், இனிமையும் நிகழ் காலத்தின் நிமிடங்களில் நீண்டு கொண்டிருந்தது.

சிட்டு ஓடிவந்து நின்றாள். மூச்சு இரைத்தது. கொலுசு சத்தம் அதிர்வுகளாய்க் கொஞ்ச நேரம் நீடித்தது.

'சென்னைப் பட்டினம் பாரு... பாரு...
சேடப்பட்டினம் பாரு... பாரு...'

பயாஸ்கோப்காரன் நல்ல மீசை வைத்திருந்தான். இடது பக்கத் தாடையில் மச்சமிருந்தது. அவன் பயாஸ்கோப் பெட்டி ஏராளமான சோடனைகளுடன் இருந்தது. அதன் மீது படங்களாய் ஒட்டி இருந்தான். அவனின் கரடு முரடான கம்பீர உருவத்தைத் தாண்டி அவன் குரலில் இனிமை இருந்தது. எல்லோரையும் உரிமையுடன் கூப்பிட்டுப் பயாஸ்கோப்பில் படம் காட்டிக் கொண்டிருந் தான்.

துண்டு பிலிம் சுருள்களில் விதவிதமாய் நடிக நடிகையர் வந்து போனார்கள். பல் வேறு கட்டடங்கள், பிரமிப்பூட்டும் விலங்கு வகைகள் எல்லாம் கலந்து ஓடின. நடுவில் சில கறுப்பு வெள்ளைகளும் நிரவி இருந் தன.

ஊமைப் படம் பயாஸ்கோப் உள்ளேயும், அவன் 'சத்தக் கச்சேரி' வெளியேயும் நடந்து கொண்டிருந்தது.

வெட்கப்பட்டுக் கொண்டே நின்றாள் சிட்டு. அவளுக்குப் பயாஸ்கோப் பார்க்க ஆசை. ஆனாலும் பயம்.

மீசைக்காரன் அவளைக் கூப்பிட்டான்.

'வாம்மா... நம்ம பொட்டியில பாரு... பூலோகமே தெரியும்... புதுசு புதுசாத் தெரியும்... இது சாதாரணப் பொட்டி இல்லமா சினிமா சரித்திரத்தைச் சொல்ற பொட்டி...' மணி அடிப்பது போல் சரியான ஓசை அளவில் பேசிக் கொண்டே இருந்தான்.

'சென்னைப்பட்டினம் பாரு... பாரு...
சேடப்பட்டினம் பாரு... பாரு...
ஆங்... சென்னைப்பட்டினம் பாரு... பாரு...
ஆ... ஆங்... சேடப்பட்டினம் பாரு..
பாரு...'

சின்னஞ்சிறுசுகள் மொய்த்தன.

சிட்டு கண்களை நகர்த்தாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'மீசைக்காரரே... வேகமாச் சுத்தாதே! சரோசா தேவ்வி சடக்கு மடக்குன்னு இல்ல போயிடுது... மெல்லச் சுத்தினாத்தானே அது செமினி கணேசுகூட சிரிக்கிறதப் பாக்க முடியும்!'

கொஞ்சம் சினிமா ஞானமுள்ளவள் வெட்கத்துடன் கூறினாள்.

பயாஸ்கோப்காரனுக்கு அவளைப் பிடித் திருந்தது.

நாத்து நட்ற பொம்பளைங்களுக்குக் கூத்து மட்டும்தான் அத்துப்படின்னு பாத்தா நாட்ல புதுசா வந்து ஆக்ட்டு குடுக்கிறவங்க பேரு எல்லாம் தெரியுதே! அம்மாடியோவ்! நீ நல்லாப் பாரு யக்கா!'

மீசைக்காரன் வெற்றிலைப் பாக்கை நன்றாக மென்று கொண்டே நீட்டி முழக் கிப் பேசினான்.

வெட்கப்பட்டவள் மறுபடியும் பயாஸ் கோப்பைப் பார்க்க ஆரம்பித்தாள். உள்ளே மாறி மாறி ஓடிய காட்சிகளைப் பார்த்து அதிசயித்த சிட்டு தன்னை மறந்து கனவுச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தாள்.

இடுப்பில் முடிந்து வைத்திருந்த காசு களை எடுத்து பயாஸ்கோப்காரனிடம் மொத்தமாய்க் கொடுத்தாள்.

சென்னை நகரமும், சினிமா வண்ண

பாரதிராஜா

மும் அந்தச் சின்னக் குருவியின் நெஞ்சில் ஒருவித ரசவாதத்தையே நிகழ்த்திக் கொண்டிருந்தன். அவளுக்கு அதைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றியது.

'ஏய் சிட்டு... எம்புட்டு நாழியா பாத்துக்கிட்டு இருப்பே... கண்ணு கின்னு கெட்டுப் போயிடப்போவுது.. உன் அப்பனுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்... உன்னே விடவே மாட்டாரு... சரி வாடி...!'

அவள் சிநேகிதி தாமரை கூப்பிட்டாள்.

'நீ போடி... நான் முச்சூடும் பாத்துப்புட்டு தான் வருவேன்...!'

'பொட்டிக்கார்ரே.. இவளுக்கு இருக்கிற ஆசைக்கு இன்னும் பாத்துக்கிட்டேதான் இருப்பா...! கூடவே கூட்டிக்கிட்டுப் போயிடு... தோள்ல சுமந்துகிட்டே வருவா...!'


தாமரை கிண்டலாய்ப் பேசி விட்டு நடையைக் கட்டினாள்.

அந்தத் துருப்பிடித்த பயாஸ்கோப் பெட்டியின் மீது ஒரு மல்லிகைக் கொடி படர்ந்தது மாதிரி சிட்டு பார்த்துக் கொண்டிருந்தாள். பயாஸ்கோப்காரன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'அப்பாகிட்டச் சொல்லி இன்னும் கொஞ்சம் நோட்டு வாங்கி வெட்டும்மா...! என் பொட்டியவே உனக்குக் குடுத்துட்டுப் போயிடறேன்...!' மீசைக்காரன் கிண்டல் அடித்தான்.

சிட்டு சிரித்து விட்டாள்.

'பாத்தது போதும்... விடும்மா... நாலு எடத்துல சுத்தினாத்தான் எனக்குப் பொழப்பு... வவுத்துக்குச் சோறு...



வரட்டா...!'

'சென்னைப் பட்டினம் பாரு... பாரு...
சேடப்பட்டினம் பாரு... பாரு...
ஆ... என் பொட்டிக்குள்ள சினிமாப் பாரு.
சினிமாவுல சிங்கம் பாரு...
சிங்கம் உன்னைக் கடிக்கும் பாரு...
சரோசா தேவி பாரு... சாவித்ரி ஜோரா பாரு...
ஆங்... பாரு... பாரு... பாரு... பாரு..
பயாஸ்கோப் படத்தைப் பாரு...'

தன் கவிதாமேதாவித்தனத்திற்குத் தகுந்த வார்த்தைகளைப் போட்டுப் பாட்டுப் படித்தபடி சென்று கொண்டிருந்தான் மீசைக்காரன்.

சிட்டு மனத்தில் அந்த பயாஸ்கோப் பெட்டி கனவுகளை இறைத்திருந்தது.

அவள் சுகமாய் அதிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்த போது, திடீரென்று வந்த அப்பா ஞாபகம் அவளைத் தாக்கியது.

வேகமாக வீடு நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

அவள் அப்பாவின் பூர்வீகப் பெயர் என்ன என்பது யாருக்கும் தெரியாது.

சமீபமாய் அவர் தமக்குச் சூடிக் கொண்ட நாமகரணம் 'இலக்கிய மழை' தமிழ்முரசு.

தமக்குப் பெயரோ பட்டமோ தர யாருக்கும் தகுதி இல்லை என்பதால்தானோ என்னவோ அவரே அவற்றை மனமுவந்து சூடிக் கொண்டார் என்பது நிஜம். இது யாருக்கும் தெரியாத உண்மையும் கூட...

'மைக்' தேவையில்லாதபடி சத்தமாய்ப் பேசும் சாரீரம். நெற்றிக்கு வண்ணம் பூசியது போல் விபூதி, குங்குமம். சட்டை போட்டுக் கொள்ள மாட்டார். மெல்லிய ஜரிகைப் பட்டைத் துண்டு. கழுத்தில் பவுன் கலவையுடன் கூடிய ருத்ராட்ச மாலை. போர்வை தடிமனில் பிரத்தியேகமாய் அவருக்கெனச் செய்யப்பட்டது போல் வேட்டி. அது பூமியைத் தொடும்படி கட்டி இருப்பார். கையில் எப்போதும் தடிமனாய் ஒரு புத்தகம் இருக்கும்.

ஒரு கையில் புத்தகக் கட்டு. இன்னொரு கையில் வெற்றிலைப் பெட்டி.

வயது வித்தியாசமின்றி எல்லோரிடமும் பேசுவார்... பழகுவார்... தமிழ் சொற்போர் நடத்துவார். பாட்டிசைப்பார். வீட்டின் உள்ளே மணக்கும் சுண்டல். அவர் வியாக்கியானம் முடிய சுண்டல் விநியோகம். பரிமாறப்போகும் சரக்குகளுக்காக அவரின் பேச்சைக் கஷ்டப்பட்டுக் கேட்பவர்களும் உண்டு.

கூட்டம் கூடுவது என்னவோ இதற்குத்தான். தம் குற்றால அருவிப் பேச்சில் அனைவரும் நனைந்து ஆர்ப்பரிக்கின்றனர் என்பதே அவரின் அசைக்க முடியாத நம்பிக்கை. சுய அபிப்ராயத்திலிருந்து தம்மை மாற்றிக் கொள்ளவே மாட்டார். அடுத்தவர் அவர் மீது வைத்திருக்கும் அபிப்ராயம் பற்றியும் கேட்டுக் கொள்ள மாட்டார்.

சந்தனத்தேவன் பட்டியில் எது நடந்தாலும் அது தமிழ்முரசுவைக் கேட்டுத்தான் நடக்கும்.

அவரின் வயசுக்கும், சொல்லுக்கும் எல்லோரும் பணிந்து அதன்படி நடந்து கொண்டனர்.

'நல்லதை உணர்ந்தே நல்லதை செப்புவேன்! எம் மண் நலம்... மக்கள் நலம்... காப்பதே என் ஆயுளின் சித்தம்...!' இது அவரின் கொள்கை — கோட்பாடு!

சிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது அவர் திண்ணையில் சொற்பொழிவை முடித்திருந்தார்.

'செவிக்கு உணவு இல்லாதபோது
சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்...'

குறளைச் சொல்லிவிட்டு ஆரம்பித்தார் தமிழ்முரசு.

''உங்களுக்காக வள்ளுவரின் விதியை நான் இப்போது தளர்த்திக் கொள்கிறேன்.

செவிக்கு உணவு என் பேச்சு. உங்கள் வயிற்றுக்கு இப்போது உணவு படைப்பது என் கடமை. காரணம், சொன்ன விஷயங்கள் பசியால் தாக்கப்பட்டு மறைந்து போய் விடக் கூடாது, பாருங்கள்!''

வள்ளுவரின் விதி வாபஸ் ஆனது.

சுண்டலும் இதர அயிட்டங்களும் விநியோகிக்கப்பட்டன.

பயாஸ்கோப் படங்கள் சிட்டுவின் மனத்தில் ஓடிக் கொண்டிருந்தாலும் கவனத்துடன் சுற்றி இருந்தவர்களுக்குச் சுண்டல் கொடுத்துக் கொண்டிருந்தாள். அப்பா அதை ரசித்தவாறே ஆரம்பித்தார்.

''அம்மா சிட்டு... எங்கம்மா போயிட்டே! எத்தனை வாட்டிக் கூப்பிட்டேன், தெரியுமா...?''

''தாமரை கூட பேசிக்கிட்டிருந்தேம்பா... போவணும்னு சொன்னாக் கூட என்னை விடாம பேசிக்கிட்டே இருக்காப்பா...! ஆமாப்பா...!''

''அவங்களுக்கென்னம்மா...! தின்றதும், பேசறதும்தான் தொழிலு! நமக்கு அப்படி இல்லையே! எவ்வளவு சேவைங்க இருக்கு! நான் சாகறதுக்குள்ளே சந்தனத்தேவன் பட்டி மக்கள் வாயில சந்தனம் மணக்கணும்... வாழ்க்கையில ஒழுக்கம் சிறக்கணும்... நான் அதை மனசாரப் பார்க்கணும்... இது நடந்துட்டா என் பிறவி, பயன் அடைஞ்சிடும்மா!''

சிட்டுவுக்குப் பலநேரங்களில் அப்பாவின் பேச்சும், செய்கையும் புரியாது. ஆனாலும், 'உம்' என்று கேட்டுக் கொள்வாள். ஏதாவது எதிர்ப் பேச்சுப் பேசினால் அவருக்குக் கோபம் வந்துவிடும். பின் ஏதாவது தடிமனாய்ப் புத்தகத்தைக் கொடுத்து நான் வரும் வரை படி என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விடுவார்.

சிட்டு கொஞ்ச நேரம் படிப்பாள். பின் அதையே தலைக்கு வைத்துக்கொண்டு தூங்கி விடுவாள். அப்பா வரும்போது செல்லமாய்ச் சிணுங்கித் தப்பி விடுவாள். 'இனிமே வர்றவங்களுக்குச் சுண்டல், அது, இதுன்னு செய்யச் சொன்னாச் செய்ய மாட்டேன்... நான் என்ன சமையல்காரியா...? அம்மா

இந்தியாவின் மிக அதிகமாக விற்பனையாகும் காமிராக்கள்

Snapper



ஸ்நேப்பர் உங்கள் பணத்திற்கு உயர்ந்த மதிப்பைத் தருகிறது. எண்ணற்ற பலவித மாடல்கள். மற்றும் அது தனக்கே உரிய தனிப்பட்ட தரத்துடன் உருவாக்கும் ஒப்பிலா அம்சங்களைக் கொண்டது. அதனால்தான் இதர காமிராக்களுடன் ஒப்பிடுகையில் ஸ்நேப்பர் கணக்கற்ற மக்களின் புன்னகை சின்னமாக விளங்குகிறது.

Snapper காமிராக்கள் **புன்னகையின் சின்னம்**

விற்பனைக்கு விடுப்பது:
ஆக்ஃபா கேவார்ட் இந்தியா லிமிடெட்.

ULKA-12097 TAM


ஏய் பூபாளம்! ஏன் தலை முதல் கால் வரை டிரெஸ் போட்டிட்டு இருக்கே?
என்ன செய்வது? தெங்காளி காடு முழுதும் கொசுக்களின் ஆர்ப்பாட்டம் தாங்கலையே!
காடு முழுதும் கொசுத்தொல்லை நாடுவீர் அதற்கு கொசுவர்த்திச் சுருளை... டார்ட்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்.
கடவுளே, இருள் உள்ள இடத்தில் ஒளியை பரவ விடு கொசுக்கள் உள்ள இடத்தில் டார்ட்டாய்ஸ் எரியவிடு!
உங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றுகிறது... டார்ட்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்.
everest/88/BCL/299 tm
டார்டாய்ஸ்
கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் லிமிடெட்
(முன்பு: பாம்பே கெமிகல்ஸ் பிரைவேட் லிமிடெட்)
ஃபோர்ட், பம்பாய்—400 023. ஃபோன்: 273831

சாவாம இருந்திருந்தா உங்களை இப்படியெல்லாம் செய்ய விட்டிருக்குமா?..?'' என முரண்டு பிடிப்பாள்.

தமிழ்முரசுவுக்கு அவளைச் சரிக்கட்டுவதற்குள் போதும் போதுமென்றாகிவிடும்.

சந்தனத்தேவன் பட்டியில் சிலருக்கு உள்ள மனக்குறை ஒரு சினிமா கொட்டகை இல்லை என்பதுதான். காரணம் தமிழ்முரசுதான்.

அந்த ஊரில் சினிமா கொட்டகை கட்ட உள்ளூர்க்காரர்கள் முயற்சி செய்தும், அவர் ஒத்துக் கொள்ளவில்லை.

உள்ளூர்க்காரர் ஒருவர் முயற்சி செய்ததும், நோ — அப்ஜெக்ஷன் சர்டிபிகேட் வாங்குவதற்காக அரசாங்க ஜீப் வந்தது. கூலிங் கிளாஸ் கண்ணாடியுடன் ஒருவர் இறங்கினார். கையில் ஃபைல். பவ்வியமாகத் தமிழ்முரசுவை நெருங்கினார். தமிழ்முரசு சினிமாக் கொட்டகை வரக்கூடாது என அபிப்பிராயப்பட்டார்.

எல்லோருக்குமாய்ச் சேர்ந்து பேசினார். ''கேட்டுக்குங்கப்பா! நீங்க சினிமாக் கொட்டகை வேணுங்கிறதை நான் ஒத்துக்க முடியாது. நாளைக்கு எந்தப் பயலும் வேலை வெட்டி பார்க்காம கொட்டகையில போயிக் குந்திக்கிட்டிருப்பான். பொழைப்பைப் பாக்குற எடத்துல கூட இதைப்பத்தித்தான் பேசிக்கிட்டிருப்பான். நம்ம கிராமத்துக்கு இதெல்லாம் ஒத்துப்பட்டு வராது...! நான் நல்லா யோசிச்சுத்தான் சொல்றேன்!''

யாருக்கும் அவரிடம் பதில் பேசும் தைரியம் வரவில்லை.

பலமுறை பர்மிஷன் விஷயமாக வரும் அரசாங்க ஜீப் இதனால் ஏமாற்றத்துடன் திரும்பும்.

சினிமாக் கொட்டகை போட நினைத்துத் தோற்றுப் போன பருத்தி கமிஷன் மண்டி வேலுச்சாமி தமிழ்முரசுவைச் சரிக்கட்ட முடியாது என்பதை உணர்ந்திருந்தார்.

'வேலுச்சாமி... பருத்தியோட நிறுத்திக்க... வேற ஏதாவது தொழிலை விருத்தி செய்யணும்னு நினைச்சா என்கிட்டே வா... சொல்றேன்... இந்தச் சினிமாவெல்லாம் வேணாம்பா!

வேலுச்சாமி நாள் முழுக்கப் பேசினாலும் பெரியவர் அசர மாட்டார். அவருக்குப் புரிந்தது.

''சரிப்பா... பெரியவரு சொல்றதை ஒத்துக்குவோம்!''

சந்தனத்தேவன் பட்டியில் இருந்து பத்து கல் தொலைவில் உள்ள பார்வதிபுரத்தில் ஒரு சினிமாக் கொட்டகை உண்டு.

வேண்டியவர்கள் போய் அங்கே பார்த்து விட்டு வருவார்கள்.

சில நேரம் ராத்திரியில் படம் பார்த்து விட்டு வரும்போது சிலர் பெரியவர் கண்ணில் சிக்கிவிடுவதும் உண்டு.

ஆட்களைத் தோண்டி எடுப்பது போல் விசாரிப்பார்.

''கழனிக்குப் போயிட்டு வர்றோம்பா...!''

அடுத்த இதழில்...



நீங்கள் சாப்பிடுவது சத்தான உணவா....?

— சிறப்புக் கட்டுரை

''உன் கழனி அந்தப் பக்கம்தாண்டா இருக்கு... இந்தப் பக்கம் இருந்து வர்றே? பார்வதிபுரத்துக்குப் படம் பார்க்கத்தானே போனே?''

மறுபடி சொல்லும் பொய்யாவது புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும் என்பதில் அவன் கவனமாவான்.

''அப்பா... நல்ல படம்பா... திருநீலகண்டர் போட்டிருக்காங்க... என்னம்மா இருக்கு... கோயில்ல உட்கார்ந்துட்டு வர்ற மாதிரியே இருந்துச்சி...!''

''சரி... சரி... போடா...!''

அவன் பார்த்துவிட்டு வந்த A படம் திருநீலகண்டர் தயவால் தப்பிக்கும். தானும் தப்பித்த திருப்தியில் போவான்.

மாட்டு வண்டிகளின் ஜல் ஜல் சலங்கை ஒலி கேட்டு மறுநாள் விடிந்தது சந்தனத்தேவன் பட்டி.

ஸ்பெஷல் நாடக பார்ட்டுகளின் வண்டிகள் வெகு ஜோராய் அணிவகுத்து ஊரை நோக்கி வந்து கொண்டிருந்தன.

சினிமாக் கொட்டகை கூடாது என்பதில் பிடிவாதமாக இருக்கும் ஊர்ப் பெரியவர் இந்த நாடகப் பார்ட்டிகளுக்கு எப்படி அனுமதி கொடுப்பார்? சந்தனத்தேவன்பட்டியைத் தெரியாமல் பாவம்... இவ்வளவு மூட்டை முடிச்சுக்களுடன் போய்க் கொண்டிருக்கிறார்களே என்பது போல் ஊர்ச் சனங்கள் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

அந்தக் கிராமத்தில் புயலை உண்டாக்கும் அத்தியாயம் ஆரம்பமாகப் போவது அப்போது அவர்களுக்குத் தெரியாது...

(தொடரும்)

ஸ்வப்னாவுக்கு அழுகை கரை புரண்டு ஓடிவந்தது. இன்னமும் அதிர்ச்சியினின்று விடுபட இயலாமல் சோபாவின் விளிம்பைப் பிடித்துக் கொண்டு உறைந்த பார்வை பார்த்தாள்.

ச்சே... டாடி இத்தனை மோசமானவராய் இருப்பார் என்று கனவிலும் நினைக்கவில்லை. இத்தனை நாளும் செல்லமாய் 'ஸ்வப்னா டியர்' என்று நம்மை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு தாங்கியவர் தானா இன்று நம் விருப்பத்திற்கு மாறாய்... இத்தனை மூர்க்கத்தனமாய்...

ஓ... டாட்... எப்படி உங்களால் இப்படி இயந்திரத்தனமாய் மாற முடிந்தது? பிஸினஸின் நுணுக்கங்களைக் கம்ப்யூட்டராய் அலசுகிற உங்களுக்கு, உங்கள் பெண்ணின் மனசு ஏன் புரியாமல் போனது? சொல்லப் போனால் நீங்கள் கூட உங்கள் காலத்தில் காதலித்திருப்பதாய்ச் சொல்லியிருக்கிறீர்களே...? நான் மட்டும் காதலிப்பது தப்பா? நான் விரும்புகிற நரேனை அடைய விரும்புவது தப்பா டாட்...?

ஓ... புரிந்துவிட்டது! உங்கள் மனம் புரிந்துவிட்டது எனக்கு. நீங்கள் கல்லூரிக் காலத்தில் யாரோ ஒரு பெண்ணைக் காதலித்துக் காதல் கைகூடாமல் போய்விட்டது பற்றிச் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்த ஏமாற்றம்தான் ஒருவிதப் பொறாமையாய் வடிவெடுத்திருக்கிறதோ! ஸாரி... உங்களுக்கு நான் குட்டை சொல்லியே தீரவேண்டும். தீர்மானமாய் முடிவெடுத்தபடி எழுந்தாள். நிலைமை இத்தனை விஸ்வரூபமெடுக்குமென்று எதிர்பார்த்திருக்கவில்லை அவள்.

நரேனிடம் கூட வெகு நம்பிக்கையாய்ச் சொல்லிவிட்டு வந்திருந்தாள்.

"லுக்... பையா... எங்க டாட் என் விருப்பத்தைப் பொறுத்த வரைக்கும் பச்சைக் கொடி காட்டத்தான் போறார். அப்புறம் இந்த அழுமூஞ்சியைக் கட்டிக்கிட்டு ஆயுசுக்கும் நான் அழ வேண்டியதுதான்" என்று சீண்டலுடன் சொன்னாள்.

"யேய்... உன்னைக் கட்டிக்கப் போறவன் நான். மரியாதையாப் பேசு..." என்றான், அவனும் பொய்க் கோபத்துடன்.

சிரித்தாள்.

"மரியாதையா... ஓஹ்... ஸாரி நரேன்... எனக்கே அப்பப்பச் சிரிப்பு வரும். எப்படி நரேன் பாப்பாவைக் காதலிச்சோம்னு..."

முகத்தைத் திருப்பிக் கொள்வான்.

"கோபமா? கொஞ்சம் முகத்தைத் திருப்



தேடிவா தென்றலே

விஜயநிலா

பிக் காட்டறது...''

......

''ஸாரிப்பா... உன்னைக் கலாட்டா பண்ணலை. எங்கே திரும்புங்க...''

''டிஸ்டர்ப் பண்ணாத ஸ்வப்னா. செம கலர். அங்கே பாரு... கோதுமை நிறத்துல வடக்கத்திப் பொண்ணு போல...''

கிள்ளினாள்.

''அதானே பார்த்தேன். என் நரேனுக் காவது ரோஷமான்னு... வர்றேம்மா... இன்னிக்கி டாட் சம்மதம் குடுத்துடுவார் நம்ம கல்யாணத்துக்கு.நைட்கனவிலசந்திப்போம். ரோமானியக்காலத்துராஜா உடைபோட்டுக்கிட்டு வந்திடாதே... சகிக்காது!'' என்று அவனிடம் சொல்லிவிட்டு ஓடிவந்திருந்தாள் உற்சாகமாய்.

அத்தனை ஆவலும் இப்படி புஸ்ஸென்று போகுமென்று நினைக்கவில்லை. விஷயத்தைச் சொன்னதும் காஷுவலாகத்தான் ஆரம்பித்தார் ராஜசேகர்.

''ஐ ஸீ... எனக்கும் கூடத் தகவல் வந்துச்சு. யாரவன்? என்ன பண்றான்? கவிதை எழுதறவனா...? உமார் கய்யாம் பத்திப் பேசுவானா? ஸிட்னி ஷெல்டன் படிப்பானா? கலைப்படங்கள் பார்ப்பானா...?''

''டாடி...''

தயக்கமாய்ப் பார்த்தாள்.

''வயசும்மா... கண்டதைப் பேசித் தனக்குப் பிடிச்ச விஷயத்தையே எதிராளியும் பேசினா... உடனே ஒரு மயக்கம் வரும். அது லவ்வா ...?''

''இல்லே டாட்... வந்து, நரேனும் நானும் ஆத்மார்த்தமா ஒருத்தரையொருத்தர் லவ் பண்றோம்.''

சிரித்தார். சிரிப்புடன் ஃப்பிரிட்ஜ் திறந்து ஐஸ் வாட்டர் எடுத்துக் குடித்தார். வந்து அமர்ந்து தொண்டையைச் செருமிக் கொண்டு தொடர்ந்தார்.

''பாரும்மா ஸ்வப்னா. உனக்காகப் பெரிய இடம் பார்த்திருக்கேன். பையன் ஸ்டேட்ஸ்ல இருக்கான். நல்ல எதிர்காலம் இருக்கு.''

''எனக்கு நரேன் வேணும்பா.''

''எந்த நரேன்! உன்னை லவ் பண்றவனா? உன்னை வைச்சுக் காப்பாத்தக் கூடிய அளவுக்கு அவன்கிட்ட என்ன இருக்கு, சொல்லு. நம்ம கார் டிரைவர் கூட அவனைவிட அதிகச் சம்பளம் வாங்கறான்.''

''ஏன் டாட் மாறிட்டீங்க இப்படி. ஒரு தரம் நீங்ககூட...''

''நீ என்ன சொல்ல வர்றேன்னு புரியுது. நானும் லவ் பண்ணியிருக்கேன். அது தோல்வியடைஞ்சிடிச்சின்னு தாடி வளர்க்கலே. உங்கம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். ஸ்வப்னா நீ அவனை மறந்துடு. வர்ற சண்டேயன்னைக்கு உன்னைப் பெண் பார்க்க அவங்கள்லாம் வர்றாங்க.''

பிடிவாதமாகச் சொல்லிவிட்டுப் போயிருந்தார் ராஜசேகர். தீர்மானமான முடிவுக்கு வந்திருந்தாள் இவள். இனியும் இவருக்குப் புரிய வைக்க முடியாது.

நரேனிடம் சொன்ன போது சலனம் காட்டாமல் நின்றிருந்தான்.

''ஹேய்... நான் எப்படிப் பதைபதைப் போட ஓடி வந்திருக்கேன், கொஞ்சங்கூட அசரவேயில்லையே, நீ...?''


''எதிர்பார்த்தேன். நாம ரெண்டு பேரும் வேற வேற ஜாதி ஸ்வப்னா.''

''நரேன்!''

''யெஸ். ஏழை, பணக்கார ஜாதி. இதோ பார்த்தியா ஸ்வப்னா. உன் மேலே நான் வைச்சிருக்கிற அன்புக்கு உங்கப்பா நிர்ணயித்திருக்கிற விலை!''

அவன் கையில் காற்றில் படபடத்த





'செக்'கைப் பார்த்த ஸ்வப்னா அதிர்ந்தாள்.

"நரேன்..."

"பயப்படாதே ஸ்வப்... நான் அந்த அளவுக்குக் கோழையில்லை... என்னால உனக்கு ஓர் ஆடம்பரமான வாழ்வைத் தர முடியலேன்னாலும் அட்லீஸ்ட் ஒரு நிம்மதியான, சந்தோஷமான வாழ்க்கையைத் தர முடியும். நீ என்னை இன்னும் விரும்பினால் என்னை மனப்பூர்வமாய் நம்பினால் என் பின்னால் வரலாம்..."

"ந...ரே...ன்..."

"வேறே வழியில்லே ஸ்வப்னா. யோசிக்காதே. உங்கப்பா தம் பண பலத்தைப் பயன்படுத்தி உன்னை எங்கிட்டேயிருந்து பிரிச்சிடறதுக்கு முன்னால, நான் முந்திக்கணும்னு துடிச்சிக்கிட்டு இருக்கேன்..."

"முடியுமா, நரேன்?"

"முடிய வைக்கணும். டு யூ பிலீவ் மீ ஸ்வப்னா...?"

அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள் ஸ்வப்னா. மனத்தில் தென்றல் வீசியது.

ரயிலில் பயக்கண்களுடன் நரேனின் தோளை ஒட்டியவாறு அமர்ந்திருந்தாள் ஸ்வப்னா.

"இன்னேரம் வீட்ல ரகளை நடத்திட்டிருக்கும் நரேன்."

"தைரியமா இரு ஸ்வப்னா... நம்மைப் பிரிக்க யாராலேயும் முடியாது..."

"வெல் ஸெட்!"

குரல் வந்த திக்கில் இருவரும் திரும்பிய போது, முகத்தில் பயம் வந்து அப்பிக் கொண்டது. அந்த மனிதர் நிதானமாய் உள்ளே வந்து எதிரில் அமர்ந்து சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு —

"இப்படி ஓடிப் போறதா உத்தேசமா?"



''அ... அப்பா...''

வார்த்தைகள் வேலைநிறுத்தம் பண்ணின. மேலண்ணத்தில் நாக்கு ஒட்டிக் கொள்ள —

''டாடி ப்ளீஸ்... எ... எங்களைப் பிரிச்சிடாதீங்க...!''

சிரித்தார்.

அவளது பயம் அதிகமாகியது.

''டாடி...''

''ஸாரிடா ஸ்வப்னா. உங்கப்பாவை நீ சரியாப் புரிஞ்சிக்கலே. நீ தெரிஞ்சுக்கிட்ட வரைக்கும் நான் ஒரு பொண்ணைக் காதலிக்கத் தோல்வி கண்டவன்... அதானே? உண்மையிலே என்ன ஆச்சு தெரியுமா? இப்ப நான் பண்ணின மாதிரியே ஆஷாவோட அப்பா என்கிட்ட இருபதாயிரம் ரூபாய்க்குச் செக் கொடுத்து அவளை மறந்திடச் சொன்னார். அதோட ஒரு கம்பெனியிலே அட்டகாசமான வேலையோட! எனக்கு என் சுயநலம்தான் பெரிசா இருந்துச்சு... ஆஷாவை என் மனசிலேர்ந்து கோழைத்தனமாத் துடைத்தெறிஞ்சுட்டு... அப்புறம் உழைச்சேன். ஏகமா முன்னுக்கு வந்துட்டாலும், என் மனச்சாட்சிக்கு என்னால் பதில் சொல்ல முடியலே. உன்னை லவ் பண்ற நரேனும் என் மாதிரியே இருந்திட்டா என்ன பண்றது ஸ்வப்னா! உனக்கு அவன் தகுதியானவன்தானான்னு ஒரு டெஸ்ட் பண்ணிப் பார்க்க வேண்டியதாயிடுச்சு. ஸாரிடா... நான் பண்ணினது சினிமாடிக்கா இருக்கலாம். அது உங்க வாழ்வைச் சினிமா மாதிரி ஆக்கிடக் கூடாதேன்னுதான் அப்படிச் செஞ்சேன்...''

பிரமிப்புடன் அவரைப் பார்த்தனர் இருவரும். அங்கே தென்றல் வீச ஆரம்பித்திருந்தது.

அர்ச்சகர்கள் கொடுக்கும் மலர் பிரசாதங்கள்



தேவாலயத்தில் பிரசாதமாக அர்ச்சகர்கள் கொடுக்கும் மலர்கள் ஆண்டவனின் அருளை எடுத்து வரும் சாதனங்கள். அவை பயன் தருகின்றனவா இல்லையா என்பது பக்தனுடைய ஏற்கும் திறனைப் பொருத்தது. ஏற்கும் பக்குவம் உடையவனாக இருந்தால் அர்ச்சகர் தரும் மலர்களில் ஆண்டவன் வைக்கும் அருளை எளிதில் கிரகித்துக் கொள்வார். அர்ச்சகர் மலர்களை கொடுக்கும் போது பக்தனுக்கு ஆண்டவன் உணர்வு நிலைகளைக் கொடுக்கின்றார். அவை பயன் தருகின்றனவா இல்லையா என்பது பக்தன் ஏற்கும் திறனைப் பொறுத்தது.





அதற்கு ஆதாரமாக

ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தில் ஸ்ரீ அன்னை பக்தர்களுக்குக் கூறியது "நீ ஏற்கும் பக்குவம் உடையவனாக இருந்தால் உனக்குத் தரும் மலர்களின் நான் வைக்கும் செய்தியை நீ எளிதில் கிரஹித்துக் கொள்வாய். நான் உங்களுக்கு மலர்கள் கொடுக்கும் போது, உங்களுக்கு உணர்வு நிலைகளைக் கொடுக்கிறேன். மலர்கள் அவற்றை எடுத்துவரும் சாதனங்கள். அவை பயன் தருகின்றனவா இல்லையா என்பது உங்களுடைய ஏற்கும் திறனைப்பொறுத்தது."

பக்குவம் அடைந்தவரின் மனோ நிலை:

பக்குவம் அடையாதவர்கள் அப்பொழுது தான் பறித்த மலராக இருந்த போதிலும் சிலர் கைப்பட்டதும் அது வாடி விடுகிறது. வேறு சிலர் இருக்கிறார்கள். வாடிய மலர்களுக்குக்கூட அவர்கள் புத்துயிர் ஊட்டி விடுவார்கள். இவர்கள் பக்குவம் அடைந்தவர்கள்.

வைகறை 1989-2



* அடுத்த பிரதமர்...

எம்.எல்.ஏக்களுக்குச் சம்பள உயர்வு அவசியமா?



* ...சு. பி. காரர்!

* கே. ஆர். தேவேந்திரன், வேலூர்.

? கவர்னர் மனைவி, பிரதமர் மனைவி ஆகியோர் அரசு விழாக்களில் கலந்து கொள்ளும் போது கலைஞர் மனைவி கலந்து கொண்டதை மட்டும் நீர் கண்டிப்பது என்ன நியாயம்?

! பிரதமர் மனைவி, அல்லது கவர்னர் மனைவி, அல்லது இவர்களின் பிள்ளைகள், மக்கள் தரும் வரிப் பணத்தில் மக்களுக்கு இலவச அரிசி வழங்கி விட்டு, அதை ஏதோ இவர்களே தர்மம் செய்வது போல் பிரசாரம் பண்ணி, போஸ்டர் அச்சடித்து ஒட்டினால் அதனைக் கண்டிக்கத் தயங்க மாட்டேன்.

* ஆர். எம். வி. ரவி, ஹோசூர்.

? ஆளும் கட்சியில் உள்ளவரிடம், 'இது மாதிரி தவறு நடக்குதே' என்று கேட்டால், 'ஏன், போன ஆட்சியில் கூடத்தான் இது மாதிரி நடந்தது' என முன்னுதாரணம் காட்டுகிறார்கள். இது எந்த விதத்தில் சரி?

! எவ்விதத்திலும் சரியல்ல; முற்றிலும் தவறு. ஒருவர் செய்த தவறு இன்னொருவர் அதே தவறைச் செய்ய லைசென்ஸ் வழங்கியதாக ஆகி விடாது. நல்லனவற்றை மட்டுமே முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். காந்தியைப் பின்பற்றுகிறவன் பெருமைப்படலாம். 'நான் ஹிட்லரைப் பின்பற்றுகிறேன்' என்று ஒருவன் மார்தட்டலாமா?

* கே. வி. நாதன், நெய்வேலி.

? மறைந்த கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் குறித்து...?

! மரபுக் கவிதை மன்னர். டி. கே. எஸ். சகோதரர்களுடன் நீண்ட காலத் தொடர்பு கொண்டு நாடகக் கலை, இலக்கியங்களில் பண்பட்டவர். சிவகாமியின் சபதம், நாட்டிய நாடகமாகவும் சிறப்படைய அதற்குக் கவிதை வடிவம் தந்த சொற் சிற்பி.

* போத்தனூர் புலிச் சோழன், கோவை.

? நீதிக்கு நெருக்கடி நேரக்கூடாது என்பதற்காகவே அ. இ. மு. க.வில் சேர்ந்ததாகச் சொல்கிறாரே காளிமுத்து?

! அங்கு தம் பதவிக்கு நெருக்கடி நேரக் கூடாது என்பதற்காகத் தாம் ஜெயலலிதாவை வசைபாடி எழுதிய புத்தகத்தைக் கடைகளிலிருந்து வாபஸ் பெற்றிருக்கிறார்! நல்ல நீதி! கறந்த பால் மடிக்குள் திரும்பப் புகுந்ததாகச் சொன்னால் கூட ஏற்கலாம்; ஆனால் இங்கே விஷமல்லவா புகுந்திருக்கிறது!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? எதிர்க்கட்சித் தலைவருக்கான சம்பளம் மற்றும் படிகளை வாங்க ஜெயலலிதா மறுத்திருக்கிறாரே?

! அவருக்குச் சம்பளம் தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் சட்டசபைக்கு நல்ல தொரு எதிர்க் கட்சித் தலைவர் தேவை. அந்தப் பதவியை வகிக்க அவருக்கு விருப்ப மில்லையென்றால் வேறு ஒருவரிடம் ஒப் படைப்பதே நியாயம்.

* **ஆர்.என்.செழியன், சென்னை — 41.***

? **துரை முருகன் அமைச்சர் பதவியி லிருந்து நீக்கப்பட்டால் கலைஞரின் பெருமை கூடுமா?**

! நிச்சயம். இதை மார்ச் 25க்குப் பிறகு உடனே செய்திருந்தால் அவர் பெருமை விண்ணளாவ உயர்ந்திருக்கும்!

* **தமிழ்ப்பரிதி, நெல்லிக்குப்பம்.**

? **மேற்கிந்தியத் தீவிடம் படுமோசமாகத் தோல்வியடைந்த இந்திய அணியைப் பற்றி...?**

! 'தோல்வியை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு, குற்றங் குறைகளை அலசிப் பார்த்துத் தொடர்ந்து வெற்றிகளுக்குப் பாடு படுவோம்' என்று தீர்மானித்தால் நல்லது. நமக்கும் சந்தோஷமாக இருக்கும். சால் ஜாப்புகளைக் கூறிக் கொண்டிருந்தால் எரிச்சலாக இருக்கும்.

* **டி. அனு, போடிநாயக்கனூர்.**

? **'சஞ்சய் விசார் மன்ச்'சின் தலைவி மேனகா காந்தி, இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?**

! பிராணிகளைச் சித்திரவதை செய்யக் கூடாது என்று அவற்றின் சார்பில் போராடி வருகிறார். அது குறித்தும், பிராணி கள் நலன், பாதுகாப்பு பற்றியும் கட்டுரை கள் எழுதி வருகிறார். பார்க்கப் போனால் மனிதர்கள் சார்பாகப் போராடுவதை விட, இது எவ்வளவோ மேல்!

* **பி. எஸ். வாசன், ஈரோடு.**

? **அடுத்த பிரதமர் வி. பி. சிங்கா? ராஜீவ் காந்தியா?**

! அதென்னவோ தெரியாது; ஆனால் உத்தரப் பிரதேசத்திலிருந்துதான் வரப் போவதாகக் கூறிக் கொள்கிறார்கள்!

* **ஜெ. நரசிம்மன், சென்னை — 45.**

? **இந்தியா — நேபாள உறவில் விரிசல் ஏற்பட்டிருப்பது குறித்து...?**

! இந்த விரிசலில் கடப்பாரை போடும் சீனா, தன் எல்லையில் ஃபெவிகால் தடவி ஒட்ட வைத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் புது தில்லி உணர்ந்தால் தேவ லாம்.

* **ஜி. குசேலன், சங்கராபுரம்.**

? **எம். எல். ஏக்களுக்குச் சம்பள உயர்வு அவசியம்தானா?**

! எல்லாச் சம்பள உயர்வையும்தான் விலைவாசி உயர்வு விழுங்கி ஏப்பம் விட்டு விடுகிறதே! இரு நூறு ரூபாய் அதிகம் பெறும் நம்மூர் எம்.எல்.ஏ.க்கள் எவ்வளவோ தேவலாம்! உத்தரப் பிரதேச எம்.எல்.ஏக்களின் சம்பளம், அலவன்சுடன் சேர்த்து மாதம் ரூபாய் ஆறாயிரமாம்!

* **சே. சாவித்திரி, மதுரை — 3.**

? **தக்கர் கமிஷன் அறிக்கை பற்றிப் ப. சிதம்பரம் பூசி மெழுகியது ஏன்?**

! எக்ஸ்பிரஸ் அம்பலப்படுத்திய அந்த அறிக்கை, ஆர். கே. தாவன் பற்றிப் பல ஐயப்பாடுகளை எழுப்பவே, பிரதமர் மனம் நோகாதிருக்க, 'இந்தியாவைப் பலவீனப் படுத்த ஒரு மாபெரும் சூழ்ச்சி' பற்றி அறிக்கையிலிருந்து தெரிய வருவதாக வாண வேடிக்கை காட்டி, கவனத்தைத் திசை திருப்பினார் சிதம்பரம். ஆனால் இதெல்லாம் பழைய கதை. லேட்டஸ்ட் விவகாரம், மாட்டுத் தீவன இயந்திர இறக்குமதியும், அதில் தமக்குச் சம்பந்தமே இல்லை என்று பலராமர் சாதிப்பதும்தான்!

* **ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி.**

? **தலைவிதியை நீங்கள் ஏற்கிறீர்களா?**

! நாடாளுமன்றத்தின், அரசுக் கணக்குத் தணிக்கைக் குழுத் தலைவராக அ. தி. மு. க. வைச் சேர்ந்த குழந்தைவேலுவை பலராமர் நியமித்தது விதி. உடனே விழித்துக் கொண்டு எதிர்க்கட்சி எம்.பிக்கள் கூக்குரல் எழுப்பி, நியாயத்துக்கு வழி தேடுவது மதி.



* சொற்சிற்பி



* பிராணிகள் சார்பாக...



* லேட்டஸ்ட் விவகாரம்!

* **ரூ. 20 பரிசு பெறுபவர்:**
ஆர். என். செழியன்,
92/4, தெற்கு மாட வீதி,
சென்னை — 600 041.

ஆச்சாரிய கிருபளானி நூற்றாண்டு:

ஆச்சரிய கிருபளானி!



"பீஹாரில் ஒரு கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய ஆச்சார்ய கிருபள்ானி, இயற்கையான சூழலில், மரத் தடியில்தான் வகுப்புக்களை நடத்துவார்! மாதக் கடைசியில் கையில் மீதி இருக்கும் ரூபாயை எல்லாம் எடுத்து, குலாப்ஜாமுன், ஜிலேபி என்று நிறைய இனிப்பு வகைகளாக வாங்கி எல்லாருக்கும் கொடுத்து விடுவார்! பொருளைச் சேர்த்து வைப்பதில் அவருக்கு நம்பிக்கையே கிடையாது!''

கிருபளானியை நன்கு அறிந்த சோஷலிஸ்ட், டாக்டர் எஸ். விஜயலட்சுமி அவரைப் பற்றித் தொடர்ந்து சொல்கிறார்:

''ராஜ் நாராயணனைப் பிடிக்கவே பிடிக்காது அவருக்கு. 1956—57 என்று நினைக்கிறேன். அலகாபாதில் ஒரு மாநாடு. நானும் ராஜ்நாராயணனும் அருகருகே நின்று தேநீர் அருந்திக் கொண்டிருந்தோம். அதை ஒரு புகைப்படக்காரர் படம் எடுத்து என்னிடம் கொடுத்திருந்ததைப் பார்த்து விட்டார், கிருபளானி. 'அந்தத் தடியனுடன் நீ ஏன் டீ சாப்பிட வேண்டும்? அந்தப் புகைப் படத்தைக் கிழித்தெறி முதலில்!'' என்று கடிந்து கொண்டார்!

காந்தியத்தில் ஊறியவர் அவர். 'எதற்கு உங்கள் தேவைகளை அதிகரித்துக் கொண்டே போகிறீர்கள்' என்று கேட்பார். மிகக் குறைந்தபட்சத் தேவைகளே, அவருக்கு. 'எந்த நேரத்திலும், எந்த வேலைக்கும் பிறரைச் சார்ந்திராதே. உன் வேலைகளை நீயே செய்து கொள்ளப் பழகு' என்பார். 'காந்தியவாதியாக இருக்க வேண்டுமானால், அது சிரமமானது என்பதை உணர வேண்டும்' என்பார். கடுமையான கட்டுப்பாடு, நிடசித்தம், தனக்கு எதுவும் வேண்டாது மறுத்தல், காலம் தவறாமை — இவை அவரிடம் நான் கண்ட காந்திய குணங்கள்.

'தில்லியில் நான் வெஸ்ட் கோர்ட்டில் இருந்த போது, அவர் எம்.பி.க்கள் விடுதியில் இருந்தார். அவருக்குப் பேச நிறைய விஷயங்கள் இருக்கும். நடந்து கொண்டே, சுவாரசியமாகச் சொல்லிக் கொண்டு வருவார். வாக்கிங் போகிற போது, எதிரே வேறு எம்.பி.க்கள் தென்பட்டால், வேண்டுமென்றே கிண்டலாக, ''என்னய்யா பார்க்கிறீர்? ஓர் இளம் பெண் என்னுடன் வாக்கிங் வருவது உமக்குப் பிடிக்கவில்லையோ?'' என்பார்!

''தாமே சாதம் கொண்டு வந்து தட்டில் பரிமாறுவார். டீ போட்டுக் கொண்டு வந்து கொடுப்பார்.

''அவருடைய தாக்குதல்களும், கண்டனங்களும் தரமானவை. அவற்றில் மனிதாபிமானம் இருக்கும். கருணையும், பாசமும் இருக்கும்.

நகைச்சுவை உணர்வும் அவருக்கு அதிகம். ஒருமுறை சாஸ்திரி ஹாலில், அரசைத் தாக்கிப் பேசிக் கொண்டிருந்தார். வி. கே. கிருஷ்ணமேனனின் ஜீப் ஊழல் அப்போது செய்தித்தாள்களில் அடிபட்டுக் கொண்டிருந்தது. 'இந்த அரசாங்கத்துக்குக் கொஞ்சமாவது நகைச்சுவை உணர்வு இருக்கிறதா? இருந்திருந்தால், இத்தனை கேலியும், கிண்டலுமே இந்த அரசாங்கத்தை விழுந்து நொறுங்கச் செய்திருக்க வேண்டுமே!' என்று நையாண்டி செய்தார்!''

— சாருகேசி

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

இனிய அறிமுகம்



பிரியமான சந்திப்பிற்கு 'ஆரஞ்சு க்ரீம்'. நலம் விசாரிக்கவோ 'பைனாப்பிள் க்ரீம்'. மகிழ்வைப் பகிர்ந்து கொள்ள 'சாக்லேட் க்ரீம்' தோது. களிப்பான நேரங்களுக்கு 'எலாய்ச்சி'யன்றி வேறேது! 'கஸ்டர்டு க்ரீமு'டனே அறிமுகத்தைத் தொடங்கி 'அஸ்ஸார்ட்டட் க்ரீமு'டன் இனிமையைத் தொடரலாம்.

நியூட்ரின் க்ரீம் பிஸ்கட்டுகள். உங்களின் அகமகிழ்வை அருஞ்சுவையுடன் உணர்த்திட.



nutrine BISCUITS

நியூட்ரின் க்ரீம் பிஸ்கட்டுகள்.
உவகையான காலங்களுக்கு உற்ற துணை.

REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Sri Lanka

